விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ஓங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 16 புதன்கிழமை (01.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 194

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே




## மகிந்த இன்று விசேட உரை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று முற்பகல் 10.30 மணிக்கு வீரகெட்டிய மெதமுலன இல்லத்திலிருந்து விசேட உரை ஆற்றவுள்ளார்.

இதேவேளை, மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நியமிப்பது குறித்து இன்று மெதமுலனவிற்கு சென்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தீர்மானிக்க உள்ளனர்.

இதன்படி, மாத்தறை தெவிநுவர உபுல்வன் தேவாலயத்திற்கு அருகாமை 23ஆம் பக்கம் பார்க்க....



நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று வெகு சிறப்பாக இடம்பெற்றது. நாட்டின் பல பாகங்களிலுமிருந்து பக்தர்கள் திரண்டுவந்து அன்னையின் தேர்வடம் பிடித்து நேர்த்திகளை நிறைவேற்ற, பரிவார மூர்த்திகளும் தேர் உலாவந்து அருட்காட்சி வழங்கினர்.

## சுதந்திரக் கட்சியில் எவரும் பிரதமர் வேட்பாளராக இல்லை

### தேர்தலின் பின்னரே அதுபற்றி பேச்சு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் போட்டியிடும் எநதவொரு வேட்பாளரும் பிரதமர் வேட்பாளராக பெயரிடப்பட மாட்டார்கள் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதமர் வேட்பாளர் தொடர்பல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன எந்தவொரு இணக்கப்பாட்டிற்கும் வரவில்லை என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேர்தலில் வெற்றி பெற்றால் தேர்தலின் பின்னர் நியமிக்கப்படும் உறுப்பினர்களின் கருத்துக்கு அமைவாகவே, பிரதமர் நியமிக்கப்படுவார் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் 23ஆம் பக்கம் பார்க்க....

## ஒரு செக்கனால் நேரம் அதிகரிப்பு

(கொழும்பு)

புவியின் சுழற்சி வேகம் மந்தமடைந்துள்ளதன் காரணமாக நேரத்தை ஒரு செக்கனுக்கு அதிகரிக்கும் நடவடிக்கை நேற்று நள்ளிரவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி அணு ஆற்றலால் இயங்கும் சர்வதேச நேரத்தைக் காட்டும் கடிகாரம் ஒரு செக்கன் அதி கரிக்கப்பட்டுள்ளது.

இந்த நேரம் கிறின் வீச் நேரத்துடன் ஒப்பிட்டு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்றிலிருந்து கையடக்க தொலை பேசி மற்றும் டிஜிடல் நேர கணிப் பாண்களில் இந்த மாற்றம் தானாக மேற்கொள்ளப்பட்டிருக்கும். (செ-11)

# 36 இராஜதந்திரிகள் நேற்று யாழ்.வருகை

## பலதரப்பட்டவர்களுடன் நேரில் சந்திப்பு

(கொழும்பு)

யாழின் தற்போதைய நிலைவரங்கள் மற்றும் மக்களின் இன ஐக்கியம் தொடர்பில் நேரில் அறிந்து கொள்வதற்காக வெளிநாடுகளுக்கான இலங்கை தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் அடங்கிய 36 பேர் கொண்ட குழுவினர் நேற்றையதினம் யாழ்.மாவட்டத்துக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர். (23ஆம் பக்கம் பார்க்க)



## தேர்தல் சட்டங்களை மீறினால் தண்டனை

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறினால கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய நேற்று அறிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படும் 23ஆம் பக்கம் பார்க்க....

## பாடசாலை அதிபர்களுக்கு அதிரடி இடமாற்றம்

### வடக்கு கல்வி அமைச்சு வழங்கியது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள 75 பாடசாலை அதிபர்களுக்கு அதிரடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இன்று முதலாந் திகதி செயற்படும வண்ணம் வடக்கு மாகாண கல்வி அமைச்சு இந்த இடமாற்றத்தை வழங்கியுள் 23ஆம் பக்கம் பார்க்க....

## இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து தேசிய கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

### சம்பந்தன் கேள்வி

(கொழும்பு)

இனப்பிரச்சினைககான அரசியல் தீர்வு தொடர்பிலான தமது நிலைப்பாட்டை நாட்டின் தேசியக் கட்சிகள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளிப்படுத்த வேணடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை 24ஆம் பக்கம் பார்க்க....

## பொதுத்தேர்தலில் யாழிலிருந்து தெரிவாகும் எம்.பிக்களின் எண்ணிக்கை 2 ஆல் குறைப்பு

### 9 இலிருந்து 7 ஆக மாற்றம்

(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றங்கள் இல்லாவிட்டாலும் மூன்று மாவட்டங்களிலிருந்து இம்முறை தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் மொத்தமுள்ள 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து 196 பேரும், தேசியபட்டியல் வழியாக 29 பேரும் என மொத்தமாக 225 உறுப்பினர்கள் இந்த தேர்தலில் தெரிவு செய்யப்படுவார்கள்.

தேர்தல் மாவட்டரீதியாக தெரிவாகும் உறுப்பினர்கள் அதற்கான வேட்பாளர் பட்டியலில் இடம்பெற வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை தொடர்பான விவரங்கள் நேற்று தேர்தல்கள் செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இறுதியாக 2010-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுடன் ஒப்பிடும போது யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் இரண்டு குறைந்துள்ளது.

அதன்படி 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவான உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒன்பதாக இருந்தது. இம்முறை தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 7 ஆக குறைந்துள்ளது.

இதற்கு மாறாக, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் தலா ஒரு உறுப்பினர் என்கிற ரீதியில் அதிகரிக்கப்பட்டுள்ளது. 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறாது நெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல்போனோர் விபரங்கள் செப்டெம்பரில் வெளியிடப்படும்

## – அரசாங்கம்

(கொழும்பு)

இறுதிக்கட்டப் போரின்போது காணாமல் போனவர்கள் மற்றும் இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் தொடர்பிலான விவரங்களை இலங்கை அரசு இரண்டு மாதங்களில் ஐநாவிடம் தெரிவிக்கும் என இலங்கையின் வெளியுறவுத்துறை பிரதி அமைச்சர் கூறியுள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான விவாதங்கள் நடைபெறவுள்ளன.

அப்போது அரசதரப்பில் அளிக்கப்படவுள்ள விளக்கங்களில் இவை இடம்பெறும் என பிரதி அமைச்சர் அஜித் பெரேரா உறுதிப்படுத்தினார்.

அரசு அந்தப் பிரச்சினையை உணர்ந்துள்ளது, அதை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என விரும்புகிறது என்றாலும் பல சிக்கல்கள் உள்ளதாலேயே அந்தத் தகவல்களை உடனடியாக அரசால் வெளியிட முடியாமல் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்

காணாமல்போனவர்கள் மற்றும் இராணுவத்திடம் சரணடைந்தவர்களின் உறவினர்களின் எதிர்பார்ப்பு மற்றும் ஏக்கங்கள் நியாயமானவையே என்பதை இலங்கை அரசு முற்றாக அறிந்துள்ளது என்றும்,

இறுதிப்போரில் சரணடைந்தவர்கள் குறித்து மாறுபட்டத் தகவல்களும் உள்ளன என்று கூறும் பிரதி அமைச்சர் அஜித் பெரேரா,

எதிர்வரும் செப்டம்பர் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான விவாதத்தின்போது அரசு சில தகவல்களை வெளியிடும் என்றார்.

இது தொடர்பிலான விபரங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் உள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

தற்போது இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் 250க்கும் குறைவான முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களே உள்ளனர் என்றும், அந்தப்பட்டியல் நீதி அமைச்சகத்திடம் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (செ-11)


## காணி விற்பனைக்கு

யாழ்.வட்டுக்கோட்டையில் அரச தள
வைத்தியசாலைக்கு அண்மையில்
பஸ் போக்குவரத்து பிரதான வீதியிலிருந்து
3ஆவது காணியாக அமைந்த 9.36 பரப்பு
நல்ல குடியிருப்பு காணி விற்பனைக்கு உண்டு.

முழு காணியின் விலை 18 இலட்சம்

தொடர்புகளுக்கு:- 077 3686 142

(986)


# மகிந்தவின் மீள் பிரவேசத்தால் அச்சமடையத் தேவையில்லை

## அத்துரலிய ரத்ன தேரர் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் அரசியல் பிரவேசம் குறித்து அச்சமடைய வேண்டிய அவசியமில்லை என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சிரேஸ்ட உறுப்பினரும், சிறந்த நாளைக்கான தேசிய பேரவையின் தலைவருமான அத்துரலிய ரத்ன தேரர் தெரி வித்துள்ளார். பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி போட்டியிட்டால் அது பிரச்சினையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எந்த கட்சியில் மஹிந்த போட்டியிடுகின்றார் என்பதே தமது பிரச்சினை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

போதைப் பொருள் கடத்தல்காரர்கள், எதனோல் கடத்தல்காரர்கள், பாலியல் வன்கொடுமையாளர்களுடன் தொடர்புகளைப் பேணிய அரசியல்வாதிகளுடன் கூட்டணி வைத்துக்கொள்ளப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுடன் ஜனாதிபதி மைத்திரி தொடர்புகளைப் பேணினால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது வீழ்ச்சிக்கு காரணமான ஊழல் அரசியல்வாதிகளுடன் தொடர்ந்தும் மகிந்த இணைந்து செயற்பட விரும்பினால் எங்களுக்கு அதில் பிரச்சினையில்லை என தேரர் மேலும் தெரிவித்துள்ளார். -(செ-11)

## தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி வரணி

## மேசன், கூலியாட்களுக்கான கூறுவிலை கோரல்

எமது நிறுவனத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தொழில் முயற்சிக்காக ஒரு புதிய கட்டிடத்தினையும் அத்தோடு மலசலகூடம், சுற்றுமதில் என்பவற்றை வரைபடத்தில் குறிப்பிட்டது போன்று அதேஅளவுகளில் கட்டிக் கொள்வதற்காக ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக, பகுதிபகுதியாக மேசன், கூலியாட்களுக்கான கூறுவிலையினையும் கட்டி முடிப்பதற்கான கால அவகாசத்தையும் (மூலப்பொருட்கள் எம்மால் வழங்கப்படும்) குறிப்பிட்டு தலைவர், தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி வரணி என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். ஒப்பந்தகாரரை தெரிவு செய்வது நிர்வாக சபை உறுப்பினரின் முடிவாகும். தெரிவு செய்யப்பட்டவருக்கு மட்டும் எம்மால் அறிவித்தல் வழங்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதி 15.07.2015 ஆகும். வரைபடத்தினை பார்க்க அலுவலக நாட்களில் காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 மணிவரை பார்வையிடலாம். (சனி, ஞாயிறு தவிர்ந்த)

இவ்வண்ணம்
கௌரவ சேவையிலுள்ள,
க்.துரைசிங்கம்
தலைவர்

(C-1456)

26.06.2015

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை சுரேஸ்கரன்



குடமியன் வரணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சுரேஸ்கரன் 29.06.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் (அமரர்) செல்லத்துரை-கனகம்மாவின் அன்பு மகனும், பாஸ்கரன் (லண்டன்), ரமேஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரண்யாவின் அன்பு மைத்துனனும், சுபேதனின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.07.2015) புதன்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக குடமியன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-1445)

தோற்றம் 19.07.1982 மறைவு 29.06.2015

தகவல்: குடமியன் வரணி குடும்பத்தினர்

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව
## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
## CHUNNAKAM

My No : Np /14/41(15)/01/Tender/2015 Date: 01.07.2015

## விலைக்கேள்விக்கான கோருதல்

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம், யாழ்ப்பாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை திறந்த போட்டி கேள்வி கோரல நடைமுறைக்கு அமைவாக கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

02. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர், கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

03. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். (தொலைபேசி: 0212240017, மின்னஞ்சல் vspsch@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை 02.07.2015ம் திகதி தொடக்கம் 16.07.2015ம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

04. ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்களினால் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி படிவத்தினை தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி: 0213202277, மின்னஞ்சல் chairmanvsps@gmail.com web:- vsps.lk) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச்சமர்ப்பித்து 02.07.2015 முதல் 16.07.2015 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

05. விலைக்கேள்விகள் 17.07.2015ம் திகதியன்று 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகியவற்றை பூரணப்படுத்தி தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு உரிய காலத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி விபரத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும் நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் 17.07.2015 ஆம் திகதியன்று 2.00 மணிக்கு விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

06. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 09.07.2015 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்.

07. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். குறித்த தொகை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு(ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | விவசாய வீதி திருத்தம் - ஏழாலை | 5.703 | 03 மாதம் | M7/C8 | 57,000.00 |
| 2 | மய்யான வீதி திருத்தம் - சுன்னாகம் | 1.132 | 03 மாதம் | M7/C8 | 11,500.00 |
| 3 | வரியப்புலம் வீதி – சுன்னாகம் | 0.911 | 03 மாதம் | M7/C8 | 9,500.00 |
| 4 | முருகமூர்த்தி வீதி – உடுவில் | 2.284 | 03 மாதம் | M7/C8 | 23,000.00 |
| 5 | கலையம்மன் வீதி - ஏழாலை | 1.081 | 03 மாதம் | M7/C8 | 11,000.00 |
| 6 | வாதனை வீதி – உடுவில் | 2.276 | 03 மாதம் | M7/C8 | 23,000.00 |
| 7 | தில்லைகட்டி வீதி - சுன்னாகம் | 1.921 | 03 மாதம் | M7/C8 | 19,500.00 |
| 8 | அம்பலவாணர் வீதி – உடுவில் | 1.000 | 03 மாதம் | M7/C8 | 10,000.00 |

தி.பிரகாஷ்,
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(சி-1455)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காபந்து அரசில் அமைச்சர்களின் பதவி நிலைகள் தொடரும்

## நீதியமைச்சர் விளக்கம்

**எதிர்வரும் பொதுத்தேர்தல் நிறைவடைந்து புதிய அமைச்சர்கள் பதவியேற்கும் வரை தற்போதைய அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் பதவிகள் நடைமுறையில் இருக்கும் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின்படி, பொதுத் தேர்தலின் முன்னர் காபந்து அரசாங்கத்தின் அமைச்சரவை அமைச்சர்கள் மாத்திரமே செயற்பட முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் 19 ஆவது திருத்தம், பொதுத்தேர்தல் முடிவடைந்ததன் பின்னரே நடைமுறைக்கு வரும் என்பதால் அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் பதவிகள் இந்த பொதுத் தேர்தலின் போது இரத்துச் செய்யப்படாது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கருத்துரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முகாமையாளர் பேரவை JMF இன் ஏற்பாட்டில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு **தேச வழமைச் சட்டம்** எனும் தலைப்பில் நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் கருத்துரை வழங்கப்படவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கலாநிதி கமலா நாகேந்திர உரையாற்றவுள்ளார். (இ-3)


# திண்மக் கழிவகற்றல் தரம் பிரித்தல் தொடர்பான வேண்டுகோள்




திண்மக்கழிவகற்றல் தொடர்பாக ஏற்பட்டுள்ள
**அசௌகரியங்களை**
நிவர்த்தி செய்யும் முகமாக மாநகர சபை எல்லைக்குட்பட்ட
வரியிறுப்பாளர் அனைவரும்
**இன்று முதல்**
தமது நாளாந்தக் கழிவுகளை **தரம் பிரித்து வழங்கி**
இச்செயற்திட்டத்திற்கு ஒத்துழைக்குமாறு
கேட்டுக்கொள்கின்றோம்.

**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்.**


## ராசி பலன்

01.07.2015
(ஆனி 16, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
சதுர்த்தசி முன்னிரவு 9.35 மணிவரை
மூலம் பின்னிரவு 4.30 மணிவரை
இராகுகாலம் 11.56-1.26 மணிவரை
சுபநேரம் 4.26-5.56 மணிவரை
பூரணை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | சூரி செவ் புதன் |
| | | | குரு சுக் |
| | | | |
| | சந் | சனி | ராகு |

**மேடம்** – தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், சேமிப்புகளை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** – வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களால் அலைச்சல்கள், சோர்வுஏற்படும், தேகநலனில் கவனம் தேவை.

**மிதுனம்** – விருந்தினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**கடகம்** – சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகுவர், கடனை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**சிம்மம்** – எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** – குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடப்பர், வாகன பழுதுச் செலவுகள் குறையும், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**துலாம்** – பாராட்டும் புகழும் கூடும் நாள், பழைய பாக்கிகள் திடீரென வசூலாகலாம், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள், இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்** – வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், திடீர்ப் பயணங்கள் திகைக்க வைக்கும், வீட்டுத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு** – விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**மகரம்** – குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, சுப விரயங்கள் கூடும் நாள், தொழில் நன்மையுண்டு, சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**கும்பம்** – குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், சமயோசிதப் புத்தியால் பலரையும் கவர்வீர்கள், தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** – தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், நம்பிக்கைகள் நடைபெறலாம், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1068 பக்கங்களில் என்ன இருக்கிறது?

...17 கட்டடங்களின் தன்மைகளும் வேறானவை. அதில் பயன்படுத்தப்பட்டுள்ள பொருள்களின் தரம் வேறு வேறானவை. அதில் இடம்பெற்றுள்ள வேலைப்பாடுகளின் கலைநயம் வித்தியாசமானவை. அவற்றைக் கருத்தில் கொள்ளாமல் அனைத்துக்கும் ஒரே தொகையை நிர்ணயித்து கணக்கிட்டது நேர்மையற்ற கணக்கீடு.

இன்னும் சொல்லப்போனால், ஜெயலலிதா தரப்பு சிறப்பு நீதிமன்றத்தில் எழுத்துப்பூர்வமாக அளித்த சாட்சியத்தில், தங்களின் கட்டட மதிப்பு ரூ.8 கோடியே 60 இலட்சம் என்று வாக்குமூலம் அளித்துள்ளனர். ஆனால், குற்றவாளிகள் சொன்ன மதிப்புக்கும் குறைவாக நீதிபதி குமாரசாமி மதிப்பிட்டது முறையற்றது.



குன்ஹா



குமாரசாமி



**சுதாகரன் திருமணச் செலவுகள்**

ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் சுதாகரன் திருமணச் செலவாக அரசுத் தரப்பு கணக்கிட்ட தொகை 6 கோடி ரூபாய். ஆனால், சிறப்பு நீதிமன்றம் மூன்று கோடி ரூபாயை மட்டும் சுதாகரன் திருமணச் செலவாக எடுத்துக்கொண்டது.

நீதிபதி குமாரசாமி, வெறும் 28 இலட்சம் ரூபாயை மட்டும் திருமணச் செலவாகக் காட்டுகிறார்.

ஜெயலலிதா வருமானவரித் துறைக்கு அளித்த விவரங்களின் அடிப்படையில் இதை எடுத்துக்கொண்டதாக அவர் குறிப்பிடுகிறார். ஆனால், ஜெயலலிதா சிறப்பு நீதிமன்றத்தில் எழுத்துப்பூர்வமாக அளித்த வாக்குமூலத்திலேயே, "சுதாகரன் திருமணத்துக்கு தன்னுடைய செலவு 29 இலட்சத்து 92 ஆயிரத்து 761 ரூபாய்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அவர் சொன்ன வாக்குமூலத்தைக்கூட ஏற்காமல், அதையும்விட குறைவானத் தொகையைக் கணக்கிட்டு குற்றவாளிகளை விடுதலை செய்தது தவறான சட்ட நடைமுறை.


**கடன் மூலம் வந்த வருமானங்கள்**

மிக மிக முக்கியமான பகுதி இது.

தேசிய வங்கிகளில் வாங்கிய கடன்களின் மூலம் அவர்களுக்கு 27 கோடியே 17 இலட்சத்து 31 ஆயிரத்து 271 ரூபாயை கணக்கில் எடுத்துக்கொண்டு, அதில் இருந்து லஞ்ச ஒழிப்புத் துறை கணக்கிட்டு வைத்திருந்த தொகை 5 கோடியே 99 லட்சம் ரூபாயை கழித்துவிட்டு, 18 கோடியே 17 லட்சத்து 46 ஆயிரம் ரூபாயை கடன்மூலம் வந்த வருமானமாகக் காட்டியுள்ளார்.

உயர் நீதிமன்ற நீதிபதியின் கருத்துப்படி, 10 தேசிய வங்கிகளில் இவர்கள் வாங்கிய கடன் தொகையைக் கணககிட்டால், 10 கோடியே 67 இலட்சத்து 31 ஆயிரத்து 271 ரூபாய மட்டுமே வருகிறது.

இந்தத் தொகை சிறப்பு நீதிமன்ற நீதிபதிசொன்னதொகையோ அல்லது அரசுத் தரப்பு சொன்ன தொகையோ அல்ல. நீதிபதி குமாரசாமி போட்டுக் காட்டி உள்ள அட்டவணைப்படி கணக்கிட்டாலே 10 கோடிதான் வருகிறது.



சசிகலா



இளவரசி



சுதாகரன்

அப்படி இருக்கும்போது, அவர் 27 கோடி என்று கணக்கிட்டுள்ளார்.

இந்தப் பிழையைச் சரி செய்தால், மொத்தக் கணக்கீட்டில் அடியோடு மாற்றம் வருகிறது.

அதாவது கடன்மூலம் குற்றவாளிகளுக்கு வந்த வருமானம் வெறும் 4 கோடியே 67 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மட்டுமே என்று தெளிவுபடுகிறது.

இதன்படி கணக்கிட்டால், குற்றவாளிகளின் முறையற்ற வருமானம் 76.7 சதவிகிதம் என்றாகிறது. அப்படி ஆகும்போது, ஜெயலலிதாவிடமிருந்த வருமானத்துக்கு அதிகமான சொத்து மதிப்பு வெறும் 8.12 சதவிகிதம் என்பது தவறாகி, அவரை நீதிபதி குமாரசாமி விடுதலை செய்ததும் தவறாகிவிடுகிறது.

குற்றவாளிகள் தேசிய வங்கியில் வாங்கிய கடன்களை ஏற்கனவே சேர்த்துக் கணக்கிட்டுத்தான் அரசுத் தரப்பு அவர்களுக்கு கடன்மூலம் வந்த வருமானம் என்று 5 கோடியே 99 இலட்சம் என்று காட்டி உள்ளனர்.

ஆனால், நீதிபதி குமாரசாமி அதைப் புரிந்துகொள்ளாமல் இரண்டுமுறை இந்தத் தொகையை கணக்கில் சேர்த்துள்ளார். இந்தத தவறைச் சரி செய்தால், குற்றவாளிகள் வருமானத்துக்கு அதிகமாக சேர்த்த சொத்தின் மதிப்பு 126.19 சதவிகிதமாக வரும்.

இப்படி எந்தக் கணக்கின்படி பார்த்தாலும் குற்றவாளிகளை அக்னிஹோத்ரி வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் விடுதலை செய்ய முடியாது.

கடன் மூலம் பெற்ற வருமானங்களைக் கணக்கிட்டதில் ஒட்டுமொத்தமாக நீதிபதி குமாரசாமி தவறிழைத்து, அந்தத் தவறையே சரியெனக் காட்டி குற்றவாளிகளை விடுதலை செய்துள்ளார்.

இந்த ஒரு காரணத்தை வைத்தே, குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட்ட விடுதலையை ரத்து செய்யலாம். அதற்கு இதுவே போதுமானது. அப்போதுதான் நீதி கேலிக்குரியதாக மாற்றப்பட்டுள்ள நிலையில் இருந்து மீண்டு வரும்.



**திராட்சைத் தோட்ட வருமானம்**

ஜெயலலிதாவுக்கு திராட்சைத் தோட்டத்திலிருந்து வந்த வருமானமாக அரசுத் தரப்பு 5 இலட்சத்து 78 ஆயிரத்து 340 ரூபாய் என்று கணக்கிட்டது. ஆனால், ஜெயலலிதா தரப்பு தங்களுக்கு திராட்சைத் தோட்டத்திலிருந்து 52 இலட்சத்து 50 ஆயிரம் வருமானம் வந்ததாக சொன்னார்கள்.

இரு தரப்பின் வாதங்கள், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள், தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் மற்றும் விவசாய அதிகாரிகள் கணக்கிட்ட மதிப்பீடுகளை தீர ஆராய்ந்த சிறப்பு நீதிமன்ற நீதிபதி, திராட்சைத் தோட்டத்திலிருந்து ஜெயலலிதாவுக்குக் கிடைத்த வருமானம் 10 இலட்ச ரூபாய் எனக் கணக்கில் எடுத்துக் கொண்டார்.

ஆனால், உயர்நீதிமன்ற நீதிபதி இவற்றில் எதையும் கருத்தில்கொள்ளாமல், காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்ட ஜெயலலிதாவின் வருமானவரிக் கணக்கை மட்டும் கருத்தில் கொண்டு 46 இலட்சத்து 70 ஆயிரத்து 600 ரூபாய், ஜெயலலிதாவுக்கு திராட்சைத் தோட்டத்திலிருந்து வருமானம் வந்ததாகக் கணக்கிட்டுள்ளார்.

**-ஜூனியர் விகடன்-** (தொடரும்)

## அதிசய உலகம்

**தவறுதலாக அனுப்பிய மின்னஞ்சலை மீளப்பெற புதிய வசதி**

மின்னஞ்சல் என்பது மனித வாழ்வில் இன்றியமையாததாக மாறிவிட்டது. இவ்வாறான மின்னஞ்சல் சேவையை வழங்குவதில் கூகுள் நிறுவனத்தின் ஜிமெயில் முதல்வனாக விளங்குகின்றது.

இந் நிறுவனமானது காலத்திற்கு காலம் பயனர்களின் தேவைகள் கருதி பல புதிய வசதிகளை வழங்கி வருகின்றது.




இந்நிலையில் தற்போது தவறு தலான நபருக்கு அனுப்பிய மின்ன ஞ்சலை மீளப்பெற்றுக் கொள்ளும் வசதியை அறிமுகம் செய்துள்ளது.

இவ்வாறானதொருவசதியினை வழங்குவதற்கு கடந்த காலத்திலிருந்தே பரிசீலித்து வந்த கூகுள் நிறுவனம் Undo Send எனும் குறித்த வசதியினை பயனர்களுக்காக வழங்கியுள்ளதாக கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

## சமைப்போம் சுவைப்போம்

### சிக்கின் மசாலா



**தே.பொருட்கள்:**

கோழிக்கறி - 1 கிலோ
பெரிய வெங்காயம் -கால் கிலோ
தக்காளி - 4, இஞ்சி சிறுதுண்டு
பூண்டு - 15 பல், எண்ணெய் அரை கப்
மல்லி தூள், மிளகாய் தூள், சிக்கன் மசாலா - 2ஸ்பூன்
மிளகு தூள் - 1 ஸ்பூன், மஞ்சள்தூள் - கால் ஸ்பூன், தாளிக்க- ஏலக்காய் - 3, சோம்பு, கிராம்பு பட்டை, சிறு துண்டு உப்பு- தேவையான அளவு

**செய்முறை:**

கோழியை நன்கு சுத்தம் செய்து பெரிய துண்டுகளாக நறுக்கிக் கொள்ள வேண்டும். வெங்காயம், தக்காளியைக் கழுவி நறுக்கிக் கொள்ள வேண்டும். இஞ்சி பூண்டினைத் தோலுரித்து அரைக்க வேண்டும் . ஒரு பாத்திரத்தில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் , கிராம்பு பட்டை, சோம்பு போட்டு தாளித்து நறுக்கின வெங்காயத்தை அதில் போட்டு வதக்க வேண்டும். அதனுடன் அரைத்த இஞ்சி பூண்டு சேர்த்து வதக்கவும் நன்கு வதங்கியவுடன் மசாலா தூள் அனைத்தையும் போட்டு வதக்கி நறுக்கிய தக்காளி சேர்த்து வதக்கி அதனுடன் சிக்கன் உப்பு சேர்த்து நன்கு கிளரி 3 டம்ளர் தண்ணீர் விட்டுமிதமான தீயில் நன்கு வேகவிட வேண்டும். கோழி நன்கு வெந்து மிருதுவானவுடன் இறக்கி பரிமாற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி நவக்கிரி விளாத்திய டியில் 14 பரப்பு கல்லுக்காணி உடன டியாக விற்பனைக்கு உண்டு. தரகர்களும் தொடர்பு கொள்ள லாம்.

தொடர்புகளுக்கு:077 614 3278
(986) 077 080 4473

## வேலையாட்கள் தேவை

லைடன் புடைவை நிலையத் திறகு 3 வேலையாட்கள்தேவை. பழக விரும்புவர்களும் விரும்பத்தக்கது. (பெண் பிள்ளைகள்) கவர்ச்சிகர மான சம்பளம் வழங்கப்படும்.

லைடன் புடைவை நிலையம்,
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


# மதுபோதையில் சாரதி 15,000 ரூபா தண்டம்

(கரணவாய்)

பருத்தித்துறை பகுதியில் மகேந்திரா வாகனம் ஒன்றை மறித்த போது நிறுத்தாது சென்றதனால் பொலிஸார் அவ்வாகனத்தை துரத்திப் பிடித்தனர். பிரஸ்தாப வாகன சாரதி நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, அபாயகரமான முறையில் வாகனம் செலுத்தியமை, பொலிஸாரின் உத்தரவுக்கு மாறாக வாகனத்தை நிறுத்தாமல் ஓடியமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்களும் பொலிஸாரால் சுமத்தப்பட்டுள்ளன.

இக்குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் சந்தேக நபருக்கு எதிராக 15 ஆயிரம் ரூபா குற்றப் பணத்தை அறவிடுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை கடந்த மேமாதம் மது போதையில் வாகனம் செலுத்திய 15 பேருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் ஒரு இலட்சத்து 44 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளது. (இ-3-60)


## பயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=
(336)

தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்

## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 13<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: B/861 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 44<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/1538 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 30 செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: B.COM/ அரச தொழில்<br>தொ.இ: B/866 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 32<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: G/1543 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 20<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BBA, MBA லண்டன் NOT PR<br>தொ.இ: B/858 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 123 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BA/ ஆசிரியர்<br>தொ.இ: G/1547 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தாடம்<br>கி.பா: 17 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் BSC/ பொறியியலாளர்<br>தொ.இ: B/859 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 23<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1549 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில் இன்று பதினொறாம் திருவிழா



### அருளினைப் பொழிவாய் முருகா!

இணுவை மண்ணிலே உறையும் எம் குகனே
பக்தியுடன் நாம் வாழ என்றும் வரம் தா
நொச்சியிலே தோன்றி அற்புதங்கள் பல புரிபவா
எம் உச்சி குளிர அருளினைப் பொலிவர்
உன் முன் வைப்பவைகளுக்கு உடன் தீர்ப்பளிப்பவனே
எம்முன் நீ திரிவுலாவுகையில் கண்கள் கனிக்குமைய்யா
சித்தம் குளிருதடா எம் இனிய சண்முகனே
நித்தம் உன் திருவழகினை வியந்து பார்த்தே
கத்தும் மயிலோசை கணீர் என்னும் மணிச்சத்தம்
எத்திசையில் நின்றாலும் எமக்குள் கந்தனை சேர்க்கும்
வல்ல பைரவர் வெள்ளை ஆச்சியையும் அருகே கொண்டாய்
நல்ல திருவருள் நாம் பெற சேர்ந்து அருள்வாய் முருகா!

ஆக்கம் : இணுவை ஜெகலோஜினி
பதினொறாம் திருவிழா உபயகாரர்

(சி-1389)


## சின்னம்சூட்டல்

நீர்வேலி சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை மாணவர்களுக்கான சின்னஞ்சூட்டும் விழா நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் ப.சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். வலய கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி பிரதம விருந்தினரர்கக் கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினராக சிறுப்பிட்டி மேற்கு கிராமசேவையாளர் செ.தி.வரதராஜன் கலந்துகொள்ளவுள்ளார். (இ-3)


# சேவைநலன் பாராட்டு-01.07.2015

யா/கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியரும் யாழ் கல்வி வலய தொழில் வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரிய ஆலோசகருமாகிய
**திரு.துரையப்பா தர்மானந்தசிவம்**
BA(Hons),Dip in Ed, M Ed (SLTS1)

கல்வி
ஆரம்ப,இடைநிலைக்கல்வி:-இந்துக்கல்லூரி D7கிளிநொச்சி
உயர்தரக் கல்வி:- யா/மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை
பட்டப்படிப்பு:-பேராதனைப் பல்கலைக்கழகம்
பட்டப்பின் கல்வி டிப்ளோமா:-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
முதுகல்விமாணி:-யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



| | |
|---|---|
| கொ/கொழும்பு விவேகானந்தாக்கல்லூரி ஆசிரியர் | 26.04.1984-14.08.1989 |
| கி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி ஆசிரியர் | 15.08.1989-31.12.1994 |
| யா/கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் | 01.01.1995-31.12.1995 |
| கி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி ஆசிரியர் | 01.01.1996-15.01.1997 |
| வ/வவுனியா இந்துக்கல்லூரி ஆசிரியர் | 27.01.1997-05.02.1997 |
| வ/வவுனியா தமிழ் ம.ம.வி. ஆசிரியர் | 06.02.1997-15.07.1998 |
| வவுனியா தெற்கு கல்வி வலயம் ஆசிரிய ஆலோசகர் சமூகக்கல்வி | 16.07.1998-31.12.2008 |
| யா/கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் | 01.01.2008-05.10.2011 |
| யாழ்ப்பாண கல்வி வலயம் ஆசிரிய ஆலோசகர் தொழில் வழிகாட்டலும் ஆலோசனையும் | 06.10.2011-30.06.2015 |

### சமூக நலன் விரும்பும்-தர்மானந்தசிவம்

திரு.து.தர்மானந்தசிவம் ஆசிரியர் அவர்கள் எமது கல்லூரியின் சிறந்த ஆசிரியர்களில் ஒருவர்.அவர் குடியுரிமைக் கல்வி,புவியியல் போன்ற பாடங்களை க.பொ.த.(சா/த) வகுப்புக்களிற்கும் அரசியல் விஞ்ஞான பாடத்தை க.பொ.த.(உ/த) வகுப்புக்களிற்கும் செவ்வனே போதித்தார்.தான் செல்லும் வகுப்பறை மாணவர்களின் முழு விபரத்தினையும் அறிந்து மாணவர்க்குத் தேவைப்படும் உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதில் வல்லவராக மாணவர்களின் நலனில் அக்கறை உடையவராகத் திகழ்ந்தார். எமது கல்லூரியின் ஆலோசனையும் வழிகாட்டலும் ஆசிரியராகப் பொறுப்பை ஏற்று மாணவர்களின் ஆலோசகராகவும் அவர்களின் தொழில் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். எமது கல்லூரியில் காலாண்டு சஞ்சிகையாக வெளிவரும் "நித்திலம்" சஞ்சிகையை திறம்பட வெளியிட்டு தனது ஆளுமையை வெளிக்காட்டினார்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் தொழில்வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரிய ஆலோசகராக கடமை ஏற்று தனது சேவையை யாழ்.கல்வி வலயத்திற்கு விரிவுபடுத்தினார். எமது கல்லூரியின் ஆசிரியர் கழகத்தின் தலைவராக செயற்பட்டு ஆசிரியர்களின் நலன்களில் தனது சிறந்த பங்களிப்பை வழங்கினார்.தான் பிறந்த மண்ணாகிய கிளிநொச்சி உருத்திரபுரத்தில் பொது நிறுவனங்களில் தலைமைப் பொறுப்புக்களையும் நிர்வாகக் கடமைகளையும் ஏற்று சிறந்த சமூக சேவையாளனாகத் திகழ்ந்த அவர் இன்று ஆசிரிய ஆலோசகர் பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார். அவரது ஓய்வுக்காலம் சிறப்பானதாகவும் மகிழ்ச்சியானதாகவும் அமையவும் அவரது சமூக நலப்பணிகள் தொடரவும் மனமாற வாழ்த்துகிறேன்.

வே .ஞானகாந்தன் அதிபர் கொக்குவில் இந்துக்கல்லூரி.

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக் கழகம் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். பிரபல விஞ்ஞான ஆசிரியர் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேலின் மணிவிழா கடந்த 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெற்றது. பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விழா நாயகரும் அவரது துணைவியாரும் நீராவியடிப் பிள்ளையார் கோவிலில் இருந்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த சுவாமிகள், யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் யாக்கிரத சைதன்ய சுவாமிகள் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர். இதில் முன்னாள் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# படையினரை வெளியேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## முன்னாள் எம்.பி.சந்திரகுமார் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் படையினரிடமிருந்து விடுவிக்கப்பட்டு மக்களை மீள்குடியமர்விற்கு அனுமதித்த 1013 (ஆயிரத்து பதின்மூன்று) ஏக்கர் காணிகளிலிருந்தும் இதுவரை படையினர் முற்றாக வெளியேறவில்லை. படையினருக்கு கட்டளை பிறப்பிக்கும் அதிகாரமுடைய அரசாங்கம் ஏன் தமது ஆளுமையை இதுவரை பயன்படுத்தவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று முனதினம் நடைபெற்ற மீள்குடியேற்றம் தொடர்பான கலந்துரையாடலல் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு படையினரை வெளியேற்று வதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டு வருவதாகவும் அது தொடர்பாக ஜனாதிபதி பிரதமர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளதாகவும் ஆனாலும் படையினரை வெளியேற்ற முடியாதுள்ளதாகவும் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்த கருத்திற்கு பதிலளித்து உரையாற்றும்போதே முனனாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் இணைந்து மக்களை உத்தியோக பூர்வமாக மீள்குடியேற்றிய காணிகளிலிருந்து இதுவரை படையினர் வெளியேறவில்லை என்பது ஆச்சரியத்திற்குரிய விடயமே. ஏனெனில் படையினருக்கு கட்டளை பிறப்பிக்கின்ற அதிகாரம் அரசாங்கத்திற்கு உண்டு. எனினும் கட்டளையிட்டும் படையினர் ஏற்கவில்லை என்பது ஆச்சரியத்தை அளிக்கின்றது.

ஆனால் கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் தான் 59 படைமுகாம்கள் அகற்றப்பட்டதாகவும் இன்றைய ஆட்சியில் படைமுகாம்கள் எவையும் அகற்றப்படவில்லை எனவும் இன்றுள்ள 'அமைச்சர்களே குறிப்பிடுகின்றனர். எனவே அரசாங்கம் தமது முழு ஆளுமையையும் பிரயோகித்து எமது மக்களின் நிலங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேணடும் என குறிப்பிட்ட அவர்,

மீள்குடியேறி வரும் மக்களுக்கான உலருணவுக்கொடுபனவுகள் அவர்களுக்கான தற்காலிக வீடுகளை வழங்குதல் மற்றும் அவர்களின் சுகாதார நலன்களை கருத்தில் கொண்டு தரமான மலசல கூடங்களை அமைத்துக் கொடுத்தல் தொடர்ந்து அம்மக்களுக்கு நிரந்தர வீட்டுத்திட்டங்களை வழங்குதல் போன்ற விடயங்களிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டதோடு மீள்குடியேறிய மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரம் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலை யில் அதனை மீளவும் இலவச மாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இக்கலந்துரையாடலில் மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் வேதநாயகன் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள், இவர்களுடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன் அ.விநாயகமூர்த்தி மற்றும் வடக்கு மாகாணசபையின் அமைச்சர்கள், உறுப்பினர்கள், படை அதிகாரிகள் ஏனப்பலர் கலந்துகொண்டனர்

இதேவேளை இக்கலந்துரையாடலுக்கு முன்னதாக மீள்குடியேற்ற அமைச்சர் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கிய குழுவினர் வலி.வடக்கில் மீள்குடியேற்றத்திற்கு அனுமதித்த பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டு அங்கு படையினர் தொடர்ந்தும் நிலைகொண்டிருப்பதை உறுதிப் படுத்திக்கொண்டனர். (இ-7)

## பேரிச்சம்பழம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் 136 பேருக்கு நேற்று முன்தினம் பேரிச்சம் பழங்கள் வழங்கப்பட்டன.

மேற்படி பேரிச்சம்பழங்கள் யாழ்.முஸ்லிம் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் கே.எம்.நிலாம் மற்றும் செயலாளர் எஸ்.கே.சுவர்கஹான் ஆகியோர் வழங்கிவைத்தனர்.

நோன்பு காலத்தை ஒட்டியதாக இந்த பேரிச்சம்பழங்கள் முஸ்லிம்மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னர் 450 யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு பேரிச்சம்பழங்கள் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3-9)




## மஞ்சத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தின் 12ஆம் திருவிழாவான நாளை வியாழக்கிழமை மஞ்சத்திருவிழா நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம் பெற்று இரவு 8 மணிக்கு மஞ்சத்திரு விழாவும் நடைபெறும்.

பெருமளவான மக்கள் இதில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுவதால் பாதுகாப்பு, குடிநீர், வாகன தரிப்பிட வசதிகள் என்பன செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (இ-3-78)

## பொது அறிவுப்போட்டி

கிராம கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் நீர்வேலி பகுதிப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் வேதவல்லி- கந்தையா ஞாபகார்த்த பொது அறிவுப்போட்டி எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.அத்தியார் இந்துக்கல்லூரிமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-3-136)

# யாழ்ப்பாண நினைவுகள் பாகம்1 நூலின் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள்- பாகம் 1 நூலின் அறிமுக விழா எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மகாஜன சபையின் தலைவரும் ஓய்வுநிலை விவசாயப் போதனாசிரியருமாகிய வை.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அறிமுக உரையை யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா நிகழ்த்தவுள்ளார்.

நூல் நயப்புரைகளை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் வ.வசந்தகுமார், சுழிபுரம் ஆறுமுக வித்தியாலய ஆசிரியர் கை.சரவணன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

ஏற்புரையை நூலாசிரியர் வேதநாயகம் தபேந்திரன் நிகழ்த்துவார். (இ-3-254)

## சட்டவிரோதமான மணல் அகழ்வு பாலாவிப் பகுதியில் தொடர்கிறது

கொடிகாமம் பாலாவி தெற்கு கடற்கரையை அண்மித்த பகுதியிலும் சிலதனியார் காணிகளிலும் இருந்து சட்டவிரோதமான முறையில் உழவு இயந்திரங்களில் மணல் அகழ்ந்து கொண்டு செல்லப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மணல் ஏற்றுபவர்கள் மதுபோதையில் அடாவடித்தனம் செய்வதால் பொதுமக்கள் அச்சத்துடன் அப்பகுதியால் செல்லவேண்டியுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் வீதியில் நின்ற ஆடு ஒன்று அடித்துக்கொல்லப்பட்டிருக்கின்றது. எனினும் இது தொடர்பாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த அடாவடித்தனத்தை நிறுத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3-283)

## முகவரி சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மாதாந்த சஞ்சிகையான முகவரி இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல. 195, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள இலட்சுமி மண்டபத்தில் வெளியிடப்பட வுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.(இ-3)

# உடனடி நடவடிக்கைக்கு நீதிபதி உத்தரவு

(கரணவாய்)

பருத்தித்துறையில் அமைந்துள்ள விடுதி ஒன்றில்விபச்சார நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகப் பருத்தித்துறை நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதி மா.கணேசராஜா பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மேற்படி விபச்சார நடவடிக்கைகள் இடம்பெறுகின்றமை தொடர்பாக பொது மக்களினால் புலனாய்வுப் பொலிஸாரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

இந்நிலையில் பருத்தித் துறைப் பொலிஸார் நேற்று முன்தினம் இதனை நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து பருத்தித்துறை மாவட்ட நீதிபதி, மா.கணேசராஜா, காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கும் பருத்தித்துறை உதவிப்பொலிஸ் அத்தியட்சகருக்கும் உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (இ-3-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் அரசியல் விஜயத்தில் ஐக்கிய தேசியக்கட்சி தலையிடாது

(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷ மீளவும் அரசியலுக்கு வருகை தரும் விடயத்தில் ஐக்கிய தேசி யக் கட்சி தலையிடப் போவதில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும தெரிவித்துள்ளார்.**

அத்துடன் அவரின் வருகை நாட்டிற்கு நல்லதல்ல. அவருக்கு ஒரு போதும் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன வேட்புமனு வழங்க இடமளிக்கமாட்டார் என வும் அவர் மேலும் தெரிவித்துள் ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

மேலும் மகிந்த ராஜபக்ஷவின் ஆசிர்வாதத்தை கொண்டு நாட்டில் அரசியல் நடத்துவதற்கு இடமளிக் கப்போவதில்லை.

நிதி மோசடி விசாரணை பிரி வின் பெயரை கேட்டாலே கொள் ளையர்கள், விடுதலைப் புலிகளின் கபிர் ஆயுத விமானத்திற்கு பயந்து நடுங்குவதனை போன்று நடுங்கு கின்றனர்.

முன்னைய ஆட்சியாளர்கள் பொது மக்களுடைய பணத்தை பாரியளவில் கொள்ளையிட்டுள்ள னர். இதன்படி ஸ்ரீலங்கா டெலி கொம், லொத்தர் சபை போன்ற அரச நிறுவனங்களின் இலாபங் களை நாமல் ராஜபக்ஷவின் எதிர் கால அரசியலுக்கு செலவிட்டுள் ளனர்.

முன்னைய ஆட்சியின் போது மக்கள் பணத்தைக் கொள்ளை யிட்டோர் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை முன்னெடுத்து வருகிறோம். விசாரணையின் முடி வில் நிச்சயமாக குற்றவாளிகள் தண்டனையை அனுபவிப்பார்கள்.

இந்நிலையில் இலங்கை லொத் தர் சபையின் 38 கோடி ரூபாவிற்கு என்ன நடந்தது என்பது கூட தெரி யாமல் உள்ளது. முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி யின் போது முன்னெடுக்கப்பட்ட மோசடிகள் பெரும்பாலானவை தொட ர்ந்தும் வெளிவந்து கொண்டே இரு க்கும்.

ஆகவே குறித்த மோசடிகள் தொடர்பில் நிதி மோசடி பிரிவிடம் பொறுப்பை ஒப்படைத்து சுயாதீன விசாரணையை ஆரம்பித்து குற்ற வாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுப்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மின்சார விநியோகம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங் களின் கட்டமைப்பு மற்றும் பரா மரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை (1.07.2015) தொட க்கம் வெள்ளிக்கிழமை (3.07.2015) வரை காலை 8.30 மணியிலிரு ந்து மாலை 5.30 மணி வரை வட மாகாணத்திலுள்ள சில பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக் கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

01.07.2015 புதன்கிழமை யாழ். பிரதேசத்தில் இராமநாதன் வீதி, அரசடி வீதி, வைமன் வீதி, கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, மார்டின் வீதி சந்தியிலிருந்து A 9 வீதி வரை, நல்லூர் கோவிலடி, நக்கா வீதி, மருதடி வீதி, சுண்டி க்குளி, பஸ்ரியன் சந்தியிலிருந்து பாரதி வீதி சந்தி வரை, கச்சேரி கிழ க்கு ஒழுங்கை, யாழ். பல்கலை க்கழக விஞ்ஞான பீடம், ஆளுநர் தங்கும் விடுதி, ஆளுநர் செயலாளர் அலுவலகம், யாழ். மாவட்டச்செயலா ளர் அலுவலகம், பெனிசுலா புறப்பர் ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற் ரெட் (துளசிமகால்), யாழ்ப்பாணப் பல் கலைக்கழக இயற்கை விஞ்ஞான பீடம், நக்கா வீதி பிரிட்டிஸ் கவுன்சில், நாவலர் வீதி தியாகி அறக் கொடை நிலையம் ஆகிய பிரதேசங்களி லும்.

02.07.2015 வியாழக்கிழமை யாழ். பிரதேசத்தில் காஞ்சிபுரம், விபுலானந்தர் வீதி, அந்தோனியார் வீதி, பானா வெட்டி ஆஸ்பத்திரி வீதி, தோப்புக்காடு, எரிபொருள் நிரப்பு நிலையத்தடி ஆகிய இடங் களிலும் வவுனியா பிரதேசத்தில் பட்டானிச்சூர், வேப்பங்குளம், நெளு க்குளம், பம்பைமடு, தொழில்நுட்பக் கல்லூரி, பம்பைமடு பல்கலைக்க ழகம் மற்றும் விடுதி ஆகிய இடங் களிலும் மன்னார் பிரதேசத்தில் மணல்குளம், சூரியகட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும்

03.07.2015 வெள்ளி யாழ். பிர தேசத்தில் உசன், விடத்தற் பளை, கெற்பெலி, கிளாலி, டொலர் கூட்டுத் தாபனம், கரிசன் 5ஆவது பொறி யியல் படை முகாம், காங்கேசன் துறை வடக்கு கடற்படை முகாம், காங்கேசன்துறை இலங்கை கப் பற்கூட்டுத்தாபனம் ஆகிய இடங் களிலும் வவுனியா பிரதேசத்தில் பட்டானிச்சூர் பிரதேசம், பட்டக்காடு பிரதேசம், வேப்பங்குளம் பிரதே சம், மாமடுவிலிருந்து மகாகச்சக் கொடியவரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன் மடு, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத் திருக்கேதீஸ்வரத்திலி ருந்து எள்ளுப்பிட்டி வரை ஆகிய பிரதேசங்களிலும் மின்சார விநி யோகம் தடைப்படும். (இ-9)



நெல்லியடி கொமர்ஷல் வங்கியின் ஏற்பாட்டில் அண்மையில் நடை பெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான அருணலு பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் நெல்லியடி கொமர்ஷல் வங்கி முகாமையாளர் எஸ்.ஜெயபாலன் அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம்.
(படம்:-தும்பளை செய்தியாளர்)


ஷைலோ Sylo ஐஸ் கிறீம் Ice Cream

Natural Ice Cream

சுவையுடன் ஆரோக்கியம் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உங்கள் உடல் ஆரோக்கியத்துக்கு தகுந்த ஐஸ்கிறீம் வகைகளை தயாரித்து வழங்கும் எமது நிறுவனம் நயினாதீவில் அன்னை நாகபூஷணியின் திருவிழா காலத்தில் தற்காலிக விற்பனை நிலையத்தை அமைத்துள்ளோம். வனிலா, சொக்லேட், ஸ்ரோபெரி, அப்பிள், பிளாக்கரண்ட, பட்டர்ஸ் கொச், கேசர், பிஸ்தா, சப்ரோன், புளு வெரி, ராஸ்பெரி, பெப்பிமென்ட், பாதாம், புருட் அன்ட் நட்ஸ் மற்றும் Low sugar ஐஸ்கிறீம் மற்றும் மில்க் சொக் வகைகளை சுவைத்து மகிழ வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

Sylo Ice Cream இல. 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினை நாகபூஷணி அம்மனுக்கு இன்று தீர்த்தத் திருவிழா



## உன் அடி சரணமம்மா

பொங்கிடும் அலையினை அள்ளி–உன்
தலையணை ஆக்கிய அன்னையே
விலையில்லா உயிர்கள் விழ விழ– நீ
எம் இடர் களைய வந்திடுவாய்
என்றெண்ணி எண்ணி ஏங்கினோமே –நீ
வரவில்லையே தாயே இடர்தீர்க்க
தரவில்லையே அம்மா உன்கரம் –ஏனோ
மீண்டும் உன் அடி பணிகின்றோம்
அரவம் தனிலிருக்கும் அன்னையே–எம்மை
கரைசேர் உன் அடிசேர்

மாவை.நா.கஜேந்திரன்

## அருள்புரிவாய் தாயே

அலைகடல் மீதிருந்து தாயே
அகிலமெல்லாம் ஆட்சி புரியும் தாயே
அலை அலையாய் வரும் அடியவர்க்கு தாயே
அருள் புரியும் நயினைப்பதித் தாயே
நாகம் பூசித்த நாக கன்னித் தாயே
நயினையம் பதியுறைந்து தாயே
நல்லாட்சி புரிகின்ற தாயே
நம்மை எல்லாம் அருள்புரிவாய் தாயே
நாகபூஷணியே நயினையம் பதித்தாயே

மூளாய்
ப.சசி

## நல்லவளே கடல் தாயே!

வலம்புரி முத்தெடுத்து மூக்கில்
வைத்தவளே நயினைதேவி
வரும் அடியவர் வரம் கொடுப்பவளே
வல் வினை போக்குபவளே
வரவுக்கரசியே வருபவரை
வாழ்த்தி வரம் ஈந்திடம்மா
வல்லவளே நனவு நாயகியே
எல்லா நன்மையும் தந்திடம்மா

ம.கணேசலிங்கம்
அல்வையூர்


## துயர் நீக்கிடு அம்மா

நயினையின் அன்னையே
அன்னை நாகபூஷணி தாயே
எட்டுத்திசையெங்கும் உன்
அருள் பரப்பி உன் அருளால்
அடியவர்கள் எம் துயரம் நீ
நீக்க உன் அடிவேண்டி
வருகின்றோம் தாயே எம்மை
நீ காத்தருள்வாய்

தவராசா மேனகா
புத்தூர் கிழக்கு

# துரிதகதியில் நடைபெற்ற மின்சார இணைப்பு வேலைகள் இடைநிறுத்தம்

## சிவன்சோலை மக்கள் அவதி



(கிளிநொச்சி)

புதுமுறிப்பு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள சோலைநகர் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கும் நடவடிக்கை சில மாதங்களுக்கு முன்னர் துரிதகதியில் நடைபெற்றது.

எனினும் அவ்வேலைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமல் மின்சார வயர்கள் ஆங்காங்கே இணைக்கப்படாமல் நிலத்தில் விழுந்து இருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சிவன்சோலை பகுதிக்கு மின்சாரவயர்கள்யாவும் இணைக்கப்பட்டும் இதுவரை அம்மக்களுக்கான மின்சாரம் வழங்கப்படாதுள்ளது.

இதற்கான காரணம் சோலைநகர் பகுதிக்கான மின்சார வயர்கள் இணைக்கும் வேலை பூர்த்தியடையாமையால்சிவன்சோலை மக்களும் மின்சாரத்தை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. துரிதகதியில் நடைபெற்ற மின்சார இணைப்பு வேலைகள் இடைநிறுத்தப்பட்டதற்கான காரணம் என்ன என பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து சோலைநகர் சிவன்சோலை ஆகிய இடங்களுக்கு மின்சாரம் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென பொதுமக்களால் கோரிக்கை விடப்படுகின்றது. (2-254)

## பறவைக்காவடியுடன் பயணித்த

# உழவு இயந்திரத்தினை மோதி தள்ளியது டொல்பின் வாகனம்

## இரு பெண்கள் வைத்தியசாலையில்

(மல்லாவி)

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளத்தில் பறவைக் காவடியுடன் பயணித்துக் கொண்டிருந்த உழவு இயந்திரத்தை டொல்பின் ரக வாகனம் மோதித் தள்ளியதில் வாகனத்தில் பயணித்த இரு பெண்கள் படுகாயம் அடைந்த நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் பறவைக்காவடியெடுத்து வந்த பக்தர் அடியார் தெய்வாதீனமாக காயங்கள் எதவுமின்றி உயிர்தப்பினார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 3.30 மணியளவில்மேற்படிவீதியில்இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

துணுக்காய் பிரதேச செயலக பிரிவி லுள்ள புத்துவெட்டுவான் முத்துமாரி அம்மன் திருவிழாவின் போது நேர்த்திக் கடன் செலுத்துவதற்காக பக்தர் அடியார் ஒருவர் மல்லாவியிலிருந்து மாங்குளம் ஏ-9 வீதியூடாக ஆலயத்திற்கு பறவைக்காடி எடுத்துள்ளார்.

இந்நிலையில் மாங்குளம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக உழவு இயந்திரம் திரும்பிய வேளை வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த டொல்பின் ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து உழவு இயந்திரத்தின் இழுவைப் பெட்டியின் பின்புறமாக மோதுண்டு பலத்த சேதமடைந்தது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சிறிது நேரம் தடைப்பட்டிருந்த ஏ-9 வீதியூடான போக்குவரத்தை சீர் செய்தனர்.

அத்துடன் பக்தர் நேர்த்திக்கடனை ஆலயத்திற்கு சென்று நிறைவு செய்த பின்னர் உழவு இயந்திரத்தையும் அதன் சாரதியையும் மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு கூறி அனுப்பி வைத்தனர்.

இதேவேளை விபத்துக்குள்ளான டொல்பின் ரக வாகனத்தையும் அதன் சாரதியையும் மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். (2-15)

# வங்கியில் பணம் வைப்பிலிட சென்ற குடும்பப்பெண் வீடு திரும்பவில்லை

## பொலிஸ் நிலையத்தில் கணவர், தாயார் முறைப்பாடு

(மல்லாவி)

குடும்பப்பெண்ணொருவர் வங்கியில் பணத்தை வைப்பிலிடச் சென்ற நிலையில் ஏழு நாட்கள் கடந்தும் இன்று வரை வீடு திரும்பவில்லையென பிரஸ்தாப பெண்ணின் கணவரும் தாயாரும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள விசுவமடு தேராவில் பகுதியைச் சேர்ந்த ஒரு குழந்தைக்கு தாயாரான சுரேஸ் தேவிகா (வயது-22) என்ற குடும்பப்பெண்ணே இதுவரை வீடு திரும்பாத நிலையில் காணாமற் போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணியளவில் விசுவமடுவிலுள்ள வங்கியொன்றிற்கு பணத்தை வைப்பிலிடச் சென்ற நிலையில் இதுவரை வீடு திரும்பாத நிலையில் அவர் தொடர்பான தகவல் எதுவும் கிடைக்கவில்லையெனக் கூறி அவரது கணவரும் பிரஸ்தாப பெண்ணின் தாயாரும் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளனர்.

சம்பவத்தை பதிவு செய்த பொலிஸார் காணாமற் போயுள்ள பெண்ணை தேடும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட பொலிஸார் தெரிவிக்கின்றனர். (2-15)




### கூட்டுறவு சங்க கட்டடத்திறப்பு விழா


நானாட்டான், முசலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய அலுவலக கட்டட திறப்பு விழாவும் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழா நிகழ்வும் உயிலங்குளம் பெரிய கட்டைக்காட்டில் அமைக்கப்பட்ட புதிய அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நானாட்டான், முசலி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத்தின் தலைவர் வே.கதிரேசன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக கலந்து கொண்ட வடக்குமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் ஆகியோர் இணைந்து வைபவ ரீதியாக அலுவலக கட்டடத்தை திறந்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து நானாட்டான், முசலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளி விழா மலர் வைபவ ரீதியாக வெளியீடு செய்யப்பட்டது. அத்துடன், சங்கத்தில் இதுவரை சேவை செய்த தலை வர்கள், ஓய்வுபெற்ற பணியாளர்கள் கௌர விக்கப்பட்டனர். இந்நிகழ்வில், விருந்தினர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நினை வுச்சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# ஒவ்வொரு மனிதனுடைய இறுதி பயணம் முடியும் இடம் மயானம்

## வைத்திய கலாநிதி சிவமோகன் தெரிவிப்பு



(உடையார்கட்டு)

ஒவ்வொரு மனிதனுடையதும் இறுதி பயணம் முடியுமிடம் மயானம். அதை புனிதமாக பராமரிக்க கற்றுக்கொள்ள வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்தார்.

உடையார்கட்டு வடக்கைச் சேர்ந்த வெள்ளப்பள்ளம் எனும் கிராமத்தில் அமைந்துள்ள பொது மயானத்தை துப்புரவு செய்வதற்கான பணி அண்மையில் நடைபெற்றது. இவ்வேலைத்திட்டத்திற்கென அவர் 80 ஆயிரம் ரூபாவை தனக்கென ஒதுக்கியதில் இருந்து வழங்கியுள்ளார்.

மக்கள் பிரதிநிதிகளோடு மேற்படி வேலைத்திட்டத்தை செயற்படுத்தும்போது அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்று எமது இன விடுதலைக்காக ஆகுதியாகிய வீர மறவர்களைக்கூட மக்கள் நினைவுகூர முன்னைய அரசு மட்டுமல்ல இன்றைய அரசும் இடங்கொடுக்கவில்லை. பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்ட பின்னர் வெள்ளையன் கூட ஒரு சமாதியை அவனுக்காக தாங்களே நிறுவினர். ஆனால் பௌத்தம் இறந்த ஒருவரைக் கூட அவரது குடும்ப உறவுகள் நினைவுகூர இடம் தரவில்லை என்பது மிகவும் வேதனைக்குரிய கசப்பான உண்மையாகும். இவ்வளவு தூரம் மன ஓட்டம் உள்ளவர்களால் எப்படி இன நல்லிணக்கம் இந்நாட்டில் ஏற்பட உதவ முடியும்.

மேலும் உடையார்கட்டு வடக்கு பிரதேச மக்கள் இறுதி யுத்தத்தின் பின்னர் காடு மூடிய மேற்படி மயானத்தில் ஈமக் கிரியைகளை செய்யும் போது பாரிய அசௌகரியங்களை நோக்கியது குறிப்பிடத்தக்கது. (2)

# மக்கள் பாவனைக்கு உதவாத வீதியை புனரமைப்பது எப்போது?

## பொதுமக்கள் கேள்வி

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்தில் 2ஆயிரத்து 800 குடும்பங்கள் தினமும் பயன்படுத்தும் பிரதான வீதி புனரமைக்கப்படாமல் இருப்பதால் தாம் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள மூன்று முறிப்பு, பாண்டியன்குளம், வீரப்பிராயர் குளம், பனங்காமம், கொம்புவைத்தகுளம், நட்டாங்கண்டல், சிறாட்டிகுளம், விநாயகபுரம், கொல்லவிளாங்குளம், பாலிநகர், சிவபுரம், அம்பாள்புரம் உள்ளிட்ட மிகவும் பழைமை வாய்ந்த வவசாயக் கிராமங்களையும் அதனை அணமித்த சிறிய கிராமங்களிலும் 2ஆயிரத்து800 குடும்பங்களைச் சேர்ந்த 9ஆயிரத்து 975 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தக் கிராம மக்கள் மருத்துவ வசதி மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் போன்ற எந்த வசதிகளைப் பெற்றுக் கொள்வதாக இருந்தாலும் வேறு இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலையுள்ளது.

குறிப்பாக சிறாட்டிகுளம், மூன்றுமுறிப்பு, கொம்புவைத்தகுளம், பாலைப்பாணி உள்ளிட்ட கிராமங்களில் வாழும் மக்கள் சாதாரணமாக ஒரு தீப்பெட்டியை வாங்குவதாக இருந்தாலும்கூட சுமார் 10 கிலோமீற்றர் தூரம் சேதமடைந்த வீதியூடாக சென்றே அவற்றை பெற்றுவர வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மேற்படி கிராமங்களுக்கான பிரதான வீதிகள் எவையும் புனரமைக்கப்படாத நிலையில் பாரிய குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் எந்த வாகனத்திலும் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

குறித்த கிராமங்களுக்கான பிரதான வீதிகள் நீர்ப்பாசனத் திணைக்களம், பிரதேச சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றுக்கு சொந்தமான வீதிகளாக காணப்படுவதுடன், பிரதான வீதியை புனரமைக்க நிதி இன்மையால் புனரமைக்க முடியாதுள்ளதாக திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இப்பகுதி மக்கள் மீள்குடியேற்றப்பட்டு தற்போது ஆறு வருடங்களைக் கடக்கின்ற போதும், இன்று வரை தமது அன்றாடப் போக்குவரத்து தேவைகளுக்கு பயன்படுத்தும் பிரதான வீதிகள் புனரமைக்கப்படவில்லை. இதனால் மழை காலங்களில் போக்குவரத்து செய்யமுடியாத நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது பனங்காமம் முதல் மல்லாவி வரைக்குமான போக்குவரத்துச் சேவைகள் கூட பாதிக்கும் நிலை காணப்படுவதாகவும் குறித்த வீதியினை புனரமைத்து தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு.அரச அதிபரை விசாரணைகளின்றி இடமாற்றமுடியாது

## அமைச்சர் ஜோசப் விளக்கம்

(வவுனியா)

**விசாரணைகள் எதுவுமின்றி வவுனியா அரசாங்க அதிபரை உடனடியாக இடமாற்றம் செய்ய முடியாது என்றும் இரண்டு பேர் கொண்ட குழுவொன்றை அமைத்து விசாரணைகள் மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக உள்நாட்டலுவர்கள் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.**

வவுனியா அரசாங்க அதிபரை இடமாற்றம் செய்யக்கோரி உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அத்துடன் உள்நாட்டலுவல்கள் அமைச்சருடன் நேரடியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த விடயம் குறித்து அவைத்தலைவர் பேசியுள்ளார்.

விசாரணைகள் எதுவும் செய்யாமல் அவரை உடனடியாக இடமாற்றம் செய்யமுடியாதென்றும் இரண்டு பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்து விசாரணைகள் மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா தன்னிடம் தெரிவித்தார் என்றும் சீ.வீ.கே. சிவஞானம் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த விடயம் குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோரிடமும் தாம் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுக்களை நடத்தி கடிதம் ஒன்றை அவரிடம் கையளித்தனர் என்றும் வவுனியா அரச அதிபர் இடமாற்றம் தொடர்பில் தான் உரிய நடவடிக்கை எடுப்பார் என்றும் பிரதமர் கூறினார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதுஎன அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார். (2)

# முன்னாள் போராளிகள் 6பேர் புனர்வாழ்வின் பின் விடுதலை





தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணைந்து செயற்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் ஆறு பேர் புனர்வாழ்வு பயிற்சி முடிவடைந்த நிலையில் அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

இந்நிகழ்வு வவுனியா. பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் நேற்று இடம்பெற்றது. யுத்த காலத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு உதவினார்கள் மற்றும் அவ் அமைப்பில் அங்கத்துவம் வகித்தார்கள் என கைது செய்யப்பட்டு பூசா உள்ளிட்ட சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நீதிமன்ற உத்தரவுக்கமைய புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் ஆறு பேர் சமூகத்துடன் இணைக்கப்பட்டனர்.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் கேணல் எம்.எச்.ஆர். கமின் டோனின் பணிப்புரைக்கமைய உதவி புனர்வாழ்வு ஆணையாளர் லெப் கேணல் பீ.பீ.எச்.பெர்னாண்டோ. பூந்தோட்ட புனர்வாழ்வு நிலைய பொறுப்பதிகாரி கப்டன் எச்.எஸ்.டீ.பெரேரா உள்ளிட்ட அதிகாரிகளால் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டோர் புனர்வாழ்வின் போது சிங்கள மொழி. தச்சுத் தொழில். அலுமினிய பிற்றிங் தொழில். வயறிங் தொழில் போன்ற பயிற்சிகளை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)





# பகிரங்க ஏலத்தில் பொருட்கள் விற்பனை

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற வழக்குகளில் இருந்து பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான மோட்டார் சைக்கிள், பாரவூர்தி ஆகியன இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப் படவுள்ளதாக மன்றின் பதிவாளர் திருமதி.மகாலட்சுமி அறிவித்துள்ளார்.

இவ் ஏலத்தில் பங்குகொள்ள விரும்புபவர்கள் உரிய நேரத்திற்கு நீதிமன்றில் சமுகமளிக்குமாறும் ஏலத்தில் பெறப்பட்ட பொருட்களுக்கான பணக்கொடுப்பனவு முழுமையாக செலுத்தப்பட்டு அன்றைய தினமே பொருட்களை எடுத்துச்செல்ல வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார். (2-302)

# தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபைகளுக்கு தளபாடங்கள், இசைக்கருவிகள் வழங்கப்பட்டன



(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நல்லாட்சியில் பிரஜைகள் கருத்திட்டத்தின் கீழ் Search for Common Ground நிறுவனத்தினால் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபைகளுக்கும் மக்களுக்கும் இடையில் தொடர்புகளை விருத்தி செய்வதனை அடிப்படையாகக் கொண்டு வவுனியா வடக்கு பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை மற்றும் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை ஆகியவற்றுக்கு மக்கள் மன்ற நடவடிக்கையின்கீழ் தளபாட ங்கள் மற்றும் கருவிகள் என்பன வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் Search for Common Ground நிறுவன உத்யோகத்தர் இணைந்து பிரதேச சபைகளின் செயலாளர்களுக்கு நேற்று முன்தினம் வழங்கி வைத்தனர்.

இதற்கான நிதியுதவியை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கி வருகின்றது குறிப்பிடத்தக்கது. (2)

# எமது பலத்தை நிரூபிப்பதன் மூலம் உரிமைகளை வென்றெடுக்க முடியும்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(குருமன்காடு)

நாங்கள் ஒற்றுமையாக எமது பலத்தை நிரூபிப்பதன் மூலமே பேரம் பேசும் சக்தியாக மாறி எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என வடக்கு மாகாண சுகாதார மற்றும் மீள்குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

நோன்புப் பெருநாளை முன்னிட்டு வவுனியா, செட்டிகுளம் பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற 50 குடும்பங்களுக்கு உலர்உணவுப்பொதிகள்அண்மையில் வழங்கி வைக்கப் பட்டன.

உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்த பின்னர் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்த நாடு தற்போது முக்கிய கட்டத்தில் உள்ளது. நீண்டகால கொடுங்கோலாட்சிக்கு பின்னர் தற்போது நல்லாட்சி என்ற தொனியுடன் புதிய அரசியல் கலாசாரம் மிக்க அரசு நிறுவப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிறுபான்மையினராகிய தமிழ், முஸ்லிம் மக்கள் எமக்கிடையேயுள்ள இன, மத பேதங்களை மறந்து தமிழ் பேசும் மக்கள் என்ற உயரிய சிந்தனையுடன் செயலாற்ற வேண்டும்.



நாங்கள் ஒற்றுமையாக எமது பலத்தை நிரூபிப்பதன் மூலமே பேரம்பேசும் சக்தியாக மாறி எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

கடந்த அரசாங்கத்தால் தமிழ், முஸ்லிம் மக்கள் சொல்லொணா துன்பங்களைஅனுபவித்துள் ளோம். கடந்த அரசாங் கத்தில் வீட்டுத் திட்டங்களில் குழறுபடிகளை மேற்கொண்டதை நீங்கள் அறிவீர்கள். இந்த வீட்டுத் திட்டம் வழங்குவதில் நடைபெற்ற முறைகேடுகளால் உண்மையில் வீடு தேவையானவர்களுக்கு வீடுகள் கிடைக்காது வேறு மாவட்டங்களில் செல்வந்தராக வாழ்பவர்களுக்கும் வீடு வழங்கப்பட்டுள்ளது.

இதனால் இன்றும் பயன்படுத்தப்படாது பலவீடுகள் பூட்டி வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமை மாற வேண்டும். புதிய அரசியல் சூழ்நிலையில் எமக்கிடையே ஒற்றுமையை கட்டியெழுப்பி பலத்தை நிரூபிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

செட்டிகுளம் பிரதேச தமிழரசுக் கட்சிக்கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச கிளையின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1179





...சாலையில் உருண்டு போய் விழுந்தான் குள்ளன். அந்தச் சமயம் பார்த்து, அந்த வழியாக படை வீரன் ஒருவன் வந்தான்.

சற்று முன்பிருந்தே எல்லாவற்றையும் அந்தப் படை வீரன் பார்த்துக்கொண்டுதான் இருந்தான். தன் கண் முன்னால் ஒருவனை சலீம் உதைத்துக் கொன்றுவிட்டான் என முடிபிற்கு வந்த படைவீரன், நீதிபதியிடம் அவனை அழைத்துச் சென்றான்.

விசாரித்த நீதிபதி தீர்ப்புச் சொன்னார்... நீங்கள் ஒருவனை உதைத்துக் கொன்றுவிட்டீர்கள். இந்த நீதிமன்றம் உங்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கிறது.

நடந்ததைக் கேள்விப்பட்டு அங்கே வந்த அப்துல்லா, நீதிபதி அவர்களே, சலீம் குற்றமற்றவர். அந்தக் கொலையைச் செய்தது நான்தான்! என்றார்.

நான் உங்களுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கிறேன் என்றார் நீதிபதி.

அப்போது அங்கே வந்த வைத்தியர் இவனைக் கொன்றது நான்தான் என்றார்.

மிகவும் தடுமாற்றம் அடைந்தார் நீதிபதி. இது என்ன தேடி வந்த தலைவலி என்றபடியே தீர்ப்புச் சொன்னார். நீங்களும்தான் குற்றவாளி. எனவே, உங்களுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கிறேன்!

நீதிபதி தன் இருக்கையை விட்டு எழ முற்படும்போது... அலி ஓடி வந்தான்.

நீதிபதி அவர்களே! நான்தான் அந்தக் குள்ளனை வைத்தியரின் வீட்டில் போட்டேன். அவன் என் வீட்டில் சாப்பிடும்போதுதான் மரணம் ஏற்பட்டது! என்றான்.

நீதிபதி ஒரு குவளை நீர் அருந்தித் தன் பதற்றத்தைத் தணித்துக் கொண்டார். பிறகு, இறுதித் தீர்ப்பை அறிவித்தார்.

ஆமாம்... ஆமாம்! இவனும் குற்றவாளிதான். இவனையும் தூக்கில் ஏற்றும்படி உத்தரவிடுகிறேன்!

தீர்ப்பைக் கேட்ட ஓர் அதிகாரி, நீதிபதி அவர்களே... நான்கு பேரையும் தூக்கில் ஏற்றுவது நியாயமா என்று கேட்டார்.

நீதிபதி அதையும் ஏற்றுக்கொண்டார். ஆனால் யாரைத் தூக்கில் போடுவது? என்று குழம்பினார்.

அப்போது, அரண்மனையிலிருந்து ஒரு படை வீரன் ஓடி வந்தான். அவனுடன் அரண்மனை வைத்தியரும் வந்தார்.

நேற்று அரண்மனையில் இருந்து ஒருவன் காணாமற் போய்விட்டான். அவன் ஒரு பாடகன், நகைச்சுவையான கதைகள் சொல்வான். சுல்த்தானின் அன்பிற்குரிய அவன் ஒரு குள்ளன் என்றான் வீரன்.

நீதிபதி துள்ளி எழுந்தார். நீங்கள் பக்கத்து அறையில் கிடக்கிற பிணத்தைப் பாருங்கள். அவனும் ஒரு குள்ளன்தான் என்றார்.

பார்த்த படைவீரன், இவனேதான் என்றான்.

அரண்மனை வைத்தியர், பிணத்தின் கன்னங்களை அழுத்தினார். நெஞ்சைப் பிசைந்தார். பிறகு உரக்கச் சொன்னார். நம் அதிர்ஷ்டம் இந்தக் குள்ளன் இன்னும் சாகவில்லை!

குள்ளனை பரிசோதித்த வைத்தியர் தன் பெட்டியைத் திறந்து, கம்பி போல் எதையோ எடுத்து, குள்ளனின் தொண்டைக்குள் செலுத்தி இழுத்தார்.மீன்முள் ஒன்று வெளியே வந்து விழுந்தது. மீன் முள் மூச்சுக் குழாயில் சிக்கி இருந்ததால் மயக்கமாகி இருக்கிறான் என்றார் வைத்தியர்.

சற்று நேரத்தில் குள்ளன் கண்களைத் திறந்து பார்த்தான். எல்லோரும் நிம்மதி அடைந்தார்கள். நம்ம காமெடி நீதிபதிக்கும் தலைவலி தீர்ந்தது.

அவரது குழப்பத் தீர்ப்பிலிருந்த அனைவரும் உயிர் தப்பினார்கள்!

முற்றும்

## மு. நவரத்தினசாமி



முருகுப்பிள்ளை நவரத்தினசாமி 1909 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டம், தொண்டைமானாறு என்ற இடத்தில் பிறந்தார்.

இவர் இலங்கையின் நீச்சல் வீரர் ஆவார். பாக்குநீரிணையை முதன் முதலில் நீந்திக் கடந்தவர் என்ற பெருமை பெற்றவர். தனது 44 ஆவது அகவையில் 1954 மார்ச் 25 இல் இவர் இச்சாதனையைப் புரிந்தார்.

நவரத்தினசாமி பருத்தித்துறை, ஹாட்லிக் கல்லூரியில் கல்வி பயின்றார். படிப்பை முடித்த பின்னர் அரச சேவையில் இணைந்து வேளாண்மை பயிற்றுனராகப் பணியாற்றினார். தனது ஊரிலேயே லீலாவதி என்பவரைத் திருமணம் புரிந்தார். இவர்களுக்கு மூன்று புதல்வர்கள்.

பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே நீந்துவதில் விருப்பம் கொண்டிருந்த இவர் பத்து வயதில் 10 மைல்களுக்கும் மேலாக நீந்திச் சாதனை புரிந்தவர்.

ஆங்கிலக் கால்வாயை ஆங்கிலேயர் ஒருவர் நீந்திக் கடந்தார் எனற செய்தியைப் படித்த போதே, அருகில் உள்ள பாக்குநீரிணையை நீந்திக் கடக்க வேண்டுமென ஆவல் கொண்டார். அதற்காகக் கடுமையான பயிற்சிகளை எடுத்துக் கொண்டார்.

1954 மார்ச் 25 மாலை 4:10 மணிக்கு அவர் தனது இரண்டாவது பயணத்தை ஆரம்பித்தார். பல இடர்களுக்கு மத்தியில் 1954 மார்ச் 26 மாலை 7 மணிக்கு 27 மணி நேரம் நீந்திய பின்னர் வேதாரண்யத்தை வந்தடைந்தார்.

அடுத்தநாள் காலையில் கோடியக்கரை, வேதாரண்யம், திருநெல்வேலி மக்கள் பெரும் வரவேற்பு அளித்தனர். நவரத்தினசாமி மார்ச் 28 மாலை 6:30 இற்கு வல்வெட்டித்துறை வந்தடைந்தார். சேர் கந்தையா வைத்தியநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரி.இராமலிங்கம், வ. நல்லையா, என். எம். பெரேரா உட்பட பெருமளவு மக்கள இவரை வல்வெட்டித்துறையில் வரவேற்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாடு விழாக்கோலம் பூண்டிருந்தது. இந்திய, இலங்கை ஊடகங்கள் இச்சாதனைக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதியிருந்தன. இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை ஆகியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

கொழும்பில் காலிமுகத்திடலில் 1954 ஏப்ரல் 9 இல் நடந்த ஒரு பாராட்டு நிகழ்வில் பிரதமர் இவருக்கு ஒரு வெள்ளிக் கேடயத்தைப் பரிசாகக் கொடுத்தார். எலிசபெத் மகாராணி தனது பிறந்த நாள் நினைவாக இவருக்கு British Empire Medal (BEM) வழங்கிக் கௌரவித்தார்.

## 07.2015 01 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1825 - ஐக்கிய இராச்சிய நாணயங்கள் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட நாணயங்கள் ஆக்கப்பட்டன.
- 1851 - ஆஸ்திரேலியாவில் விக்டோரியா குடியேற்றப் பகுதி நியூ சவுத் வேல்சிலிருந்து பிரிக்கப்பட்டது.
- 1862 - ரஷ்யாவின் அரச நூலகம் அமைக்கப்பட்டது
- 1876 - சேர்பியா துருக்கி மீது போரை அறிவித்தது.
- 1881 - உலகின் முதலாவது அனைத்துலக தொலைபேசித் தொடர்பு கனடாவின் நியூ பிரன்ஸ்விக் மாநிலத்துக்கும் ஐக்கிய அமெரிக்காவின் மேய்ன் மாநிலத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது.
- 1921 - சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1932 - ஏபிசி (அவுஸ்திரேலிய ஒலிபரப்புச் சேவை) ஆரம்பிக்கப்பட்டது.
- 1960 - இத்தாலியிடமிருந்து சோமாலியா விடுதலை அடைந்தது.
- 1962 - ருவாண்டா விடுதலை அடைந்தது.
- 1962 - பெல்ஜியத்திடமிருந்து புருண்டி விடுதலை அடைந்தது.
- 1967 - ஐரோப்பிய சமூகம் உருவாக்கப்பட்டது.
- 1976 - மடெய்ரா தீவுகளுக்கு போர்த்துக்கல் சுயாட்சியை வழங்கியது.
- 1978 - அவுஸ்திரேலியாவின் வட மண்டலம் அவுஸ்திரேலிய பொதுநலவாயத்துக்குக் கீழ் சுயாட்சி பெற்றது.
- 1979 - சொனி நிறுவனத்தின் வோக்மன் அறிமுகம் செய்யப்பட்டது.
- 2002 - சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.
- 2004 - காசினி-ஹியூஜென்ஸ் விண்கலம் சனிக் கோளின் சுற்று வட்டத்திற்குள் சென்றது.

### பிறப்புகள்

- 1924 - தி. ச. வரதராசன், ஈழத்து மறுமலர்ச்சி எழுத்தாளர் (இ. 2006)
- 1927 - சந்திரசேகர், 11 ஆவது இந்தியப் பிரதமர்
- 1935 - டி. ஜி. எஸ். தினகரன், இந்தியாவின் முன்னணி கிறிஸ்தவ மறைபரப்புனர்
- 1961 - கல்பனா சாவ்லா, விண்வெளி வீராங்கனை (இ. 2003)
- 1961 - டயானா, வேல்ஸ் இளவரசி (இ. 1997)

### இறப்புகள்

- 1969 - மு. நவரத்தினசாமி, பாக்குநீரிணையை நீந்திக் கடந்தவர் (பி. 1909)
- 2001 - [illegible] நோபல் பரிசு பெற்றவர் (பி. 192[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 228

## பொறாமையிலிருந்து விடுதலை!

காரணம் ஏதுமின்றி நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதைக் கண்டு மக்கள் உங்களைப் பைத்தியம் என்று எண்ணக்கூடும். மகிழ்ச்சியைப் பொறுத்தமட்டில் கூட அவர்கள் காரண-விளைவு உறவு முறையாகத்தான் அறிகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை, வெளியே ஏதோ ஒரு காரணமே உள்ளே நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கக் காரணம் என்று கருதுகிறார்கள்.

இவற்றையெல்லாம், நான் இப்பொழுது நீங்கள் தியானத்தையும் ஆன்மீகத்தையும் பற்றிக் கேட்ட கேள்விக்கு பதிலாகக் கூறுகிறேன். நாம் தலைப்பிலிருந்து விலகிச் செல்வதாக நீங்கள் நினைக்கக்கூடும். அப்படி இல்லை! இந்த சக்கரம் விஷுத்தி சக்கரம் நீங்கள் விரிவடைதலைப் பற்றியது; முழு விழிப்புணர் வுடன் உங்கள் சொந்த தனித்துவம் வாய்ந்த இருப்பைக் கண்டுபிடிப்பதைப் பற்றியது; மேலும் வாழ்க்கையில் ஒப்பிடுதலுக்கும் பொறாமைக்கும் இடமேயில்லை என்ற உண்மை யைப் புரிந்து கொள்ளு தலைப் பற்றியது. நான் சொல்வதை அப்படியே வெறுமனே உள்ளே எடுத்துக் கொண்டு அதன் பின்னா லிருக்கும் சக்தி உங்களை உருமாற்ற் அனுமதியளியுங்கள். நான் சொல்கிறேன், உங்களுக்குள் அற்புதங்கள் நிகழும்! அது உங்கள் இருப்புத் தன்மையின் முழுத் தன்மையையே மாற்றிவிடும்.




சரி... இப்பொழுது நாம் பேசியவற்றிலிருந்து, ஒப்பிடுதலும் பொறாமையும் இல்லாத வஸ்து என்பதையும், அவற்றிற்கு உங்களுடன் எந்தவித சம்பந்தமும் இல்லையென்பதையும் புரிந்துகொண்டிருப்பீர்கள். இப்பொழுது சாமி விஷூத்தி சக்கரத்தைப் பற்றியும், அதிலிருக்கும் சக்தி புலம் பற்றியும் இன்னும் கொஞ்சம் விளக்குகின்றேன்.

பாருங்கள்... நம்மிடம் சக்தி மூன்று அடுக்குகளாக இருக்கிறது. முதல் அடுக்கு சக்தியானது நமது மனதிலிருந்து வருகிறது. அதுவே நாம் காலை முதல் இரவு வரை நமது தினசரி செயல்களுக்கு உபயோகப்படுத்துவது இந்த சக்தி செலவழிந்து விடும் பொழுது, இன்னும் அதிகமாக வேலை கொடுக்கப்பட்டால், நீங்கள் களைப்பும், எரிச்சலும் அடைவீர்கள்.

இரண்டாவது அடுக்கு சக்தியானது அவசரகால அடுக்கு. அது உங்கள் உணர்ச்சிகளிலிருந்து எழும் சக்தி. அவசர காலங்களில் இந்த சக்தி திறக்கப்படுகிறது. நீங்கள் சாலையில் நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். உங்களை ஒரு நாய் துரத்துமானால், பய உணர்ச்சி மேலெழுகிறது; பிறகு நீங்கள் என்ன செய்கிறீர்கள்? சாதாரனமான சூழ்நிலைகளில் எவ்வளவு வேகமாக ஓடுகிறீர்களோ, அதை விட அதிக வேகமாக ஓடுகிறீர் கள், இல்லையா? நீங்கள் எவ்வளவு களைப்பாக இருந்தபோதிலும், உங்கள் கைகால்களை அசைக்க முடியாமல் இருப்பினும் திடீரெண்டு ஒரு நாய் உங்களைத் துரத்தும் பொழுது நீங்கள் வேறு விதமான ஒரு சக்தியுடன் ஓடுகிறீர்கள்(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி



# கருவாச்சி காவியம்

வைரமுத்து-175

நெசமா? எல்லா வீட்டுக்கு மேலயும் மழை விழுந்திருக்கு. எல்லா விட்டுக்குக் கீழயும் ஒரு பொணம் கெடந்திருக்கு. வீடுகள்ல நல்லது-கெட்டது; ஒன்னது-என்னதுங்கிறதெல்லாம் வெறும் மனப்பெரட்டு.

ஊர் எல்லையில மடமடன்னு குடிசை ஒண்ணு தயாராகுது கருவாச்சிக்கு.

ஊரே ஒத்தாசை பண்ணக் குடிசை கட்டுறானய்யா கொண்ணவாயன். ஊர் மந்தையில எல்லா வீட்டு ஆளுகளுக்கும் சாணி கொட்ட எடம் ஒதுக்கியிருப்பாக. முக்கிமுக்கி அளந்தாலும் மூணு செண்டு தான் இருக்கும். அது பரம்பரை பரம்பரையா அவுகவுகளுக்குப் பாத்தியப்பட்டது.

அந்த மந்தையில கருவாச்சிக் குண்டான சாணிக்குழியில குடிசை போடுறதுன்னு முடிவாகிப்போச்சு.

மம்பட்டி எடுத்தான் கொண்ணவாயன். சரசரன்னு செடி செத்தையெல்லாம் செதுக்கி எறிஞ்சுட்டான். மம்பட்டி வச்சே சொரண்டிச்சொரண்டிப்பதினாறு மொழ நீளத்துல பத்தடி அகலத்துல அரைச்சாண் பள்ளத்துக்கு அஸ்திவாரமும் தோண்டிப்புட்டான். சல்லிக்கல்லும் சரளைக் கல்லுமாப் போட்டு அதை நெப்பி, கடப்பாரைக்கவுண்டரு குடுத்த நாலும் குத்துக்கல்ல நட்டான் நாலு மூலையிலயும்.

கனகமும் பவளமும் தண்ணி சொமந்து ஊத்த-செம்மண்ணும் கெணத்துமண்ணுமாச் சேத்து மிதிச்சுச் சேறு கொழச்சான்.

கொழச்ச [illegible] உருண்ட தெரட்டி உருண்ட தெரட்டிக் கனகம் பவளம் கையில அவன் குடுக்க, காவக்கார சக்கணன் கோளாறு சொல்ல, அஸ்திவாரத்துமேல மண்ணு வைக்க மண்ணுவைக்க மதில் ஏறுது சரசரன்னு.



ஒரே நாள்ல வச்சாச்சு ஒன்றரை மொழச்சுவரு. அந்த ஈரச்சுவர் மேல மூணு விரல் கடைக்கு ஒண்ணுங்கற கணக்குல அளந்தளந்து நட்டான் அழிஞ்சிக் குச்சிகளை.

[illegible] தரைக்கு மண்ணடிச்சான். செம்மண்ணு மூணு வண்டி; கெணத்து மண்ணு பத்து வண்டி. கெணத்தமண்ணு இருக்கே.. தரையில ஈரம் தங்கவிடாது. அதுல ஈ, எறும்பு, பூரான், பல்லி இருந்து வாழ முடியாது.

உருமாப்பெருமாத்தேவருகிட்ட பூவரசங்கால் ரெண்டு வாங்கி முன்னுக்க ஒண்ணும் பின்னுக்கா ஒண்ணுமா நட்டு மூங்கிக் கம்புக ரெண்டு மாட்டினான் மோட்டுவளைக்கு. கல்லுக்கால் மேல பூவரசங் குச்சிகளைப் போட்டான் அட்டவளைக்கு.

பூவரசம் பாச்சும் ஆமணக்கம் பாச்சும் வகைக்கு எட்டு வாங்கி கைமரமாப் போட்டான் மேல் கூரைக்கு. இப்ப கைமரத்துல கூரைய முடியணுமே.. கயித்துக்கு எங்கே போறது கயித்துக்கு?

கத்தாழைய அறுத்தான்; நார் நாராக உரிச்சான். காயவச்சான் வெயில்ல; ஊறவச்சான் தண்ணியில. ஆனையே இழுத்தாலும் அறுக்க முடியாது; அப்பேர்ப்பட்ட பலம் வந்திரிச்சு கத்தாழங்கயித் துக்கு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்தை கைப்பற்றும் எந்தத் தேவையும் இல்லை

## சந்திரிகா தெரிவிப்பு

**(கொழும்பு) நாட்டை கட்டியெழுப்பக்கூடிய பங்களிப்பை வழங்கிய போதிலும் மற்றைய நபர்களை போல் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றும் எந்த தேவையும் தனக்கில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

மக்களால் நிராகரிக்கப்பட்ட சிலர் அதிகார பேராசையை வெளிக்காட்டி கொண்டு மீண்டும் அதிகாரத்தை கைப்பாற்றும் சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தனது 70 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் மல்வத்து மற்றும் அஸ்கிரிய மாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்ற பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இதனை தெரிவித்தார்.

12 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த தான், விரும்பியே அதிகாரத்தை கைவிட்டுச் சென்றதாகவும் இதனால், மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றும் எவ்வித தேவையும் தனக்கில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கொள்ளை, மோசடி, கொலைகளை செய்யாத தனக்கு எந்த குற்றத்தையாவது மறைப்பதற்காக மண்டும் அதிகாரத்தை கைப்பற்றும தேவையில்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இழந்தவற்றை அரசியல் காரணம் காட்டி தற்காத்து கொள்ளவோ பெற்றுக் கொள்ளவோ தான் விரும்பவில்லையெனவும் தெரிவித்துள்ள அவர், சிலர் அரசியல் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றி தமது தவறுகளை மறைக்க முயற்சித்து வருகின்றனர் என கூறியுள்ளார்.

தாம் செய்த தவறு தெரியவந்து விடுமோ என்று சிலருக்கு அச்சம் இருக்கின்றது எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.(இ-7)

# விபத்தில் இருவர் பலி

புத்தளம், பாலாவி பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து புத்தளம் நோக்கிச் சென்ற லொறி, சிலாபம் நோக்கி சென்ற மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதினாலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் புத்தளம் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், தப்பிச்சென்ற லொறி சாரதியினை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# அமெரிக்க கருத்தமர்வில் அமைச்சர் டெனீஸ்வரன்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அண்மையில் இடம்பெற்ற கடல் வள பாதுகாப்பு தொடர்பான கருத்தமர்வில் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்து கொண்டுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகள் மூலமும் இயற்கையின் சீரற்ற நிலைமை காரணமாகவும் கடல் வளங்கள் அழிந்து வருகின்றன. இக்கடல் வளங்களை பாதுகாப்பது தொடர்பான கருத்தமர்வு ஒன்று அமெரிக்க அரசால் ஏற்பாடு செயப்பட்டிருந்தது, இக்கருத்தமர்வில் சர்வதேச ரீதியில் 16 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இக்கருத்தமர்வில் தடை செய்யப்பட்ட தொழில் முறைகளை கையாளும் நாடுகளில் இலங்கை முக்கிய இடம் வகிப்பதால், இலங்கையின் பிரதிநிதியாக வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்து கொண்டார், அமெரிக்காவின் மிக முக்கிய மீன்பிடி துறைமுகங்களான அலபாமா, லோசெஞ்சல்ஸ், கலிபோர்னியா, வோஷிங்டன், மெயிலாண்ட், போஸ்டன், சந்டாரூஸ் தீவு, அனகாப்பாதீவு போன்ற இடங்களுக்கும் சென்று இயற்கை பாதுகாப்பு மற்றும் சமுத்திர பாதுகாப்பு தொடர்பாக ஆராயப்பட்டு விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது.

கடல் வாழ் உயிரனங்களின் பாதுகாப்பு தொடர்பான கருத்தமர்வில் எமது நாட்டு வட மாகாண அமைச்சர் அமெரிக்க அரசால் அழைக்கப்பட்டு கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (இ-3-9)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## பொன்னாவரசு

Botanical Name: Cassia sophera
Family:Caesalpiniaceae
Engl:Senna sophera
Sinh:Uruthora



இது பெருஞ்செடி வகையைச் சார்ந்தது. 1-3 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது. இலைகள் நீள்வட்ட அல்லது வேலுருவானதென இருக்கும். பூக்கள் மஞ்சள் நிறமுடையவை. கொத்தாகப்பூக்கும். கூட்டிலை அமைப்புடையது. சிறிய விதைகள் கடும் மண்ணிறம் உடையது. மாசி, பங்குனி மாதங்களில் பூக்களை காணலாம். விதைகள் மூலம் இதனை இனவிருத்தி செய்யலாம்.

யாழ்.மாவட்டங்களில் தோட்டவெளிகளில் நிழலை விரும்பும் தாவரமாக வளரக்கூடியது.

இதன் இலையை துவையல் செய்து சாதத்துடன் கூட்டி உண்ண உடலில் உண்டாகும் வெப்பம் தணிந்து இலகுவில் மலம் கழியும். இதனைப் பருப்புடன் சேர்த்தும் கடைந்தும் உண்ணலாம்.

பொன்னாவரசு இலையை அம்மியில் வைத்து நன்கு அரைத்து கறிமஞ்சள் சேர்த்து மீண்டும் நன்கு அரைத்து சிரங்கு உள்ள இடத்தில் கனமாகப்பூசி 15 நிமிட நேரம் ஊற வைத்து சிரங்குள்ள இடத்திலும் ஏனைய இடங்களிலும் தேய்த்து நன்கு குளித்து பின்பு ஈரம் உலர்ந்த பின் சிரங்குள்ள இடத்தில் தேங்காய் எண்ணெய் தடவிவர இலகுவில் சிரங்குகள் ஆறும்.

பொன்னவரசு வேர்- 30 கிராம், சீரகம், மிளகு, சுக்கு ஒவ்வொன்றும் 5 கிராம் எடுத்து இலேசாக தட்டி சட்டியில் போட்டு நீர்விட்டு குடிநீர் காய்ச்சிக் குடித்து 30-60 மில்லி காலை, மாலை பருகிவர கல்லீரல், மண்ணீரல் சம்பந்தமான நோய்களுக்கு சிறந்ததாகும்.

இதன் இலைகளை பழச்சாறு விட்டு அரைத்து வட்டக்கடிக்கு பூசலாம்.

காமாலை நோய்க்கு இதனுடன் இலைகளை ஒரு கைப்பிடி அளவு எடுத்து 50 மில்லி நீரில் 15-20 நிமிடநேரம் ஊறவைத்து வடித்து காலையில் எடுக்கலாம்.

வட்டக்கடிக்கு இதன் இலைச் சாறுக்கு பதில் இதன் வேரை பழச்சாறு விட்டரைத்து பூசலாம்.

இதனுடைய இலை, வேர், வேரப்பட்டை, விதை இவைகள் எல்லாவற்றையும் சேர்த்து குடிநீர் காய்ச்சி 30 மில்லி காலையில் கொடுக்க சிறுநீர் நன்கு கழியும்.

பொன்னாவரைக் கீரையை அடிக்கடி சமைத்துச் சாப்பிட்டு வந்தால் உடலில் அதிக வியர்வை உண்டாகி மேலும் மலம் மற்றும் சிறுநீர் வழியாக உடலில் உள்ள அதிகபடியான நீர் வெளியேறி உடற்பருமன் குறையும்.

பொன்னாவரைக்கீரையின் விதை மற்றும் இலைகளை நன்றாக விழுது போல அரைத்து 5 கிராம் அளவு சாப்பிட்டு வெந்நீர் அருந்த மலம் நன்கு கழியும். பொன்னாவரைக் கீரையின் விதை களை நன்றாக அரைத்து சாப்பிட்டு குளிர்ந்த தண்ணீரைக் குடித்தால் உடல் அசதி மறைந்து புத்துணர்ச்சி உண்டாகும்.

பொன்னாவரைக் கீரை விதைகளை பசும்பால் சோதது அரைத்து ஒரு கிராம் அளவு குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் கக்குவான் இருமல் நீங்கும்.

பொன்னாவரசு இலைகளுடன் மஞ்சள் சேர்த்து அரைத்து உடலில் பூசிக்குளித்தால் சொறி, சிரங்கு தோல் பாதிப்புகள் மறையும்.

பொன்னாவரசுக் கீரையை நன்கு அலசி சுத்தம் செய்து 200 மில்லி நீரில்போட்டு 1/3 பங்காக சுண்டும் வரை காய்ச்சி 30 மில்லி அளவு காலை, மாலை குடிந்துவந்தால் மனநல பாதிப்புகள் குணமடையும்.

**பொன்னாவரை இலை அடை**

ஒரு கப் குப்பைமேனி இலை; அரை கப் சிவத்தப்பச்சரிசி, பாசிப் பயறு அரை கப், சிறிது உப்பு, தேங்காய்ப்பூ சிறிதளவு

பொன்னாவரசு இலையுடன் பச்சரிசி, பாசிப்பயறு இவற்றை கிரைண்டரில் நன்கு அரைத்து அரித்து எடுத்து தேங்காய்ப்பூ, உப்பு சேர்த்து குழைத்து அடையாகத் தட்டி நல்லெண்ணெய் அல்லது நெய்யில் பொரித்து சாப்பிட்டுவர உடலில் நோயெதிர்ப்பு சக்தி அதிகரிப்பதுடன் மலம் நன்கு கழியும். நீரிழிவு நோயாளிகள் மேற்படி அடையை தேங்காய்ப்பூ சேர்க்காமல் பயன்படுத்தலாம்.

**பொன்னாவரை இலைசூப்**

பொன்னாவரை இலை 4 கைப்பிடி, வெங்காயம் கால் கப், தக்காளி-2, பெருஞ்சீரகம் தேவையான அளவு, சீரகம் தேவையான அளவு, துவரம் பருப்பு-50 கிராம், இலவங்கம் பட்டை ஒரு துண்டு, இஞ்சி ஒரு துண்டு, உள்ளி 5 பல், மல்லி 25 கிராம், உப்பு தேவையான அளவு, மிளகு-5

மல்லியை நன்கு அரைத்து பெருஞ்சீரகத்தையும் சேர்த்து அரைக்காத பொன்னாவரை இலைகளை கழுவி அரிந்து நீரில் வேகவிடவும். அதில் அரைத்த விழுது, உப்பு, வெங்காயம் அரைவாசி சேர்த்து, துவரம்பருப்பையும் வேகவைத்து கடைந்து வேகவைத்து வெந்த பொன்னாவரை இலையில் சேர்க்கவும். வாணலியை அடுப்பில் வைத்து சிறிது நெய் சேர்த்து அதில் சீரகம், இலவங்கம்பட்டை போட்டு வெடித்து சிவந்ததும் இஞ்சி, உள்ளி அரைத்து விழுதாக போட்டு தக்காளி, மிகுதியாக வெங்காயம் போட்டு கிளறி சூப்பை ஊற்றி கிளறிவிடவும். தேவையானால் மிளகுத்தூள் சிறிதளவு சேர்க்கவும். கலக்கி ஆற விட்டபின் சூப்பாக பருகலாம்.

உடற்சூடு, உடல்வலி ஆகியவை நீங்கி மலம் நன்கு கழிவதுடன் நாட்பட்ட தோல் நோய் உடையவர்களுக்கும் நீரிழிவு நோயாளர்களுக்கும் சிறந்த சூப் வகையாகும்.

**குறிப்பு:** பொன்னாவரசு கீரையை நீரிழிவு நோயாளிகள் வாரத்தில் 3 நாட்கள் சாப்பிடலாம். உடற்பருமனை குறைக்க முக்கியமான மூலிகை பொன்னாவரசு ஆகும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய வங்கி ஆளுநர் வெளிநாட்டுக்கு விஜயம்

(கொழும்பு)

**பணி நிமிர்த்தம் மத்திய வங்கியின ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.**

மத்திய வங்கியின் உள்ளகத் தகவல்களை ஆதாரம் காட்டி கொழும்பு ஊடகமொன்று இதனைத தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு விஜயத்தை முடித்துக்கொண்டு ஒரு மாதத்திற்கு முன்னதாக மத்திய வங்கியின் ஆளுநர் நாடு திரும்ப உள்ளதாக தெரிவிககப்படுகிறது.

மத்திய வங்கியின் ஆளுநர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டதாக சில ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தன.

எனினும், உத்தியோகபூர்வ நோக்கம் ஒன்றிற்காக மத்திய வங்கியின் ஆளுநர் வெளிநாட்டு விஜயத்தை மேற கொண்டதாக மத்திய வங்கித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் காலப்பகுதியில் பதில் மத்திய வங்கியின் ஆளுநராக பிரதி மத்திய வங்கியின் ஆளுநர் டாக்டர் நந்தலால் வீரசிங்க கடமையாற்றவுள்ளார். (இ-7)

# மகேந்திரனை காப்பாற்ற நாடாளுமன்றம் கலைப்பு

## ரோசி மறுப்பு

(கொழும்பு)

மத்திய வங்கியின் ஆளுநரை தொடர்புபடுத்திய சர்ச்சைக்குரிய மத்திய வங்கி முறிக்கொள்வனவு விடயத்தை மறைக்க முயற்சிக்கப்பட்டதாக வெளியான குற்றச்சாட்டை ஐக்கிய தேசியக்கட்சி மறுத்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமையன்று நாடாளுமன்றம் கலைக்கப்படும் வரை, மத்திய வங்கி முறி தொடர்பில் பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக்குழுவான கோப் நடத்திவந்த விசாரணைகள் முடிவுக்கு வரவில்லை.

நேற்று அந்தக்குழு மீண்டும் கூடுவதாக இருந்தது என்று கோப் குழுவின் அங்கத்தவரான சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை காரணமாக அந்தக் குழுவின் செயற்பாடும் செயலிழந்தது.

மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை கோப்குழு குற்றவாளியாக இனங்கண்டமை காரணமாகவே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது என்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் கோப் குழுவின் செயற்பாடுகள் நிறுத்தப்படும் வரை அந்தக்குழு, அர்ஜுன் மகேந்திரனை குற்றவாளியாக இனங்காணவில்லை என்று ரோசி சேனாநாயக்க மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)




பருத்தித்துறை புனித தோமஸ் றோ.க.பாடசாலையின் 15 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மாகாண மட்டத்தில் சம்பியனான அணியினரைப் படத்தில் காணலாம்.

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 250 | 220 |
| தக்காளி | 120 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 70 | 80 | 60 |
| கோவா | 100 | 100 | 100 | 80 |
| கரட் | 160 | 150 | 280 | 150 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 80 | 80 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 140 | 150 |
| வெண்டிக்காய் | 140 | 140 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 160 | 100 |
| பயற்றங்காய் | 120 | 120 | 60 | 100 |
| லீக்ஸ் | 120 | 150 | 200 | 100 |
| பீற்றூட் | 130 | 100 | 160 | 80 |
| கறிமிளகாய் | 250 | 150 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 120-200 | 300 | 300 | 300 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 180 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 15 | 20 |
| தேசிக்காய் | 120 | 80 | 60 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-50 | 50 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 200 | 120 | 160 | 120 |
| வெங்காயப்பூ | 300 | 250 | 280 | 160 |
| முள்ளங்கி | 120 | 80 | 100 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 20 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 413


டனி அக்மல்



தாரணி




கஜன் மகாதேவன்



கஜேந்திரன்




க.மதீசன்



ராசரத்தினம் ரஜி



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மோடியின் மௌனம்! திணறும் பா.ஜ.க.!

'ஊழல் எதிர்ப்பு' என்பதை உரக்கச் சொல்லி பதவிக்கு வந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு 'ஐ.பி.எல். கிரிக்கெட்' உருவத்தில் ஆபத்து பறந்து வந்திருக்கிறது.

காங்கிரஸ் கட்சியின் பிரதமர் மன்மோகன்சிங்கை 'மவுன் சிங்' என்று கேலி செய்த பா.ஜ.க.வினர், இப்போது பிரதமர் மோடியின் மௌனத்தைப் பார்த்து எதிர்கட்சிகளுக்கு பதில் சொல்ல முடியாமல் திணறுகிறார்கள்.

இருபது நாட்களாக டெல்லியில் அரசு நடக்கிறதோ இல்லையோ 'கிரிக்கெட்' அரசியல் தூள் பறக்கிறது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் 'ஐ.பி.எல் கிரிக்கெட்' கிங் லலித் மோடிக்கு உதவிய விவகாரம் ஓய்வு எடுக்கும் நேரத்தில், ராஜஸ்தான் மாநில முதல்வர் வசுந்தரா ராஜே 'லலித் மோடிக்கு ஆதரவாக வாக்குமூலமே கொடுத்தது' ஏக பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இது போதாது என்று மத்திய கல்வி அமைச்சர் ஸ்மிரிதி இராணி தேர்தலில் போட்டியிடும் போது கல்வித் தகுதி பற்றி வேட்பு மனுவில் முன்னுக்குப் பின் முரணாகக் கூறியது 'கோர்ட் விசாரணைக்கு உகந்தது' என்று தீர்ப்பளிக்கப்பட்டுவிட்டது.

மொத்தத்தில் மோடி அமைச்சரவையில் இருக்கும் இரு பெண் அமைச்சர்கள் (சுஸ்மா சுவராஜ், ஸ்மிரிதி இராணி), அவரது கட்சியைச் சார்ந்த மாநில முதலமைச்சர் வசுந்தரா ராஜே ஆகியோரின் 'ராஜினாமாக்கள்' எதிர்கட்சிகளால் கோரப்படுகின்றன.

ஆட்சிக்கு வந்த ஒரு வருடத்தில் இப்படி மூன்று பெண்களை அமைச்சர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ற இடியப்பச் சிக்கலைச் சந்தித்த முதல் பிரதமர் நரேந்திரமோடியாகிறார். 'லலித் கேட்' இன்றைக்கு 'டெல்லி கேட்டை' அனல் பறக்க வைக்கிறது.

இம்மூவர் தவிர வசுந்தரா ராஜே மகனும், பா.ஜ.க. எம்.பி.யுமான துஷ்யந்தின் நிறுவனத்துக்கு லலித் மோடி நிறுவனத்திலிருந்து 'மாறியிருக்கும் பணம்' ஊழல் தீபத்தை ஏற்றியிருக்கிறது.

இந்த 'பண பரிவர்த்தனை' ஏறக்குறைய 2 ஜி வழக்கில் கலைஞர் டி.வி.க்கு 200 கோடி ரூபாய் கைமாறியதாக கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கு இணையானது.

ஏனென்றால், துஷ்யந்தின் நிறுவனம் 2 இலட்சம் ரூபாய் நஷ்டத்தில் இயங்கிய நிறுவனம். அதன் பங்கு பத்து ரூபாய் மதிப்பில் இருந்திருக்கிறது.

பத்து ரூபாய் உள்ள ஒரு பங்கை லலித் மோடியின் நிறுவனம் 96,000 ரூபாய் கொடுத்து வாங்கியதில் 11 கோடி ரூபாய் கைமாறியிருக்கிறது.

'கலைஞர் டி.வி. லோன் வாங்கி திருப்பிக் கொடுத்தது 'வாலா' என்று அமலாக்கத்துறை குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்திருக்கும் போது துஷ்யந்த் நிறுவனத்தின் பண பரிவர்த்தனையை மட்டும் 'வர்த்தக ரீதியான நடவடிக்கை' என்றும், "வங்கி மூலம் நடைபெற்றுள்ளது. வருமான வரிக் கணக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் அரசாங்கம் எங்கிருந்து வந்தது?' என்றும் நாட்டின் நிதி அமைச்சரே பதில் சொல்லி சமாளிக்க வேண்டிய நிலை வந்திருப்பது ஏன் என்பதுதான் அனைவரின் கேள்வி.



சரவெடி போல் கிளம்பியுள்ள இந்த சர்ச்சைகளை சமாளிக்கும் தூதுவர்களாக மூவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். முதலாமவர் நிதியமைச்சர் அருண்ஜேட்லி.

இரண்டாவதாக உள்துறை அமைச்சராக இருக்கும் ராஜ்நாத் சிங். மூன்றாமவர் பா.ஜ.க.வின் தலைவராக இருக்கும் அமித்ஷா. இம்மூவரில் ஜேட்லியும், அமித் ஷாவும் பிரதமர் நரேந்திரமோடியின் வலது கரமும் இடது கரமுமாக இருப்பவர்கள்.

ஆனால், உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அப்படியில்லை. மோடியின் நிழலிலிருந்து சற்று விலகி நிற்பவர்.

ஆனால் 'சுஷ்மா உள்ளிட்டவர்களின் பிரச்சினையை தீர்க்க ராஜ்நாத் சிங் முன்னிறுத்தப்படுவதிலேயே ஓர் அரசியல் இருக்கிறது' என்று கூறும் காங்கிரஸ் மூத்த தலைவர்கள், 'பா.ஜ.க.வுக்குள் இப்போதைக்கு பிரதமர் மோடிக்கு போட்டியாக இருப்பவர் ராஜ்நாத் சிங்தான். அவருக்கு வசுந்தரா ராஜே, அத்வானி ஆதரவளிப்பார்கள். ஆகவே, இந்த புகார்களை அவரை விட்டே சமாளிக்க விடுவோம். கெட்ட பெயர் வந்தால் ராஜ்நாத் சிங்கின் இமேஜ்தானே போகும் என்பதே ஒளிந்திருக்கும் வியூகம்' என்கிறார்கள்.

அந்த வகையில்தான் இந்த 'மூன்று பெண்கள் அமைச்சர்கள் மீதான புகார்கள்' பற்றி பதில் சொல்ல 'மூன்று தூதுவர்களில்' ஒருவராக ராஜ்நாத் சிங் களததுக்கு வந்துள்ளார் என்கிறார்கள்.

'துணிச்சல் மிக்க தலைவர', 'உறுதியாக முடிவு எடுப்பவர்' போன்ற கருத்துக்கள்தான் பிரதமர் நரேந்திரமோடியை மையப்படுத்தி செய்யப்படும் பிரசாரங்கள்.

ஆனால், இன்றைக்கு இந்த மூன்று பெண் அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாமல் அவர் திணறுவது அப்பிரசாரத்துக்கு சோதனையை ஏற்படுத்திவிட்டது.

அதற்கு காரணம் சுஸ்மாவை விலக்கினால், வசுந்தரா ராஜேயை விலக்கச் சொல்வார்கள். இந்த இருவரையும் விலக்கினால், ஸ்மிரிதி இராணியை விலக்கக் கோருவார்கள்.

இப்படி அடுத்தடுத்து அமைச்சர்களை விடுவித்துக் கொண்டிருந்தால் ஆட்சிக்கு வந்த ஒரு வருடத்திலேயே பா.ஜ.க. அரசு ஊழல் அரசு என்ற முத்திரை மக்கள் மத்தியில் சென்றுவிடும் என்று கருதுகிறார் பிரதமர் நரேந்திர மோடி. அதுவும் குறிப்பாக அடுத்து வரப்போகும் பீஹார் சட்டமன்றத் தேர்தல் மிக முக்கியமானது.

அந்தத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றால்தான் ராஜ்ய சபையில் அரசுதான் விரும்பும் மசோதாக்களைக் கொண்டு வருவதற்கு வசதியாக இருக்கும் என்று பா.ஜ.க. நினைக்கிறது. பிரதமர் நரேந்திரமோடியும் நினைக்கிறார்.

ஆனால் இப்போது வந்துள்ள அமைச்சர்களுக்கு எதிரான புகார்கள் அதற்கு உலை வைத்து விடுமோ என்ற அச்சம் பா.ஜ.க.வில் உள்ள அனைத்து தலைவர்களுக்கும் வந்திருக்கிறது.

அதனால்தான் பிரதமரும் தவிக்கிறார். நிதியமைச்சர் அருண் ஜேட்லி, 'அரசாங்கத்தில் அழுக்குப் படிந்த அமைச்சர்கள் யாரும் இல்லை' என்று அடித்துச் சொல்கிறார்.

'மூன்று அமைச்சர்களுமே ராஜினாமா செய்ய மாட்டார்கள். அவர்கள் எந்த தவறும் செய்யவில்லை' என்று உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சொல்கிறார்.

ஆனால், இப்படி அனைவரும் 'ஊழல் இல்லை' 'யாரும் ராஜினாமா செய்ய மாட்டார்கள்' என்று கூறியிருக்கின்ற நேரத்தில், 'என் மீது 'வாலா' புகார்' தெரிவிக்கப்பட்டவுடன் ராஜினாமா செய்தேன்.

மக்கள் நம்பிக்கையை அரசில் இருப்பவர்கள் காப்பாற்ற வேண்டும' என்று கூறி நெருக்கடி கொடுத்திருக்கிறார் முன்னாள் துணை பிரதமர் அத்வானி.

அதுமட்டுமின்றி, மோடி பதவியேற்ற தினத்திலேயே '75 வயதிற்கு மேற்பட்டவர்கள் மூளைச் சாவு அடைந்தவர்கள் என்று மோடி கருதிவிட்டார்' என்று முன்னாள் நிதி அமைச்சர் யஷ்வந்த் சின்காவும் கடுமையாக மோடியை தாக்கிப் பேசியுள்ளார்.

எல்லாவற்றுக்கும் மேலாக மோடிக்கு நம்பிக்கையாக இருக்கும் மஹாராஷ்டிரா பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் ஒருவரே, 'நரேந்திரமோடி சர்வாதிகாரியாக செயறபடுகிறார' என்ற ரீதியில் வேறு ஒருவரிடம பேசிக் கொண்டிருந்த 'டேப்' வெளியாகி சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இப்படி 'மோடி எதிர்ப்பு' எல்லாப் பக்கத்திலிருந்தும் பா.ஜ.க.விற்குள் மையம்கொண்டிருக்கிறது. அது என்றைக்கு எரிமலை போல் வெடிக்கும் என்பதுதான் இப்போதைய கேள்வி.

இது மாதிரி பிரச்சினையை ஆட்சிக்கு வந்தவுடன் சந்தித்தவர்களில் முக்கியமான பிரதமர்கள் என்று எடுத்துக் கொண்டால் ஒருவர் சந்திரசேகர். அவர் ஊழல் பிரச்சினையை சந்திக்கவில்லை.

'ராஜீவ் காந்தி இல்லத்தை வேவு பார்த்தார்' என்ற புகாருக்கு உள்ளானார். ஆட்சிக்கு வந்த சில மாதங்களிலேயே பதவியிழந்தார்.

அதேபோல் இன்னொருவர் வி.பி.சிங். 'ராமர் கோயில் பிரச்சினை' 'மண்டல் கமிஷன் பிரச்சினைகளில்' பிரதமராக இருந்த வி.பி. சிங் சிக்கினார். அவரும் ஒன்றரை வருடத்தில் ஆட்சியை இழந்தார்.

இதேபோன்ற சிக்கல்களை பிரதமராக இருந்த தேவகவுடா, ஐ.கே.குஜ்ரால் போன்றோரும் சந்தித்தார்கள். அவர்களும் குறுகிய காலத்தில் பதவியிழந்தார்கள்.

வாஜ்பாயோ, டாக்டர் மன்மோகன்சிங்கோ ஆட்சிக்கு வந்த முதல் ஐந்து வருடத்தில் இப்படிப்பட்ட சோதனைகள் எதையும் சந்திக்கவில்லை.

ஆனால், இப்போது பிரதமராகியிருக்கும் நரேந்திரமோடி ஒரு வருடம் முடிந்த கையோடு இவ்வளவு பெரிய பிரச்சினையை சந்தித்து இருக்கிறார். இந்த சூழ்நிலையில் மோடி ஆட்சிக்கு வந்தவுடன் ஓரங்கட்டப்பட்ட தலைவர்கள் எல்லாம் ஓரணியில் சேருகிறார்கள்.

அதுதான் மோடி எதிர்ப்பு அணி. அவர்கள் வெளிப்படையாக வெளியில் வந்து மோடிக்கு எதிராக போராடவில்லை என்றாலும், கட்சிக்குளளிருந்து கொண்டு அன்று இந்திரா காந்திக்கு தொல்லை கொடுத்தது போல் இன்றைக்கு பா.ஜ.க. தலைவர்கள் மோடிக்கு தொல்லை கொடுக்கிறார்கள்.

இதிலிருந்து மீண்டு வர இந்திய பிரதமர் நரேந்திரமோடி கையில் வைத்திருக்கும் ஒரே ஆயுதம் 'மௌனம்'! அந்த மௌனம் எவ்வளவு காலம் கைகொடுக்கும்?

-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விமானப் பொதிகளின் ஊடாக போதைமாத்திரைகள் கடத்தல்

(கொழும்பு)

விமானப் பொதிகளின் ஊடாக பாரியளவில் போதை மாத்திரைகள் நாட்டுக்குள் கடத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

விமானப் பொதிகளின் ஊடாக இலங்கைக்கு அனுப்பி வைக்கபபடும் கடிதங்கள் மற்றும் பொதிகளில் மிகவும் நுட்பமான முறையில் போதை மாத்திரைகள் கடத்தப்படுவதாக தபால் திணைக்கள சிரேஷ்ட அதிகாரியொருவர் சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், இந்தியா, சிங்கப்பூர் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இவ்வாறு பல்வேறு போதை மாத்திரைகள் கடத்தப்படுகின்றன.

வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் திட்டமிட்ட கும்பல் ஒன்று இவ்வாறு போதை மாத்திரைகளை கடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் பல பகுதிகளது பொய் பெயர்கள் மற்றும் போலி முகவரிகளைப்பயன்படுத்திபோதைப் பொருள் கடத்தப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக தருவிக்கப்படும் போதை மாத்திரைகள் மாணவர்கள் உள்ளிட்ட இளைஞர் யுவதிகளுக்கு வழங்கப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது (இ-7)

## அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதாந்த பூரணை தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் இன்று புதன் கிழமை காலை 7 மணி முதல் யாழ். கந்தர்மடத்திலுள்ள இந்து சமயப் பேரவையின் ஸ்ரீநடராஜப் பெருமான் கோவிலில் நடைபெறவுள்ளது.

திருமுறை மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இம்முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணமும் இடம்பெறவுள்ளது. (இ-3)

# மைத்திரி - மகிந்த இணைந்தால் அரசியலில் இருந்து விலகுவேன்

## ஹரின் எச்சரிக்கை



(கொழும்பு)

**மைத்திரியும் மகிந்தவும் இணைந்தால் தாம் அரசியலில் இருந்து விலகிக் கொள்ளப்போவதாக ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரண்டாம்நிலை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமக்கு எதிரானவர்களை பழிவாங்கவே மகிந்த ராஜபக்ஷ பதவிக்கு வரத்துடிக்கிறார் என்று பதுளையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் ஹரின் பெர்னாண்டோ குற்றம் சுமத்தியுள்ளார்.

மஹிந்த செல்கின்ற விஹாரைகளில் சாது சாது என்று சொல்வதற்கு பதிலாக ஜெயவேவே என்ற சத்தத்தையே கேட்கமுடிகின்றது.

இது வெட்கப்படவேண்டிய செயல் என்றும் ஹரின் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நெல்விதைகளை வழங்குவதில் 298 கோடி ரூபா நிதி மோசடி

(கொழும்பு)

நெல் விதைகளை இலவசமாக வழங்குவதற்காக கடந்த வருடம் 298 கோடி ரூபாய் பயன்படுத்தப்பட்டுள்ளதாக நிதி அமைச்சில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் 298 கோடி ரூபாய் பணம் தொடர்பில் பாரிய அளவிலான சந்தேகம் எழுந்துள்ளதாக விவசாயத் திணைக்கள தகவல் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் நிலவிய சீரற்ற கால நிலை காரணமாக விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் இலவசமாக நெல் விதைகள் வழங்குவதாக பிரசாரங்கள் இடம்பெற்றது.

அது முன்னாள் ஜனாதிபதியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக நுட்பமாக பயன்படுத்தப்பட்டதாக முன்னர் தகவல் வெளியாகியது.

எனினும் நிதி அமைச்சு கணக்கிற்கமைய இலவச நெல் விதைகள் வழங்குவதற்காக 298 கோடி செலவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.

விவசாயத் திணைக்கள தகவல் வட்டாரத்தின் தகவலுக்கமைய இப்பணம் தொடர்பில் ஏற்றுக்கொள்ள கூடிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

ஒதுக்கப்பட்டதாக கூறப்பட்ட 298 கோடி பணத்தில் பாரிய அளவிலான தொகை ஒன்று மோசடி செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

# பெயர் எழுதி சிறை சென்ற யுவதிக்கு வேலைவாய்ப்பு

## கிழக்கு முதல்வர் நடவடிக்கை



சிகிரியா ஓவியத்தில் தனது பெயரை எழுதிய யுவதிக்கு அரச துறையில் வேலைவாய்ப்பினை வழங்க அவரின் சுயவிபரக் கோவையினை கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் பெற்றுக்கொண்டுள்ளதாக கிழக்கு மாகாண சபைத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 14.02.2015 அன்று சித்தாண்டி, விநாயகர்புரத்தினைச் சேர்ந்த சின்னத்தம்பி உதயசிறி (வயது-27) என்ற யுவதி சிகிரியா ஓவியத்தில் தனது பெயரை எழுதினார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் சிறை வாசம் அனுபவித்து கடந்த வாரம் விடுதலையாகியிருந்தார்.

இந்த நிலையில் குறித்த யுவதிக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் அரச துறையில் தொழில் வாய்ப்பினை வழங்க நேற்றுமுன்தினம் உதய சிறியிடம் இருந்து சுயவிபரக் கோவையைப் பெற்றுக்கொண்டார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### இழப்பது எப்படி ?

ஒருவன் ராமகிருஷ்ணரைத் தேடி வந்தான். அவன் ஆயிரம் பொற்காசுகள் வைத்திருந்தான். அதை அவரிடம் கொடுத்து இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மிகவும் பணிவாகக் கேட்டுக்கொண்டான். அவர் பார்த்தார்.

“இது எனக்குத் தேவை இல்லை. ஆனாலும் உன் மனதைப் புண்படுத்த நான் விரும்பவில்லை. அதனால் நீ கொடுப்பதை வாங்கிக் கொள்கிறேன்” என்றார். வாங்கிக் கொண்டார். அதன் பின்னர் “இதோ பார் இனிமேல் இது எல்லாம் என்னுடையது தானே” என்றார்.

“ஆமாம் அதையெல்லாம் நான் உங்களுக்கே கொடுத்து விட்டேன்” என்றான்.

“சரி... இப்பொழுது நீ எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்” என்றார்.

“என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்” என்றார். “இந்த நாணயங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு போய் கங்கை நதியில் எறிந்து விட்டுவா!” என்றார்.

இவனுக்கோ அதிர்ச்சி. என்ன செய்வது. இனிமேல் அது முடியாது என்றும் சொல்ல முடியாது. ஏனெனில், அந்த நாணயங்களையெல்லாம் அவருக்கே கொடுத்து விட்டான். இனிமேல் அதெல்லாம் இவனுடையது அல்ல.

பேசாமல் அவ்வளவையும் அள்ளிக்கொண்டு ஆற்றங்கரைக்குப் போனான். போனவன் திரும்பி வரவேயில்லை. ராமகிருஷ்ணருக்கு சந்தேகம் வந்துவிட்டது. அங்கிருந்த ஒருவரை அவன் எங்கே? அவனுக்கு என்ன நடந்தது? என்று போய் பார்த்துவிட்டு வா என்று அனுப்பினார். அவர் போய்ப் பார்த்துவிட்டு வந்து விபரத்தைக் கூறினார்.

“அவன் கங்கைக்கரையில் உட்கார்ந்து கொண்டு ஒவ்வொரு நாணயமாக ஒன்று இரண்டு என்று எண்ணி வீசிக்கொண்டிருக்கிறான். அவனைச் சுற்றி ஒரு கும்பல் நின்றுகொண்டு அவனைத் தடுத்துக் கொண்டிருக்கிறது” என்றார். இதைக் கேட்டதும் ராமகிருஷ்ணர் அங்கு புறப்பட்டுச் சென்றார்.

“என்ன இப்படி பண்ணிக் கொண்டிருக்கிறாய்? நான் உன்னை அந்த நாணயங்களை கங்கையில் வீசி எறியச் சொன்னேன். நீ ஏன் அதை எண்ணிக் கொண்டிருக்கிறாய்?” என்றார்.

பழக்கம்தான் காரணம். நான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாக சேமித்து வைத்தேன். இப்பொழுது என்னிடம் நிறையவே இருக்கிறது. உங்களுக்கு ஆயிரம் நாணயங்களை கொடுக்க வேண்டும் என்பதுதான் எனது ஆசை என்றான். அதற்கு ராமகிருஷ்ணர்,

“ஒரே நேரத்தில் எல்லாவற்றையும் சம்பாதித்திருந்தால் நீ எண்ணுவது பொருத்தமாக இருக்கும். எல்லாவற்றையும் இழக்கும்போது எண்ணிக் கொண்டு இருப்பது என்பது சரியான மூடத்தனம். ஒரே தடவையாக எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விடு” என்றார்.

இங்கு இழப்பது என்பது ஓர் உயர்ந்த நிலை . இதை நம்முடைய யதார்த்த வாழ்க்கையில் சம்பந்தப்படுத்தி பார்த்து குழம்பிக் கொண்டிருக்கக்கூடாது. இழக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு இருக்கும் காசையெல்லாம் ஆற்றிலும் குளத்திலும் எறிந்து கொண்டிருந்தால் பார்ப்பவர்கள் சந்தேகப்படுவார்கள்.

இதில் நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், எதையாவது ஒன்றை இன்னொருவருக்கு கொடுக்க வேண்டும் என்று விரும்பினால் அதை மனப்பூர்வமாக கொடுக்க வேண்டும். கொடுத்துவிட்டு அதையே நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது.

நம்ம ஆள் ஒருவர் ஒரு நூறு ரூபாய் தாளை எடுத்து தனது நண்பர் ஒருவரிடம் கொடுத்து “இது உனக்குத் தான் வைத்துக்கொள்” என்றார். அவர் பார்த்தார்.

“இது இனிமேல் எனக்குத்தானே சொந்தம்?” என்றார்.

“ஆமாம்” என்றார்.

“அப்படியானால் எனக்காக நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும்” என்றார்.

“சொல்லுங்கள் செய்கிறேன்” என்றார்.

“இந்த நூறு ரூபாய் நோட்டை தீ வைத்து கொளுத்திவிடு” என்றார்.

இவர் அதிர்ச்சியுடன் அவரைப் பார்த்தார்.

அதற்கு அவர், “நீ எனக்கு அன்பாக கொடுத்த இது கள்ள நோட்டு என்று எனக்குத் தெரியும். சீக்கிரம் கொளுத்து” என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப் பெயர்ச்சி பலன்கள்



**ஏழாமிடத்தைப் பார்க்கிறது!**
**இனிய வரன்கள் வருகிறது!**
**கவர்ச்சிகப் பேசி காரிங்களைச் சாதித்துக் கொள்ளும் மிதுன இராசி நேயர்களே!**

பிறருக்கு யோசனை சொல்வதில் வல்லவர்களாக விளங்கும் உங்களுக்கு வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டும் நேரம் வந்து விட்டது. வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள, வரும் குருப்பெயர்ச்சி உறுதுணையாக இருக்கப் போகிறது. மாற்றங்கள் எதிர்பார்த்தபடி வந்து சேரும். ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்போடு இனி அனைத்துக் காரியங்களிலும் ஜெயித்துக் காட்டப் போகிறீர்கள்.

இதுவரை 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். வெற்றிகள் ஸ்தானம் என்று கருதப்படும் இடம் மூன்றாமிடமாகும். எனவே, ஆனி 20 ஆம் திகதி முதல் அண்ணன் தம்பி இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு அகலும். அன்னியர்களால் ஏற்பட்ட கவலை மாறும்.

**சுறுசுறுப்புக்கு சொந்தக்காரர்களாக விளங்குபவர்கள்!**

யாரையும் பார்த்த மாத்திரத்தில் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டு விடுவீர்கள். கீர்த்தி மிக்கவர்களாகவும், கேட்டவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுபவர்களாக திகழ்வீர்கள். பாதி வயதிற்கு மேல் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து பெற்றவர்களாக மாறுவீர்கள். இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்கு சிம்ம குரு எந்தெந்த வழிகளில் எல்லாம் வெற்றிதரப்போகிறார் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

ணத்தில் வரும் எதிர்மறைச் சிந்தனைகளை விலக்குங்கள். பொறுமையைக் கடைப்பிடித்தால் பெருமை காண இயலும். அருள் தரும் ஆலயங்களைத் தேர்ந்தெடுத்து வழிபட்டால்பொருள்வளமும்பெருகும். புகழும்கூடும்.

மகம் நட்சத்திரத்தில் குரு சஞ்சரிக்கப் போவதால் மிருகசீரிட நட்சத்திரத்தில் பிறந்தவர்களும், புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் தாரா பலம் பெற்ற நாளில் சிறப்பு பரிகாரங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். அப்பொழுதுதான் தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய இயலும். தொலை தூரத்திற்கு செல்லும் வாய்ப்புகளிலிருந்த தாமதங்களும் அகலும்.

ஜனவரி 2016 இல் ராகு-கேது பெயர்ச்சி நிகழவிருக்கிறது. 3 ஆம் இடத்திற்கு ராகுவும் வரப்போகிறார். எனவே சகோதர வர்க்கத்தினரால் சச்சரவுகள் உருவாகி மறையும். பூர்வீக சொத்துக்களில் எற்பட்ட பஞ்சாயத்துக்கள் தாமதமாகும். சர்ப்பசாந்திப்பரிகாரங்களும் சனி பிரீதியும் செய்து கொள்வது நல்லது.

**குரு பார்வை கொடுக்கும் யோகங்கள்!**

இதுவரை 2 இல் சஞ்சரித்து வந்த குரு பகவான் இப்பொழுது மூன்றாமிடத்தில் சஞ்சரித்து 7, 9, 11 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார் அல்லவா? அதன் பார்வை பதிவதன் மூலம் அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. நவக்கிரகங்களில் குருவின் பார்வை ஒன்றுக்குத்தான் தீய சக்திகளை தூய சக்தியாக மாற்றும் ஆற்றல் உண்டு.

**ஏழினை குருதான் பார்த்தால்**
**இல்லறம் சிறப்பாய் வாய்க்கும்!**
**ஒன்பதை குருதான் பார்த்தால்**
**ஒளிமயம் வாழ்வில் சேரும்!**
**பதினொன்றை குருதான்**
**பார்த்தால்**
**பணத்தேவை பூர்த்தியாகும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அழைப்புகளை சுய ஜாதகத்தில் திசாபுத்தி பலம் பெற்றவர்கள் ஏற்றுக் கொள்ளலாம்.

குரு பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால் பெற்றோர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும். பங்காளிப் பகை மாறும். பூர்வீக சொத்துக்களில் முறையான பங்கீடுகள் வந்து சேரும். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். பயணங்களால் பலன் உண்டு. பணப் புழக்கம் அதிகரிக்கும். வாகனம் வாங்கும் முயற்சி வெற்றி தரும்.

லாப ஸ்தானத்தைப் பார்க்கும் குருவால் பற்றாக்குறை அகலும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். தொழில் தொடங்க போதுமான வசதி இல்லையே என்று நினைத்தவர்களுக்கு அரசு வழிச் சலுகைகள் கிடைத்து ஆச்சரியப்பட வைக்கும். பங்குதாரர்கள் தானாக முன்வந்து இணைய வழிபிறக்கும். பல ஆண்டுகளாக வசூலாகாத பாக்கிகள் வசூலாகும். இளைய சகோதரர்களுடன் இணக்கம் ஏற்படும்.

**கேது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

பிள்ளைச் செல்வங்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பெரிய அளவில் தொழில் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டவர்களுக்கு அது கைகூடும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். அயல்நாட்டு தொடர்பால் ஆதாயம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வி.ஆர்.எஸ் பெற்றுக் கொண்டு விரும்பிய தொழில் செய்யும் வாய்ப்புகள் கைகூடிவரும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர்.


**சுக்ரன் சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

பூமிப் பிரச்சினை முதல் பொருளாதாரப் பிரச்சினை வரை ஒவ்வொன்றாக மாறும் நேரமிது. சேமிப்பு அதிகரிக்கும். என்றாலும் செலவுகள் உடனுக்குடன் வந்து கொண்டேயிருக்கும். தொழில் போட்டிகளைக் கண்டு கவலைப்பட வேண்டியதில்லை. புதிய தொழில் தொடங்க ஒரு சிலருக்கு வாய்ப்புகள் கைகூடி வரும். ஆரோக்கியத் தொல்லைகள் அடிக்கடிவந்து அலை மோதும். எனவே, ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவது நல்லது. அயல்நாட்டில் பணி புரிபவர்கள் எதிர்பாராத சூழ்நிலை காரணமாக தாய்நாடு திரும்பும் வாய்ப்பு உண்டாகலாம்.




**சூரிய சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

இக்காலத்தில் வழக்குகளில் வெற்றி கிடைக்கும். எதிரிகள்



உங்களுக்கு வந்து சேரும். பங்குதாரர்களால் ஏற்பட்ட மனக் கவலை அகலும். தடைகள் விலகும். தனவரவு அதிகரிக்கும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். இதுவரை சங்கிலித் தொடர்போல் வந்த கடன்கள் குறையும். கை நழுவிச் சென்ற வாய்ப்புகள் கைகூடி வரும். பிறருக்கு ஜாமீன் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வருவதில் தாமதம் ஏற்படலாம். எனவே, பிறருக்கு பொறுப்பு சொல்லும் பொழுது யோசித்துச் சொல்வது நல்லது. சுண்டல் மாலை சூட்டி குருவை வழிபட்டால் துயரங்கள் விலகி ஓடும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

ஏகாதசியன்று விரதமிருந்து லட்சுமி சமேத விஷ்ணுவை வழிபாடு செய்யுங்கள். திருக்கோஷ்டியூர் சவுமிய நாராயணப் பெருமாள் வழிபாடு சகல பாக்கியங்களையும் வழங்கும்.

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

**மிதுன ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்த குருப்பெயர்ச்சி உங்களுக்கு நன்மை தரும் விதத்திலேயே அமைகின்றது. உடல் ஆரோக்கியம் சீராகும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். தம்பதியரிடையே அன்யோன்யம் அதிகரிக்கும்.

உத்தியோகம் சம்பந்தமாக பிரிந்திருந்த தம்பதியர் இப்பொழுது ஒரே இடத்தில் வேலை கிடைத்து சேர்ந்து வாழும் அமைப்பு உருவாகலாம். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் அமைப்பும், வீடு வாங்கும் அமைப்பும் கூட ஏற்படலாம். நிதானமும், தியானமும் உங்கள் நிம்மதிக்கு வழிவக்ககும். பிள்ளைகளுக்குரிய கடன், கடமைகளைச் செய்து முடிப்பீர்கள்.

தாய்வழி ஆதரவு தக்க விதத்தில் கிடைக்கும். உடன்பிறப்புகள் பகை பாராட்டாமல் வீடு தேடி வருவர். உடன்பிறப்பு போல் உங்களுடன் ஒட்டி உறவாடிய பிடிவாத குணத்தை தளர்த்திக் கொண்டால் உள்ளம் மகிழும் விதத்தில் வாழ்க்கை அமையும். புதன்கிழமை தோறும் பெருமாள் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். கேது பரிகாரமும், வடக்குப் பார்த்த விநாயகர் வழிபாடும் கேட்ட வரத்தைக் கொடுக்கும்.

## ஏழாமிடத்தைப் பார்க்கிறது!
## இனிய வரன்கள் வருகிறது!

**பொன்னவன் மூன்றில் நின்றால்**
**பொறுப்புகள் அதிகரிக்கும்!**
**எண்ணிய காரியங்கள்**
**எல்லாமே வெற்றியாகும்!**
**தன்னலம் மாறிப் போகும்!**
**தைரியம் வந்து சேரும்!**
**மண்ணிலே பதவி வாய்க்கும்!**
**மகத்தான வாழ்வும் கூடும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

எனவே, அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, தன்னம்பிக்கையும், தைரியமும் இப்பொழுது உங்களுக்குத் தேவை. எண்

குரு பார்வை 7 ஆம் இடத்தில் பதிவதால் வரன்கள் வாசல் தேடி வரவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இனி நல்ல தகவல் இல்லம் தேடி வரப்போகின்றது. குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் படிப்படியாய் மாறும். கணவன்-மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். பெற்றோர்களின் மணிவிழா, பவள விழா, முத்து விழா போனற விழாக்களை நடத்திப் பார்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். பூப்புனித நீராட்டு விழா மற்றும் சுபச் சடங்குகள் நடைபெற வழிபிறக்கும். அன்னிய தேசத்திலிருந்து வரும்

விலகிச் செல்வர். பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென படும். கட்டிய வீட்டைப் புதுப்பிக்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். மின்சாதனப் பொருட் கள், மற்றும் விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பெரிய மனிதர்களின் சந்திப்பு கிட்டும்.

**கவனம் செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

குருவின் வக்ர காலத்தில் நற்பலன்களே

(நாளை கடகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ விமான விபத்தில் சிக்கி சுமாத்திராவில் 30பேர் உயிரிழப்பு

(ஜகார்த்தா)

**இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவில், அந்நாட்டு இராணுவ விமானம் விழுந்து விபத்துக்குள் சிக்கியதில் நேற்று முன்தினம் 30 பேர் உயிரிழந்தனர் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



சுமாத்திரா தீவில் இருந்து இந்தோனேஷியா இராணுவத்திற்கு சொந்தமான போக்குவரத்து விமானம், புறப்பட்டு சென்ற சிலநிமிடங்களில் குடியிருப்பு பகுதியில் விழுந்து விபத்துக்குள் சிக்கியது. விமானம் விழுந்ததும் வெடித்து அப்பகுதி முழுவதும், தீ கொழுந்து விட்டு எரியதொடங்கியது.

வடக்கு சுமாத்திரா தீவின் மெடான் நகரில் உள்ள ஹோட்டல் மற்றும் வீடுகள் நிறைந்த பகுதியில் விமானம் விழுந்தது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விமான விபத்து குறித்து தகவல் அறிந்ததும் மீட்பு குழுவினர் அங்கு விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் சுமார் 30 பேர் உயிரிழந்தனர் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவின் தேடுதல் மற்றும் மீட்பு குழுவின் செய்தித் தொடர்பாளர் ஹிசார் டூர்னிப் செய்தியாளரிடம் பேசுகையில், "எங்களுக்கு கடைசியாக கிடைத்த தகவலின்படி 30 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தோர்கள் எண்ணிக்கை அதிகரிக்க கூடும்," என்று கூறினார். விமானம் மற்றும் விமானம் விழுந்த கட்டடப்பகுதியில் எத்தனை பேர் சிக்கினர் என்பது தெளிவாக தெரியவரவில்லை என்றும் குறிப்பிடப்பட்டு உள்ளது.

விமானமானது மெடானில் இருந்து மிகவும் குறுகிய தீவான நாதுனாவிற்கு புறப்பட்டு 5 கிலோ மீற்றர் தூரம் சென்ற சிலநிமிடங்களில், விபத்துக்குள் சிக்கி உள்ளது.

விமானம் விழுந்த பகுதியில் வீடுகள் இடிந்து காணப்படுகிறது. அங்கு தொடர்ந்து மீட்பு பணிகள் நடைபெற்று வருகிறது. சம்பவத்தை நேரில் பார்த்தவர் பேசுகையில் "விமானம் விமான நிலையத்தில் இருந்து வந்ததை நான் பார்த்தேன், விமானமானது ஆடிக்கொண்டே வந்தது, புகைமூட்டம் வந்ததையும் பார்த்தேன்."என்று கூறியுள்ளார்.

விமானம் புதியதாக அமைக்கப்பட்ட குடியிருப்பு பகுதியில் விழுந்துள்ளது, விமானம் விபத்துக்குள் சிக்கியதற்கு வானிலை காரணமாக இருக்கலாமா என்பது இன்னும் தெளிவாக தெரியவரவில்லை. விமானம் விபத்துக்குள் சிக்கிய பகுதி முழுவதையும் பொலிஸ் கட்டுக்குள் கொண்டு வந்துள்ளது.

விமானம் விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பாக விசாரணையும் நடைபெற்று வருகிறது.

"விமானத்தில் இருந்த பைலட்கள் விபரமும், எத்தனைபேர் பயணம் செய்தனர் என்ற விபரமும் தெரியவில்லை... விமானம் குடியிருப்பு பகுதியில் விழுந்து தீப்பிடித்து எரிந்தது.

உடனடியாக தேடுதல் மற்றும் மீட்பு குழுவினை மீட்பு பணிக்கு செல்ல உத்தரவிட்டோம்." என்று இந்தோனேஷியா இராணுவத் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)




# அமெரிக்காவில் வீட்டின்மீது விமானம் விழுந்து விபத்து!

## 3 பேர் பலி

(நியூயோர்க்)

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்துக்கு உட்பட்ட லான்செஸ்டர் விமான நிலையத்தில் இருந்து, மாசசெட்ஸ் மாகாணத்தின் நார்வூட் நினைவு விமான நிலையத்துக்கு சிறிய ரக விமானம் ஒன்று நேற்று சென்று கொண்டிருந்தது. பீச்கிராப்ட் பி.இ.36 ரகத்தை சேர்ந்த அந்த விமானத்தில் 3 பேர் இருந்தனர்.

இந்த விமானம் பிளைன் வில்லி பகுதியில் சென்று கொண்டிருந்தபோது. திடீரென அங்கிருந்த ஒரு வீட்டில் விழுந்து நொறுங்கியது. இதில் விமானத்துடன் சேர்ந்து அந்த வீடும் தீப்பிடித்து எரிந்தது. உடனே வீட்டில் இருந்தவர்கள் அனைவரும் வெளியே ஓடி தப்பினர்.


இந்த கோர விபத்தில், விமானத்தில் பயணம் செய்த 3 பேரும் உயிரிழந்தனர். அவர்களின் விபரம் குறித்து இதுவரை தகவல் இல்லை. விபத்து குறித்து தகவல் அறிந்து அங்கு விரைந்த பேரிடர் மீட்புக்குழுவினர், மீட்புப் பணிகளை மேற்கொண்டனர்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து தெரியவில்லை. இது குறித்து விசாரணை நடந்து வருகிறது. (இ-7)

# சிறுமி மலாலாவை தாக்கியவர்களை நீதிக்கு முன் கொண்டுவர வேண்டும்

## பாகிஸ்தானுக்கு அமெரிக்க செனட்டர்கள் கடிதம்

(வோஷிங்டன்)



பெண் கல்விக்காக பாடுபட்டு வரும் பாகிஸ்தான் நாட்டை சேர்ந்த சிறுமி மலாலா யூசுப்சாயை துப்பாக்கியால் சுட்ட குற்றவாளிகளை நீதியின் முன் கொண்டு வாருங்கள் என்று அமெரிக்க செனட்டர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு மிங்கோரா நகரில் உள்ள பள்ளியிலிருந்து வீட்டுக்கு திரும்புகையில், மலாலா மீது தலிபான் தீவிரவாதிகள் துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் அவர் படுகாயமடைந்தார். தலையிலும், வயிற்றிலும் குண்டு பாய்ந்து, உயிருக்கு ஆபத்தான நிலையில் லண்டன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மலாலா தீவிர சிகிச்சைக்கு பின் குணமடைந்தார். அவர் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு தெஹ்ரிக் இ தலிபான் அமைப்பு பொறுப்பேற்றது.

பின்னர், இவ்வழக்கில் அந்த அமைப்பை சேர்ந்த 10 பேரை பாகிஸ்தான் பொலிசார் கைது செய்தனர். அவர்கள் மீதான வழக்கு ஸ்வாட் நகரில் உள்ள தீவிரவாத தடுப்பு நீதிமன்றத்தில் இரகசியமாக நடைபெற்று வந்ததாக அறிவிக்கப்பட்டது. இவ்வழக்கு விசாரணையின் முடிவில் குற்றவாளிகள் 10 பேருக்கும் 25 வருட சிறைத்தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளில் 8 பேர் வெளியுலகில் சுதந்திரமாக நடமாடுவதாக அண்மையில் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

இதையடுத்து அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதர் ஜலீல் அப்பாஸ் ஜிலானிக்கு கடிதம் எழுதியுள்ள அந்நாட்டு செனட்டர்களான மார்கோ ரூபியோ மற்றும் பார்பரா பாக்ஸர் ஆகியோர், "இச்சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தும் வகையில், பாகிஸ்தான் அரசு இரட்டை மடங்கு வேகத்துடன் வெளிப்படையாகவும், பொதுவான வகையிலும் செயற்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளனர்.


"மேலும் இந்த வழக்கின் விசாரணை இரகசியமாகவும், தகவல்கள் தெரிவிக்கப்படாமலும் நடைபெற்றதற்காக கவலையடைந்த போதிலும், பாகிஸ்தான் நீதித்துறை இக்குற்றத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளை தண்டிக்க வேகமாக செயற்பட்டதை கண்டு திருப்தியடைந்தோம். ஆனால் சமீபத்திய பத்திரிகை செய்திகள் இவ்வழக்கில் தண்டனை பெற்ற சிறைக்கு வெளியே குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடுவதாக தெரிவித்துள்ளன. இதன் மூலம் அந்நாட்டின் நீதித்துறை மீதான நம்பகத்தன்மை கேள்விக்குறியாகியுள்ளது.

எனவே இவ்விடயத்தில் பாகிஸ்தான் அரசு வெளிப்படைத்தன்மையை கடைப்பிடித்து பாதிக்கப்பட்ட அப்பாவி சிறுமிக்கு நீதி கிடைப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இரு செனட்டர்களும் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-7)

# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பை இஸ்லாமிக் ஸ்டேட் என குறிப்பிடாதீர்

## ஊடகங்களிடம் கமரூன் கோரிக்கை

ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாத கும்பலை "இஸ்லாமிக் ஸ்டேட்" அமைப்பினர் என்று குறிப்பிட வேண்டாம் என்று ஊடகங்களை பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் கேட்டுக்கொண்டுள்ளார்.



லண்டனில் செய்தியாளர்களிடம் பேசிய பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் அந்நாட்டு ஊடகமான பிபிசியை குறிப்பிட்டு, "ஐ.எஸ். ஐ.எஸ். இயக்கத்தினரை இஸ்லாமிக் ஸ்டேட் என்று குறிப்பிடுவது ஏற்புடையது அல்ல. அவர்கள் காட்டுமிராண்டித்தனமான செயலில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர்.

அவர்கள் தங்களை "இஸ லாமிக் ஸ்டேட் ஓப் ஈராக் மற்றும் லெவண்ட்" என்று அழைத்து நியாயம் கற்பித்து வருகின்றனர். அதன் மூலம் அந்த மோசமான அமைப்புக்கு பிரிட்டன் இளைஞர்களை தவறான முறையில் ஈர்த்து வருகின்றனர்.

விஷமத்தனமாக அப்பாவி மக்களின் மரணத்தை கொண்டாடும் அவர்களுக்கு நற்பெயர் கொடுத்து பாராட்டும் அளவில் தான் "இஸ்லாமிக் ஸ்டேட்" என்ற பெயர் தோன்றுகிறது. இவர்களுக்கும் இஸ்லாமிய மதத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை. இதனால் இளைஞர்களுக்கு தவறான செய்தி சென்றடைகிறது. பிபிசி மட்டுமல்லாமல் ஏனைய ஊடகங்களும் இவர்களை அவ்வாறு அழைக்க வேண்டாம். வெறும் ஐ.எஸ். அல்லது ஐ.எஸ்.ஐ.எஸ். என்று குறிப்பிடுங்கள்" என்று கமரூன் வேண்டுகோள் விடுத்தார்.

துனிசியாவில் ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் பிரிட்டனைச் சேர்ந்த 30 பேர் பலியாகியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவிராஜ் கொலை வழக்கில் சந்தேக நபருக்குப் பிணை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கின் முக்கிய சந்தேக நபரான, கடற்படை கப்டன் சமந்த முனசிங்கவுக்கு கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் பிணை வழங்கியுள்ளது.

இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதியான அட்மிரல் வசந்த கரன்னகொடவின் பிரதம பாதுகாப்பு அதிகாரியான, கப்டன் சமந்த முனசிங்கவுக்கு இந்தப் படுகொலையில் தொடர்பு இருப்பதாக, குற்றப்புலனாய்வுப் பிரிவு வலுவான குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தது.

இந்த நிலையில், கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் நடந்த விசாரணையின் போது, நாட்டை விட்டு வெளியேறக் கூடாது என்ற நிபந்தனையுடன், 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையில் செல்ல சமந்த முனசிங்கவுக்கு நீதவான் நிரோசா பெர்னாண்டோ அனுமதி அளித்தார்.

இந்தப் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்ட ஏனைய மூன்று சந்தேக நபர்களுக்கு பிணை வழங்க நீதிபதி மறுப்புத் தெரிவித்துள்ளார். (இ-7)




# பிளவடைந்தால் சுதந்திரக்கட்சி அழிந்துவிடும்

## ஜோன் செனவிரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவடைந்தால் தேர்தலின்போது பாரிய அளவிலான தோல்வியை சந்திக்க நேரிடும் எனவும் சுதந்திரக்கட்சி அழிந்து விடும் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.**

த்ற்போதைய நிலைமையில் அதன் பிரதிபலன் ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைப்பதனை தடுக்க முடியாத நிலை உருவாகிவிடும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை தற்போது வரையில் கட்சியின் ஒற்றுமைக்காக நியமிக்கப்பட்ட குழுவிடம் ஜனாதிபதி மற்றும் முன்னாள் ஜனாதிபதி சிறப்பான இணக்கப்பாட்டை வெளியிட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அது வெகு விரைவில் வெற்றியை உறுதி செய்வதற்காக குறித்த குழு முயற்சிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் கட்சி பிளவடைந்து தேர்தலில் தோல்வியடைந்து விட்டால் முழு கட்சியும் அழிந்து விடும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# பிரதமராகும் பகல் கனவில் இருந்து மகிந்த விழித்துக்கொள்ள வேண்டும்

## வடமேல் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஓகஸ்ட் மாதம் 17ஆம திகதி பிரதமராகும் பகல் கனவில் இருந்து விழித்துக் கொள்ளுமாறு வடமேல் மாகாண எதிர்க்கட்சி தலைவர் ஜே.சீ.அலவத்துவல தெரிவித்துள்ளார்.

மாவத்தகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஆட்சியன் போது முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரது சகபாடிகளின் ஊழல் மோசடிகளை மறைத்து கொள்வதற்காகவே அவர் மீண்டும் அதிகாரத்திற்கு வரும பணிகளை ஆரம்பித்துள்ளார்.

**பொலிஸ் நிதி மோசடி பிரிவினரால் கடந்த அரசாங்கத்தின் மோசடிக்காரர்களுக்கு எதிராக மேற்கொணட நடிவடிக்கைகளை வேறு திசைக்கு திருப்பிக்கொள்வதற்காக மகிந்த தரப்பினர் முயற்சிக்கின்றனர்.**

எனினும் ஓகஸ்ட் 17ஆம் திகதி இந்நாட்டு புத்திசாலி மக்கள் அவரை தோற்கடித்து விடுவார்கள்.

மோசடிக்காரர்களை பாதுகாப்பதற்கு பதிலாக அவர்களுக்கு தணடனை வழங்குவதற்கு பொறுப்பு கூறுகின்ற ஐக்கிய தேசிய கட்சிக்கு பெரும்பான்மை கொண்ட நாடாளுமன்றத்தை ஓகஸ்ட் மாதம் 17ஆம் தகதி அமையப்போவதனை மகிந்த ராஜபக்ஷவினூல் பார்த்துக்கொள்ள முடியும்.

மோசடிக்காரர்களுக்காக செயற்படுகின்ற முன்னாள் ஜனாதிபதியை கடந்த ஜனவரி 8ஆம் திகதி மக்களால் துரத்தப்பட்டார். மீண்டும் மக்கள் அவருக்கு சந்தர்ப்பம் வழங்க மாட்டார்கள்.

**கடந்த 10 வருட ஆட்சியினுள் நாட்டு மக்களுக்கு எவ்வித நிவாரணங்களும் வழங்காத முன்னாள் ஜனாதிபதி மீண்டும் மக்கள் ஆதரவு கேட்பது எந்த அடிப்படையில் என எனக்கு புரியவில்லை. மகிந்த ராஜபக்ஷவின் ஊழல் மற்றும் மோசடியினை தோற்கடிப்பதற்கு மக்கள் ஆயத்தமாக உள்ளனர்.**

அதற்கமைய குருணாகல் மாவட்டம் மாத்திரமின்றி, நாட்டின் பெரும்பான்மை மக்கள் ஐக்கிய தேசிய கட்சியின் வெற்றியை தற்போது வரையிலே உறுதி செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஓகஸ்ட் 17ஆம் திகதிக்கு பின்னர் மீண்டும் பாதைகள் அமைப்பேன்


## மகிந்த தெரிவிப்பு

நாட்டின் அபிவிருத்தி எதிர்வரும் 17ஆம் திகதிக்கு பின்னர் மீண்டும் மேம்படுத்தப்படும் எனவும் பாதைகள் அமைக்கும் பணியைத் தொடரவுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பஸ்கம விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மதவழிபாடுகளில் கலந்துகொண்டதன் பின்னர் மக்களை சந்தித்து அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அன்று புலிகளை நினைவு கூருவதற்கு விளக்கேற்றிய பிரதான அமைச்சர் உட்பட குழுவினருக்கு எதிராக வழக்கு தொடுக்கவில்லை. கோதபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக மத வழிபாடுகளில் ஈடுபட்ட தேரர்கள் இன்று விளக்கமறியலில்.

இதுவே மாற்றம் 100 நாட்கள் என்றார்கள். ஆனால் இன்று 200 நாட்கள் கடந்து விட்டன.



எங்கள் அமைச்சர்களை பழிவாங்கிவிட்டார்கள், உறுப்பினர்களை பழிவாங்கிவிட்டார்கள், எங்கள் முழுக் குடும்பத்தையும் பழிவாங்கிவிட்டார்கள்.

நான் நேற்று முன்தினம் தான் கண்டி பிரதேசத்திற்கு வருகை தந்தேன், கண்டி வருவதற்கு 03 அல்லது மூன்றரை மணித்தியாலங்களாகிவிட்டன. எனினும் நான் அமைத்த பாதைகளை அமைத்திருந்தார்கள் என்றால் 55 நிமிடங்களில் என்னால் வர முடிந்திருக்கும்.

அதனையும் இடைநிறுத்தி விட்டார்கள், எனவே எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதிக்கு பின்னர் மீண்டும் அனைத்து பாதைகளையும் அமைக்க முடியும் என்று நான் நம்புகின்றேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-7)





யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் வருடாந்தம் இடம்பெறும் பேராசிரியர் சோ.சந்திரசேகரத்தின் நினைவுப் பேருரை நிகழ்வு பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயா வெற்றி

(சென்னை)

**சென்னை ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் நடந்த இடைத்தேர்தலில் தமிழக முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா வெற்றி பெற்றுள்ளார். தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் சி.மகேந்திரனைவிட அவர் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்.**

சென்னை ஆர்.கே. நகர் தொகுதிக்கு ஜுன் 27ஆம் திகதி இடைத் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் முதலமைச்சர் ஜெயலலிதா போட்டியிட்டார்.

தி.மு.க., காங்கிரஸ், தே.மு.தி.க., பா.ம.க., ம.தி.மு.க., பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் புறக்கணித்தன.

இடதுசாரிக் கட்சிகளின் சார்பில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சி.மகேந்திரன் போட்டியிட்டார்.

சமூக ஆர்வலர் டிராஃபிக் ராமசாமி என்பவரும் சுயேச்சையாகப் போட்டியிட்டார்.

இந்தத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நேற்றுக் காலையில் தொடங்கியது.

16 சுற்று வாக்கு எண்ணிக்கையின் முடிவில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா 1,60,432 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

சி.மகேந்திரன் 9,710 வாக்குகளையும் டிராஃபிக் ராமசாமி 4590 வாக்குகளையும் பெற்றிருந்தனர்.

ஜெயல்லிதாவைத் தவிர போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும் தங்கள் காப்புத் தொகையை இழந்தனர்.

இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற ஜெயலலிதாவுக்கு தமிழக ஆளுநர் ரோசையா வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்கு முன்னோட்டமாக இந்த இடைத் தேர்தல் நடைபெற்றிருப்பதாக ஜெயலலிதா தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றிபெற்றிருந்தாலும் ஜனநாயகம் தோற்றுவிட்டது என சி.மகேந்திரன் கூறியுள்ளார்.

நேற்று மாலையே, சபாநாயகர் முன்னிலையில்ஜெயலலிதா சட்டமன்ற உறுப்பினராகப் பதவியேற்றுக் கொண்டார். (இ-7)

## அரண்மனையை அபகரித்தார் முதல்வர் வசுந்தரா ராஜே

### காங்கிரஸ் குற்றச்சாட்டு

முதல்வர் வசுந்தரா ராஜேவுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து வாழும் அவரது கணவர் ஹேமந்த் சிங், தோல்பூர் அரண்மனை ராஜஸ்தான் அரசின் சொத்து என்று நீதிமன்றத்தில் ஏற்கனவே தெரிவித்துள்ளார் என காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேலும் இந்த அரண்மனை அரசுக்கு சொந்தமாக இருந்ததாக, கடந்த 1954 முதல் 2010-ம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தின ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆனால், வசுந்தரா மற்றும் லலித் மோடி ஆகியோரின் கூட்டு நிறுவனமான நியாந்த் ஹெறிடேஜ் ஹோட்டல், அந்த அரண்மனையை கடந்த 2009-ல் (காங்கிரஸ் ஆட்சியில்) அபகரித்துக் கொண்டது.

பின்னர் ரூ.100 கோடியை முதலீடு செய்து அரண்மனையை சொகுசு ஹோட்டலாக மாற்றி உள்ளனர். இதில் மாநில அரசுக்கு எவ்வித பங்கும் இல்லை.

கடந்த 2013-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலின் போது, வசுந்தரா ராஜே தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் நியாந்த் ஹெறிடேஜ் ஹோட்டல் நிறுவனத்தில் தனக்கு பங்குகள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தனது மகனும் எம்.பி.யுமான துஷ்யந்த் சிங், மருமகள் நிஹாரிகா மற்றும் லலித் மோடி ஆகியோருக்கும் பங்குகள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

லலித் மோடிக்கு மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் வசுந்தரா ராஜே ஆகியோர் உதவிய விவகாரத்தில், சுவாமி மவுனேந்திர பாபா (பிரதமர் நரேந்திர மோடி) தொடர்ந்து மௌனமாக இருந்து வருகிறார். குற்றச்சாட்டுக்குள்ளானவர்களை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-7)

## டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவாலின் 2 மாத மின்சார செலவு 91ஆயிரம் ரூபா

(புதுடில்லி)

டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலின் 2 மாத மின்சார செலவு 91ஆயிரம் ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் லைன்ஸில் உள்ள டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலின் வீட்டிற்கான மின்சார செலவு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 91 ஆயிரம் ரூபாயென தெரிவிக்கப்பட்டுள்ளது.

டில்லி முதலமைச்சரின் வீட்டிற்கு ஆகும் மின்சார செலவு தொடர்பாக தகவல் தெரிவிக்குமாறு சமூக ஆர்வலர் விவேக் கார்க் தகவல் உரிமை சட்டத்தின் கீழ் டில்லி அரசிடம் கேட்டுக் கொண்டார்.

அவரது கோரிக்கைக்கு பதிலளித்து உள்ள டில்லி அரசு அரவிந்த் கெஜ்ரிவாலின் வீட்டிற்கான 2 மாத மின்சார செலவு 91 ஆயிரம் ரூபாய் என்று ஆவணம் வழங்கியுள்ளது.

இதற்கிடையே பாரதீய ஜனதா, அரவிந்த் கெஜ்ரிவால் வீட்டிற்கான மின்கட்டணம் என்பது ஒரு இலட்சத்தை தாண்டிவிட்டது என்று குற்றம் சாட்டியுள்ளது.

மேலும், ஆம்ஆத்மி அமைச்சர்களின் மின் கட்டணம் தொடர்பான தகவல்களை பெற உள்ளதாகவும் பாரதீய ஜனதா தெரிவித்துள்ளது.

இவ்விவகாரம் தொடர்பாக பாரதீய ஜனதா கட்சியின் செய்தித் தொடர்பாளர் பிரவீன் கபூர் பேசுகையில், டில்லி முதலமைச்சரின் வீட்டில் இரண்டு மின்சார மீற்றர்கள் உள்ளன.

இரண்டு மீற்றர்களுக்கான சமீபத்திய பில் ஆனது 55 ஆயிரம் ரூபாய் மற்றும் 48 ஆயிரம் ரூபா (மொத்தம் ரூ. 1,03,000), ஆகும் என்று தெரிவித்தார்.

இவ்விவகாரம் தொடர்பாக முழுவிபரமும் பெற்ற பின்னரே கருத்து தெரிவிக்க முடியும் என்று மூத்த அரசு அதிகாரி தெரிவித்துள்ளார். (இ-7)

## இந்தியா உள்ளிட்ட ஐம்பது நாடுகள் இணைந்து சீனா தலைமையில் ஆசிய உட்கட்டமைப்பு வங்கி

இந்தியா உள்ளிட்ட 50 நாடுகள் இணைந்து சீனா தலைமையில் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியை (ஏஐஐபி) தொடங்க ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இந்த வங்கிக்கான முதலீடு ரூ.6 இலட்சத்து 30 ஆயிரம் கோடியாகும்.

இந்த வங்கி தொடர்பான 50 நாடுகள் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டம் நேற்று முன்தினம் சீன தலைநகர் பீஜிங்கில் நடைபெற்றது.

இந்த வங்கி தொடங்குவது தொடர்பான ஒப்பந்தத்தில் அவுஸ்திரேலியா முதலில் கையெழுத்திட்டது.

அதைத் தொடர்ந்து 49 நாடுகளின் பிரதிநிதிகளும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த ஆண்டு இறுதியில் மேலும் 7 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளன.

வங்கி தொடங்குவதற்கான முதலீட்டில் 75 சதவீதத்தை ஆசிய நாடுகள் அளிக்கின்றன.

ஒவ்வொரு நாடும் தங்கள் பொருளாதார நிலைக்கு ஏற்ப முதலீட்டில் பங்களிப்பை செலுத்துகின்றன.


அதிகபட்சமாக சீனா 30.34 சதவீத முதலீட்டையும், இந்தியா 8.52 சதவீத முதலீட்டையும், ரஷ்யா 6.66 சதவீத முதலீட்டையும் அளிக்கின்றன. இந்த ஆண்டு இறுதியில் இந்த வங்கி செயற்படத் தொடங்கும்.

அமெரிக்கா, ஜப்பான் ஆகியவை இந்த வங்கி அமைப்பதில் இணையவில்லை. மேலும் இந்த வங்கி தொடங்குவதற்கு எதிர்ப்பும் தெரிவித்துள்ளன. ஏனெனில் இந்த வங்கி மூலம் சீனாவின் பொருளாதார வல்லமை மேலும் வலுவடைந்துவிடும் என்ற அச்சமே முக்கிய காரணம்.

இது தவிர உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கிக்கு இது போட்டியாக அமையும்.


சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் 2013 ஒக்டோபரில் இந்த வங்கி தொடங்கும் திட்டத்தை முதல் முதலில் வெளியிட்டார்.

அப்போது இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, சிங்கப்பூர் உள்ளிட்ட 21 நாடுகள் அதனை உடனடியாக ஆதரித்தன. இந்த வங்கி பீஜிங்கை தலைமையிடமாக கொண்டு செயற்படும். (இ-7)



கோண்டாவில் இந்துக்கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடம் கடந்த 25 ஆம் திகதி வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. இதில் கலந்துகொண்ட விருந்தினர்களையும் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் ஆய்வுகூடத்தை திறந்துவைப்பதையும், மாணவர்கள் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம். பாடசாலையின் அதிபர் எஸ்.தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் வடமாகாணசபை உறுப்பினர், இ.ஆனோல்ட், யாழ்.வலயக்கல்விபணிப்பாளர் [illegible] நல்லூர் பிரதேசசபைஉறுப்பினர் தா.தியாகமூர்த்தி, கிராம சேவையாளர் திருமதி.கு.பிரதாபராஜன் மற்றும் முன்னாள் அதிபர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர், ஊரவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் அண்மையில் மது, போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கில் விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் கருத்தரங்கில் கலந்து கொண்ட அயல் பாடசாலைகளான கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், பரஞ்சோதி மகா வித்தியாலயம், திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய மாணவர்களை படங்களில் காணலாம்.

# மகிந்தவுக்கு எதிராக 7000 முறைப்பாடுகள்

## நிதி மோசடி விசாரணை பிரிவினர்

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக இதுவரை பொலிஸ் நிதி குற்ற விசாரணை பிரிவு மற்றும் ஏனைய விசாரணை பிரிவுகளுக்கு சமார் 7000 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்கின்ற பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவில் 600 அதிகாரிகள் மாத்திரம் இருப்பதனால் குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் விரைவான விசாரணைகள் மேற்கொள்வதற்கு சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த அரசாங்கத்தின் போது பாரிய அளவிலான நிதி மோசடிகள் மற்றும் வேறு சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த அரசாங்கத்துடன் நெருக்கமாக செயற்பட்ட அதிகாரிகளினாலேயே குறித்த முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இதுவரை மெதுவாக இடம்பெற்று வருகின்ற குறித்த விசாரணைகள் தொடர்ந்துமேற்கொள்ளப்படும் எனதெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# தலதா அத்துகோரளவின் ஆதரவாளர் படுகொலை!

அமைச்சர் தலதா அத்துகோரளவின் முதன்மை ஆதரவாளரான துஷார தேவாலேகம என்பவர் இனந்தெரியாத சிலரினால் கொலை செய்யப்பட்டுள்ளதாக கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி, நொரகல் லேவத்த பிரதேசத்தில் இக்கொலை சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது. தலதா அத்துகோரளவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக மோடடார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குறித்த நபரே இவ்வாறு இனந்தெரியாதோரால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான, 37 வயது நிரம்பிய துஷார தேவாலேகம என்பரின் உடல் தற்போது பிரேத பரிசோதனைகளுக்காக இரத்தினபுரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், நாடாளுமன்றம் கலைத்து சில மணித்தியாலத்திற்குள் அநுராதபுர நகரத்தில் அமைக்கப்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திராணி பண்டாரவின் பெரிய அளவிலான பதாதைகள் இனந்தெரியாதோரால் சேதப்படுத்தப்பட்டிருந்தன.

அதேபோல் குருநாகல் நகரத்தில் அமைக்கப்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும். குருநாகல் தொகுதி அமைப்பாளர் அசோக அபேசிங்க மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் உருவப் படங்கள் அடங்கிய பதாதைகள் பல சேதப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பொதுத் தேர்தலையொட்டிய முதல் வன்முறை ஆரம்பமாகியுள்ளதாக கபே அமைப்பு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# தேர்தல் தொடர்பில் தீர்மானம் இல்லை

## ஜாதிக ஹெல உறுமய

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில போட்டியிடுவது குறித்து இதுவரையில் எவ்வித தீர்மானமும் மேற்கொள்ளவில்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

அரசியல் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதா அல்லது தனியாக போட்டியிடுவதா என்பது குறித்து எதிர்வரும் அரசியல் நடவடிக்கைகளை கருத்தில் கொண்டே தீர்மானிப்பதற்கு எதர்பார்ப்பதாக அக்கட்சிமேலும் குறிப்பிட்டுள்ளது.


தனிப்பட்ட பிரதிபலன்களை மாத்திரம் சிந்தித்து செயற்படுகின்ற அரசியல் கட்சிகளுக்கு இதன் பின்னர் ஆதரவு வழங்குவதில்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நாட்டை குறித்து சிந்தித்து செயற்படுகின்ற அரசியல் கட்சிக்கு மாத்திரமே தேர்தலில் ஆதரவு வழங்குவதாக அக்கட்சி மேலும் குறிப்பிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# செல்ஃபி


அருஷான்


ஞானரூபன்


வேணுகரன்


கஜன் நவிண்டில்


கஜீபன் , தெல்லிப்பழை.


மகிந்தன்

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர்,
முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாயோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுத்து விட்ட அம்பு; சொல்லி விட்ட வார்த்தை திரும்ப வராது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மகிந்த தேர்தலில் போட்டியிட்டால் வியாழகுரு அவரை சும்மா விடாது

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுவாரா? என்பது பற்றிய முடிவுகள் இதுவரை தெரியவில்லை.

போட்டிடுவார் என்கிறது ஒரு தரப்பு. போட்டியிட மாட்டார் என்பது மற்றொரு தரப்பின் முடிவு.

பொதுப் பார்வையில் தேர்தலில் குதிப்பது போல மகிந்தனார் காட்டிக்காட்டுகிறார் என்ற கருத்தும் உண்டு.

எது எப்படியாயினும் இந்த நாட்டில் இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்த நாட்டின் ஒரு பிரஜை என்ற வகையில் சாத்திரம் சொல்வது கடமை என்று கருதுகிறோம்.

அட! முன்பும் சாத்திரம் கேட்டுத்தானே அந்தாள் கவுண்டு போனது என்று நீங்கள் நினைக்கலாம். இது குணதாஸவின் சாத்திரம் அல்ல. ஆகையால் இந்தச் சாத்திரத்தைக் கேட்பது நல்லது.

அதாவது, கெடுகாலமுள்ள ஒருவருக்கு திருமணம் நடைபெறப் போகிறது என்று எடுத்துக் கொள்வோம். கெடுகாலத்திலும் நல்லது நடக்கிறது என்று மற்றையவர்கள் நினைக்கலாம். இங்குதான் ஒரு உண்மையை உணரத் தவறுகிறோம்.

கெடுதி என்பது மங்களகரமான காரியத்தினூடாகவும் அணுகலாம் என்பதுதான் அந்த உண்மை.

கெடுகாலத்தில் திருமணம் செய்து கொண்டால், துன்பம் திருமணத்தினூடாக அணுகப்போகிறது என்பது சோதிட சங்கதி. இது போலத்தான் மகிந்த ராஜபக்ஷவின் நிலைமையும் உள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நானே வெற்றி பெறுவேன் என்று நம்பியிருந்த மகிந்த தோல்வி கண்டார்.

தேர்தலை நடத்தாமல் இருந்திருந்தால், இன்னும் இரண்டு ஆண்டுகள் ஜனாதிபதிப் பதவியில் இருந்திருக்கலாம்.

என்ன செய்வது காலம் பிழைத்தால் மகிந்தவும் எதுவும் செய்ய முடியாதென்பது நியதி. இரண்டு ஆண்டுகள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பதவியில் இருக்க வேண்டிய மகிந்த, அதனை இழந்துவிட்டு இப்போது பொதுத் தேர்தலில் போட்டியிட முற்படுவது; தன் மீது ஏற்படக்கூடிய விளக்கம், விசாரணைகளை தடுக்க என்பது தெரிந்த விடயம்.

பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெல்வதன் மூலம் தப்பித்துக் கொள்ளலாம் என்று அவர் நினைக்கிறார். ஆனால் உண்மையில் பொதுத் தேர்தலில் போட்டியிடாமல் – அரசியலில் இருந்து நிரந்தரமாக ஓய்வு பெறுகிறேன் என்று மகிந்த அறிவிப்பதன் மூலமே தப்பித்துக் கொள்ளலாம் என்பதை அவர் மறந்துள்ளார்.

ஆம்! மகிந்தவை வீட்டுக்கு அனுப்புவதில் அமெரிக்கா என்ற வியாழகுரு கடுமையாகப் பலன் செய்தது.

மகிந்தவை வீட்டுக்கு அனுப்பி மைத்திரியை ஜனாதிபதி ஆக்குவதில் வியாழகுருவாகிய அமெரிக்கா தீட்டிய திட்டங்கள் ஏராளம்.

மகிந்த வீடு சென்றதும் வியாழகுரு அமைதியடைந்தது. ஆனால் மீண்டும் மகிந்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவாராயின், அது வியாழகுருவுக்குக் கடுங்கோபத்தை உண்டு பண்ணும்.

இதனால் மகிந்த கடும் துன்பத்தை அனுபவிக்க வேண்டி வரும். மகிந்த மீது சர்வதேச விசாரணை நடத்தி, அவரைக் குற்றவாளியாக அறிவித்து, அவரைக் கைது செய் என்று அமெரிக்க வியாழகுரு நினைக்கலாம்.

ஆகையால் மகிந்தனார் பேசாமல் வீட்டில் இருப்பதே புத்திசாலித்தனம் என்பது நம் சோதிடம். இதை கருத்தில் கொள்ளாமல் இதோ தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்று செய்து காட்டுகிறேன் பார் என்று மகிந்த ராஜபக்ஷ நினைத்தால், கெடுகாலம் அவரை அப்படி நினைக்க வைக்கிறது. வியாழ சுகம் இல்லாமல் எவரும் எதுவும் செய்ய முடியாது.

# யாழில் 55 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு தண்டம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள 55 வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக யாழ்.மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களினால் கடந்த மாதம் 2 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் இணைப்பதிகாரி த.வசந்தசேகரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி விக்கையில்,

யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகளால் யாழ். மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் பரவலாக சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன்போது நிறைகுறைந்த பாண் விற்றமை, காலவதியான பொருட்கள் விற்பனை செய்தமை, பொருட்களின் விலை காட்சிப்படுத்தமை, அதிக விலைக்கு ரின்மீன் விற்பனை செய்தமை போன்ற குற்றங்களுக்காக 55 வர்த்தகர்களுக்கு எதிராக அந்தந்த நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அந்தந்த நீதிமன்றங்கள் தண்டங்கள் விதித்து தீர்ப்பளித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## க.பொ.த.சாதாரண தர பரீட்சையின் மீளாய்வு பெறுபேறு ஜூலை 30இல்

(கொழும்பு)

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறுகள் எதிர்வரும் ஜூலை 30 -ம் திகதி வெளியிடவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்காக ஒரு இலட்சத்து ஏழாயிரம் பேர் வரை விண்ணபபித்திருந்ததாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

பாடசாலை பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அந்தந்த பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் தபால் மூலமும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மீளாய்வு செய்யப்பட்ட பெறுபேறுகளை இணையத்தளத்தில் வெளியிடவும் பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, இம்முறை ஒரு மாதத்திற்கு முன்னதாகவே மீளாய்வு பெறுபேறுகளை வெளியிடு வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## கைதி தப்பியோட்டம்; உத்தியோகத்தர்களின் பதவி பறிபோனது

(கொழும்பு)

கைதியொருவர் சிறைச்சாலையில் இருந்து தப்பியோடியமையால் நான்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இச் சம்பவமானது கடந்த சனிக்கிழமை அதிகாலை மட்டக்களப்பு சிறைச்சாலையில் நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் இவர்கள் நான்கு பேரும் பதவி நீக்கம் செய்யப்பட்டதுடன் இச்சிறைச்சாலையின் பொறுப்பதிகாரி பொலநறுவை சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

அவிசாவளை கர்மாந்தபுர பகுதி என்றும் கேகாலை பன்னல்தெனிய டோலம்பிட்டிய என்றும் இருவேறு முகவரிகளைக் கொண்ட விதானலாகே டொம் ஒஸின் (வயது 35) என்று அழைக்கப்படும் சிறைக் கைதி கடந்த 2007ஆம் டிசம்பர் மாதத்திலிருந்து தண்டனை அனுபவித்து வந்துள்ளார்.

இக்கைதி தப்பிச்சென்றுள்ள சம்பவத்திற்கும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கும் தொடர்பிருப்பதாக வெளியான தகவலையடுத்து இது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையிலேயே இந்த நான்கு உத்தியோகத்தர்களும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

எனினும் தப்பியோடிய கைதியை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் தீவிரமாக ஈடுப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (செ-11)

## முழு தலைக்கவசத்திற்கு எதிரான சட்டத்திற்கு இடைக்காலத் தடை நீடிப்பு

(கொழும்பு)

முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசத்திற்கு எதிரான சட்டத்தை அமுலாக்குவதற்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஜூலை மாதம் 14ஆம் திகதி வரையில் அந்த சட்டத்தை நடைமுறைப்படுத்த மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

முன்னர் இந்த வழக்கு விசாரணை இடம்பெற்றபோது, முகத்தை முழு மையாக மறைக்கும் தலைக்கவச சட்ட அமுலாக்கத்திற்கு ஜூலை மாதம் 2-ம் திகதி வரையில் இடைக் கால தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே இந்த இடைக கால தடையுத்தரவு நேற்று மீண்டும் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. (செ-11)

## கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டு; தண்டப் பணத்துடன் சிறைவிதிப்பு

(யாழ்ப்பாணம்)

கஞ்சா வைத்திருந்த குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 11 பேரில் 7 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமும் சிறைத் தண்டனையும் வழங்கி யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் தீர்ப்பளித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில் 5 கிராம் மற்றும் 10 கிராம் கஞ்சா வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட 11 பேர் யாழ்.மாவட்ட மதுவரி திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் தொடர்பான 11 வழக்குகள் நேற்றைய தினம் மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

11 பேருக்கு எதிராக மதுவரித் திணைக்களத்தினரால் குற்றச்சாட்டுப் பத்திரம் மன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

அதில் 4 பேர் தாம் சுற்றவாளி என கூறியதை அடுத்து 10 ஆயிரம் ரூபாய் காசுப் பிணையும் 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 2 ஆட்பிணையிலும் செல்ல நீதிபதி உத்தரவிட்டுள்ளதுடன் அவர்களுடைய வதிவிடத்தை பிரதேச செயலர் மறறும் கிராமசேவகர் உறுதிப்படுத்த வேண்டும் என உத்தரவிட்டார்.

அடுத்த 7 பேரும் தமது குற்றத்தை ஏற்றுக் கொண்டதை அடுத்து அதில் 5 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் தணடப்பணமும் அது கட்டத் தவறும் பட்சத்தில் 2 மாத சிறைத் தண்டனையும் அதனுடன் சேர்த்து 3 மாத கால சாதாரண சிறையும் வழங்கி தீர்ப்பளித்தார்.

அடுத்த ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் அது கட்டத்தவறும் பட்சத்தில் 2 மாதகால சிறைத் தண்டனையும் அதனுடன் சேர்த்து 4 மாத கால சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

மற்றையவருக்கு 10 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் அதை கட்டத் தவறும் பட்சத்தில் 2 மாதகால சிறைத் தண்டனையும் அதனுடன் சேர்த்து 6 மாத கால சிறைத்தண்டனையும் வழங்கி நீதவான் தீர்ப்பளித்துள்ளார். (செ-9)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### என்றும் உண்மையே பேசுங்கள்



✦ எப்பொழுதும் உண்மையே பேச வேண்டும். அப்பொழுதுதான் உண்மையின் ரூபமாகிய இறைவனை காண முடியும். இறைவனிடம் உள்ளப் பூர்வமான பக்தி கொள்ள வேண்டும். அலுவல கத்திலும், வியாபாரத்திலும் உண்மை நெறி தவறக் கூடாது. கபட வேஷத்தையும், ஏமாற்றுவதையும் விட்டுவிட்டு உண்மையே பேசினால் கடவுளைக் காணலாம்.

✦ ஒரு மனிதனுக்குக் கடன் அதிகமாகிவிட்டது, அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக அவன் பைத்தியம் பிடித்தவன் போல் நடிக்க ஆரம்பித்து விட்டான். வைத்தியனால் குணமும் அடையவில்லை. கடைசியில் கெட்டிக்கார வைத்தியன் ஒருவன் உண்மையைத் தெரிந்து கொண்டான். அந்த போலிப் பைத்தியத்தைத் தனியாக அழைத்துச் சென்று "அடேய்! நீ என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறாய்! பைத்தியமாக நடித்துக் கொண்டிருந்தால், உண்மையாகவே உனக்குப் பைத்தியம் பிடித்து விடும். இப்பொழுது உன்னிடம் பைத்தியத்திற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. ஜாக்கிரதையாக இரு!" என்று எச்சரித்தான். இதைக் கேட்ட அந்த மனிதன் பயந்துபோய் பைத்தியமாக நடிப்பதை விட்டுவிட்டான். எவ்வளவுதான் மூடி மறைத்தாலும் உண்மை ஒருநாள் வெளிவந்தே ஆகவேண்டும்.

✦ பொய், அனைத்தையும் விட கெட்டது. பொய் வேஷம் போடுவதும் கெட்டதே. ஒருவன் பொய் பேசுவதில் விருப்பம் கொண்டால், பொய்யின் மேலுள்ள பயம் அவனுக்குப் போய்விடும். வாய்மையே வெல்லும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணம் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு -2015

# திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் முதலிடம்

ஏனைய கழகங்களின் தரவரிசை பட்டியல் பின்வருமாறு.

| இல | கழகங்கள் | புள்ளிகள் | பங்குபற்றியமை.·. வெற்றி |
|---|---|---|---|
| 4 | கே.சீ.சீ.சீ | 37.13 | (07/04) |
| 5 | ஹாட்லியைற்ஸ் | 36.76 | (07/06) |
| 6 | யாழ் பல்கலைக்கழகம் | 34.30 | (08/04) |
| 7 | யாழ். ஜொனியன்ஸ் | 28.76 | (04/03) |
| 8 | சென்றலைட்ஸ் (சொக்ஸ்) | 24.62 | (06/03) |
| 9 | பற்றீசியன்ஸ் | 22.85 | (05/03) |
| 10 | யாழ் சென்றல் | 22.34 | (04/02) |
| 11 | ஓல்ட் கோல்ஸ் | 21.65 | (05/02) |
| 12 | ஸ்ரான்லி | 20.98 | (06/02) |
| 13 | ஸ்கந்தாஸ்ரர் | 18.07 | (04/02) |
| 14 | விக்டோறி | 17.79 | (06/01) |
| 15 | மானிப்பாய் பரீஸ் | 15.32 | (03/02) |
| 16 | சென்றவைட்ஸ் புளுஸ் | 13.97 | (03/02) |
| 17 | நியூஸ்ரார் | 13.25 | (04/01) |
| 18 | டிறிபேக்ஸ்ரார் | 12.60 | (04/01) |
| 19 | கிறஸ்கொப்பர்ஸ் | 11.61 | (03/01) |
| 20 | திருநெல்வேலி YMHA | 10.50 | (04/01) |
| 21 | விங்ஸ் | 9.67 | (02/02) |
| 22 | யூனியன்ஸ் | 8.22 | (02/01) |
| 23 | அரியாலை சென்ரல் | 7.10 | (04/00) |
| 24 | றெயின் போ | 4.81 | (03/00) |
| 25 | யங்ஸ்ரார் | 4.07 | (03/00) |
| 26 | கே.சீ.சீ.சீ 'B' | 1.74 | (01/00) |

கடந்தவருட முடிவுகள் பின்வருமாறு,

| வருடம் | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் |
|---|---|---|---|
| 2010 | யாழ் பல்கலைக்கழகம்<br>44 புள்ளிகள்<br>பங்கு/வெற்றி<br>13 11 | ஜொலிஸ்ரார்ஸ்<br>37 புள்ளிகள்<br>பங்கு/ வெற்றி<br>16 12 | யாழ் சென்றல்<br>28 புள்ளிகள்<br>பங்கு/வெற்றி<br>11 08 |
| 2011 | யாழ் பல்கலைக்கழகம்<br>54 புள்ளிகள்<br>பங்கு/ வெற்றி<br>20 14 | ஜொலிஸ்ரார்ஸ்<br>51.5 புள்ளிகள்<br>பங்கு/ வெற்றி<br>23 16 | கே.சீ.சீ.சீ<br>47 புள்ளிகள்<br>பங்கு/ வெற்றி<br>21 14 |
| 2012 | கே.சீ.சீ.சீ<br>152.3 புள்ளிகள்<br>பங்கு/ வெற்றி/சமநிலை<br>22 22 01 | யாழ். ஜொனியன்ஸ்<br>111.4 புள்ளிகள்<br>பங்கு/வெற்றி<br>23 14 | சென்றலைட்ஸ்<br>93.3 புள்ளி<br>பங்கு/ வெற்றி<br>18 14 |
| 2013 | யாழ் ஜொனியன்ஸ்<br>162.4 புள்ளிகள்<br>பங்கு/வெற்றி<br>32 24 | மானிப்பாய் பரீஸ்<br>124.8 புள்ளிகள்<br>பங்கு/ வெற்றி<br>25 18 | யாழ் சென்றல்<br>106.6<br>பங்கு/வெற்றி<br>23 16 |
| 2014 | சென்றலைட்ஸ்<br>131.4<br>பங்கு/ வெற்றி<br>22 19 | கே.சீ.சீ.சீ<br>127.47 புள்ளிகள்<br>பங்கு/ வெற்றி<br>24 21 | பற்றீசியன்ஸ்<br>85.40<br>பங்கு/ வெற்றி<br>19 11 |



யாழ். சென்றல் விளையாட்டுக்கழகத்தின் ஜோர்ஜ் வெப்ஸர் தரவரிசையில் திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் 53.65 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

யாழ். மாவட்டத்தில் கிரிக்கெட் விளையாடும் கழகங்களை வருடா வருடம் தரவரிசைப்படுத்தும் நடவடிக்கையை சென்றல் விளையாட்டுக்கழகம் மேற்கொள்கின்றது.

50 ஓவர் போட்டியில் வெற்றியீட்டினால் 5 புள்ளிகள், 30 ஓவரில் வெற்றியீட்டினால் 3 புள்ளிகள், இருபது - 20 வெற்றியீட்டினால் 2 புள்ளிகள் இதற்கு வழங்கப்படுகின்றது.

இதனைவிட பெறப்படும் ஒவ்வொரு 10 ஓட்டங்களுக்கு 0.1 புள்ளிகளும், வீழ்த்தப்படும் ஒவ்வொரு விக்கெட்டுக்கும் 0.1 புள்ளிகளும் வழங்கப்படுகின்றன.

அந்த வகையில் திருநெல்வேலி அணி, இந்தாண்டு இது வரையில் பங்குபற்றிய 9 போட்டியில் 8 போட்டிகளில் வெற்றியீட்டி 53.65 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் 11 போட்டிகளில் பங்குபற்றி 7 போட்டிகளில் வெற்றிபெற்று 51.68 புள்ளிகளுடன் 2 ஆம் இடத்திலும், ஸ்ரீகாமாட்சி அணி 8 போட்டிகளில் பங்குபற்றி 5 போட்டிகளில் வெற்றியீட்டி 37.68 புள்ளிகளுடன் 3 ஆம் இடத்திலும் உள்ளன. (க-23)

## மாகாணமட்ட வலைப்பந்தாட்டப்போட்டி தெல்லிப்பழை பி.இளைஞர் சம்பியன்





யு.எஸ்.எயிட் மற்றும் சேவா லங்கா நிறுவனம் இணைந்து நடத்திய மாகாண மட்ட வலைப்பந்துப் போட்டி தொடரில், தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் சம்பியனாகியது.

மீள்குடியேறிய மக்களின் மீள் திறனை கட்டியெழுப்பல் என்னும் செயற்றிட்டத்தின் கீழ், சேவாலங்கா அமைப்பினால் வடக்கில் பல செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக இந்தக் வலைப்பந்து போட்டிகள், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இடம்பெற்ற போட்டிகளின் படி இறுதிப்போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியும் தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியினரும் மோதினர்.

முன்னதாக இடம்பெற்ற முதலாவது அரையிறுதியில் புதுக்குடியிருப்பு அணியை 35:00 என்னும் புள்ளிகள் கணக்கில் வெற்றி கொண்ட சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியில் மன்னார் மாவட்ட அணியை எதிர் கொண்ட தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியினர் 35:25 என்னும் புள்ளிகள் கணக்கில் வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர்.

மிகவும் விறுவிறுப்பாக முதல் பாதி வரை இடம்பெற்ற போட்டியில் இரு அணியினரும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றனர்.

இரண்டாவது பாதியில் ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணியினர் அடுத்தடுத்து தமது புள்ளிகளை அதிகரித்தனர்.

இதனால் போட்டி நிறைவடைகையில் 29:22 என்னும் புள்ளிகள் கணக்கில் முன்னிலை பெற்று வெற்றியீட்டினர்.

இதன் மூலம் யு.எஸ்.எயிட் மற்றும் சேவா லங்கா நிறுவனம் இணைந்து நடத்திய மாகாண மட்ட வலைப்பந்துப் போட்டி தொடரில், தெல்லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் சம்பியனாகியது. (க-23)

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் சம்பியன்

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட இவ்வாண்டிற்கான கரப்பந்தாட்டப் போட்டிக்கான சம்பியனாகினர் சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தினர்.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட இவ்வாண்டிற்கான பெரு விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன.

இடம்பெற்ற போட்டிகளின் இறுதிப் போட்டிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி இளைஞர் கழகமும் சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழகமும் தகுதி பெற்றன.

ஆரம்பம்முதலேபோட்டியைகட்டுக்குள் வைத்திருந்த சண்டிலிப்பாய் மேற்கு இளைஞர் கழக அணியினர் 25:14, 25:10 என்னும் 2:0 நேர்செட்களில் வென்று வலி.தென மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட இவ்வாண்டிற்கான கரப்பந்தாட்டப் போட்டிக்கான சம்பியனாகினர். (க-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாவது பகல்-இரவு டெஸ்ட் போட்டி ஆரம்பம்

20 ஓவர் ஆட்டத்தின் தாக்கத்தால் 5 நாள் நடைபெறும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. குறைந்த அளவு ரசிகர்களே டெஸ்ட் போட்டியை பார்க்கிறார்கள்.

டெஸ்ட் போட்டியை பாதுகாக்கவும், அதில் புதிய பரிணாமத்தை ஏற்படுத்தவும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) திட்டமிட்டது. அதன்படி பகல்-இரவாக டெஸ்டை நடத்த முடிவு செய்தது.

கிரிக்கெட் வரலாற்றில் முதல் முதலாக டெஸ்ட் போட்டி பகல்-இரவாக அவுஸ்திரேலியாவில் உள்ள அடிலெய்ட் மைதானத்தில் நடக்கிறது. நவம்பர் 27-ந் திகதி முதல் டிசம்பர் 1-ந்திகதி வரை இந்த டெஸ்ட் நடக்கிறது.


இதில் அவுஸ்திரேலியா- நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன. இந்த பகல்-இரவு டெஸ்டில் இளம் சிவப்பு பந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

நவம்பர்-டிசம்பர் மாதங்களில் நியூசிலாந்து அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்டில் விளையாடுகிறது.

முதல் டெஸ்ட் நவம்பர் 5-9-ந் திகதி வரை பிரிஸ்பேனிலும், 2-வது டெஸ்ட் (நவம்பர் 13-17-ந் திகதி வரை) பேர்த்திலும் நடக்கிறது. இதன் 3-வது டெஸ்ட் மட்டும் தான் பகல்-இரவாக நடக்கிறது. (க)

# இந்திய வீரர்களுக்கு - அரை மொட்டை -

## வங்க விளம்பரத்தால் வெடிக்கும் சர்ச்சை




இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு அரை மொட்டை அடித்து வங்க தேச பத்திரிகை சர்ச்சைக்குரிய விளம்பரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

வங்கதேச சுற்றுப்பயணம் செய்த இந்திய அணி, வங்கதேச அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் பறிகொடுத்தது. இதனால் முதன் முறையாக வங்கதேசம் ஒருநாள் தொடரை கைப்பற்றியது.

இதைத் தொடர்ந்து 'புரோதோம் ஆலோ' என்ற வங்கதேசத்தை சேர்ந்த வாரநையாண்டி பத்திரிகை இந்திய வீரர்களை அவமானப் படுத்தும் விதமாக சர்ச்சைக்குரிய விளம்பரம் ஒன்றை தயாரித்து வெளியிட்டுள்ளது.

பத்திரிகையில் இடம்பெற்று உள்ள புகைப்படத்தில் இந்திய கிரிக்கெட் வீரர்கள் ரஹானே, ரோஹித் சர்மா, விராட் கோலி, ரவிந்திர ஜடேஜா, எம்.எஸ். தோனி, ஷிகர் தவான் மற்றும் அஸ்வின் ஆகியோர் அரை மொட்டை தோற்றத்துடன் உள்ளனர்.


மேலும், "நாங்கள் பயன்படுத்தி விட்டோம்... நீங்களும் பயன் படுத்த முடியும்," என்று பேனரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் அந்த பேனரில் இந்திய அணிக்கு எதிராக அசத்திய வங்கதேச கிரிக்கெட் வீரர் முஸ்தாபிஜுர் கத்தியுடன் உள்ள புகைப் படமும் இடம்பெற்று உள்ளது.

முஸ்தாபிஜுர் இந்திய வீரர்களின் அரைதலையில் இருந்த முடியை நீக்கிவிட்டார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சர்ச்சைக்குரிய விளம்பரத்தால் சமூகவலைதளங்களில் இரு நாட்டு ரசிகர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. (க)

# உலகிலேயே அதிகம் சம்பாதிக்கும் பிரபலங்கள் பட்டியலில் தோனி



உலகிலேயே அதிகம் சம்பாதிக்கும் 100 பேர்களின் பட்டியலை போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் 38 இசைக் கலைஞர்கள், 29 விளையாட்டு வீரர்கள், 19 நடிகர்கள், 6 பிரமுகர்கள், 3 வானொலி நட்சத்திரங்கள், 2 நகைச்சுவை நடிகர்கள், 1 சமையல் கலைஞர், 1 எழுத்தாளர் மற்றும் மொடல் ஆகியோர் இடம் பிடித்து உள்ளனர்.

இதில் அமெரிக்கக் குத்துச் சண்டை வீரர் பிலாய்ட் மேவெதர் முதலிடம் பிடித்துள்ளார், இவரின் ஆண்டு வருமானம் 300 மில்லியன் டொலர்கள்.

இவருக்கு அடுத்த இடத்தை இவரின் சக குத்துச்சண்டை வீரர் மெனி பாக்குவோ 160 மில்லியன் டொலர்களுடன் பிடித்துள்ளார்.

முதல்முறையாக போர்ப்ஸ் பத்திரிகை இந்த வருடம் நடிகர்களையும் இந்தப் பட்டியலில் இணைத்துள்ளது.

அதன்படி பிரபல பாலிவுட் பிரபலங்களான அமிதாப் பச்சன், சல்மான் கான், அக்சய் குமார் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். இவர்கள் ஹாலிவுட் பிரபலங்களையே ஓரங்கட்டிவிட்டனர்.

அமிதாப் பச்சன், சல்மான் கான் 33.5 மில்லியன் டொலர்களுடன் 71வது இடத்தில் இருக்கின்றனர். அக்சய் குமார் 32.5 மில்லியன் டொலர்களுடன் 76 வது இடத்தில் உள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனிக்கு 82வது இடம் கிடைத்துள்ளது. இவரின் ஆண்டு வருமானம் 31 மில்லியன் டொலர்களாகும்.

# 36 இராஜதந்திரிகள்...

பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர கற்கைநெறிகள் நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்டத்தில் தற்போதுள்ள கள நிலைவரங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிந்து கொள்வதற்காக இந்த வருகையை மேற்கொண்டிருந்த இவர்கள் வலிகாமம் கிழக்கில் மீள்குடியேற்றப்பட்ட பகுதிகள், சபாபதிப்பிள்ளை நலன்புரிமுகாம், அரியாலையில் அமைந்துள்ள இந்தியன் வீட்டுத் திட்டம், யாழ். புகையிரத நிலையம் ஆகியவற்றை நேரில் சென்று பார்வையிட்டதுடன்,

யாழ்ஆயர் இல்லத்தில் மதத் தலைவர்களுடனும் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான குழுவுடன் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து வட மாகாண ஆளுநர், வடக்கு மாகாண சபை அமைச்சர்கள், யாழ்மாவட்டத்தில் உள்ள பத்திரிகைஆசிரியர்கள், யாழ்ப்பாண வணிகர் கழகம் மற்றும் யாழ்ப்பாண கைத்தொழில் மன்றம் ஆகியவற்றுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர்.

இக்கலந்துரையாடல்களில் யாழ் மாவட்டத்தில்உள்ள மக்களின் வாழ்வாதாரம், வேலை வாய்ப்புக்கள், மூவினமக்களின் ஒற்றுமை, தற்போதுள்ள நிலைவரங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

1 பஹ்ரைன்
2 பங்களாதேஷ்
3 கனடா
4 இந்தியா
5 இந்தோனேஷியா
6 ஈரான்
7 ஜோர்டான்
8 இஸ்ரேல்
9 கொரியா
10 குவைத்
11 லெபனான்
12 நெதர்லாந்து
13, ஓமான்
14 பிலிப்பைன்ஸ்
15 சுவீடன்
16 தாய்லாந்து
17 வியட்நாம்
18 ஆப்கானிஸ்தான்
19 அவுஸ்திரேலியா
20 பிரேசில்
21 பிரான்ஸ்
22 இத்தாலி
23 ஜப்பான்
24 மியான்மார்
25 பாகிஸ்தான்
26 பாலஸ்தீனம்
27 கட்டார்
28 ரஷ்யா
29 சவுதி அரேபியா
30 சீசெல்ஸ்
31 சிங்கப்பூர்
32 தென்னாபிரிக்கா
33 ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

ஆகிய 33 வெளிநாடுகளுக்கு இலங்கைக்கான தூதுவர்களாக நியமிக்கப்பட்டவர்களும் ஏற்கெனவே வெளிநாடுகளில் துணைத் தூதுவர்களாகப் பணியாற்றி தூதுவர்களாக வேறு நாடுகளுக்கு இடம மாறிச் செல்ல இருப்பவர்களும் இவ்வாறு யாழிற்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்தனர். (செ-9)

# பாடசாலை அதி...

ளது.

அதிபர் தரத்திற்கு ஏற்பவும் பாடசாலை வகைகளுக்கு அமையவும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை இடமாற்றம் வழங்கப்பட்ட சில அதிபர்களுக்கு இன்னும் பாடசாலைகள் வழங்கப் படவில்லை என்றும் தெரியவருகிறது. (ந)

# மகிந்த இன்று...

யிலிருந்து இலட்சக்கணக்கான மக்களின் பங்களிப்புடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாகனத் தொடரணியாக மகிந்தவை பார்க்கச் செல்ல உள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமைதியாக இருந்தது போதும் நாடு படுகுழியில் செல்வதனை தடுக்க பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என மக்கள் பிரதிநிதிகள் மகிந்த ராஜபக்ஷவிடம் இன்று கோரிக்கை விடுக்க உள்ளனர்.

பொதுத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து பெரும்பாலும் இன்று மகிந்த தீர்க்கமான முடிவினை அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (செ-11)

# சுதந்திரக்...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக அங்கீகரிக்கவோ, அறிவிக்கவோ இல்லை எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)




றோட்டரி கழகத்தின் 2014/15ம் ஆண்டுக்கான விருது வழங்கும் நிகழ்வில் இலங்கையின் முதலாவது றோட்டரி கழகத்துக்கான விருதினை நல்லூர் றோட்டரி கழகம் பெற்றுக் கொண்டது. இவ்விருது வழங்கும் நிகழ்வு நேற்று கொழும்பு கிங்ஸ் பெரி விடுதியில் நடைபெற்றது.

விருதினை றோட்டரி மாவட்ட அளுநர் கௌரிராஜன், நல்லூர் றோட்டரி கழகத் தலைவர் ரி.ரவினதாஸிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# தேர்தல் சட்ட...

அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்டமா அதிபரின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

19ம் திருத்தச் சட்டத்தில் இவ்வாறு தேர்தல் சட்டங்களை மீறும் அரச அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க எனக்கு அதிகாரம் உண்டு.

வேட்பு மனு தாக்கல் செய்யப் படும் ஜுலை மாதம் 6ம் திகதி முதல் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட முடியாது.

மேலும் உயர்தரப் பரீட்சை நடைபெறும் பாடசாலைகளில் வாக்குகள் எண்ணப்பட மாட்டாது என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

தேர்தல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்தத் தகவல்களை தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கம் தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படுவதாக எதிர்க் கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

தேர்தல் சட்டங்களை மீறி நியமனங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும், அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்பிரச்...

வர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், நாட்டின் அரசியல் களம் சூடுபிடிக்க தொடங்கியுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விவகாரத்தில் ஆட்சிக்கு வரும் எந்த அரசாங்கமும் இனிமேலும் காலத்தைக் கடத்த முடியாது. புதிய நாடாளுமன்றம் அமைக்கப்பட்ட பின்னர், தமிழ் மக்களுககான அரசியல் தீர்வை விரைவில் வழங்குவதற்குரிய முயற்சிகளை அந்த அரசாங்கம் எடுக்க வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமாயின், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய எமது ஆதரவும், சிறுபான்மை கட்சிகளின் உதவியும் நிச்சயம் தேவையாக இருக்கும். இந்த அரசியல் சூழ்நிலை தோன்றுமாயின் எமது எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில் ஆதரவு வழங்க நாம் தயாராகவுள்ளோம்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பிலான தமது நிலைப்பாட்டை தேசியக்கட்சிகள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விவகாரத்தில் நாம் இனியும் பொறுமைகாக்க முடியாது.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்பது தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய அதிகார வலு கொண்டதாக இருக்க வேண்டும்.

இதை பெரும்பான்மை மக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். வேண்டுமாயின் இது தொடர்பில் ஒரு கருத்து வாக்கெடுப்பை நடத்திப்பார்த்து முடிவுக்கு வரமுடியும்.

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தர்வை ஒளிவு மறைவின் ஊடாக காண முடியாது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே தான் நாடாளுமன்ற தேர்தல் முடிவடைந்த பின்னர் ஆட்சி அமைக்கவுள்ள கட்சிகள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறோம். இந்த முயற்சிக்கு சர்வதேச சமூகமும் முழுவளவிலான உதவிகளை வழங்குவார்கள் என நம்பலாம்.

நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள புதிய அரசியல் சூழலில் எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வொன்றை தமிழ் மக்களுக்கு வழங்க முடியுமென்று நாம் நம்புகின்றோம். இன்றைய அரசியல் சூழ்நிலையை நோக்கும் போது, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு சம்பந்தமாக சிந்திக்கக் கூடிய சக்திகள் மூன்றில் இரண்டு பெரும பான்மையை பெறக் கூடியவாய்ப்புண்டு.

அதனை அடைவதற்கு சில சமயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய சிறுபான்மை கட்சிகளுடைய ஆதரவு தேவையாக இருக்கலாம். அந்த நிலைமை உருவாகுமென்றே நான் நம்புகின்றேன். இந்த எதிர்பார்ப்பின் அடிப்படையில் தான் நாங்கள் எமது திட்டங்களை வகுத்துக் கொண்டிருக்கின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் விரைவில் வெளியிடப்படவுள்ள தேர்தல் அறிக்கையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு சம்பந்தமாக விரிவாக எடுத்துரைப்போம். சுருக்கமாக சொல்வதாக இருந்தால் தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான இனம். எமக்கென மொழி, கலை, கலாசாரம் உண்டு.

அதன் அடிப்படையில் ஒருமித்த நாட்டுக்குள் மேற்குறிப்பிட்ட விடயங்களைப் பேணிப் பாதுகாத்து தனிப்பட்ட இனம் என்ற அடிப்படையில் சமத்துவமாக வாழ்வதற்கு எமக்கு உரிமையுண்டு. அது எமது பிறப்புரிமை. எனவே தமிழ் மககள் தமது அரசியல் அபிலாசைகளை அடைவதற்கு ஒருமித்த தீர்வு வழங்கப்பட வேண்டும்.

அது பகிர்ந்தளிக்கப்படும் இறைமையின் அடிப்படையில் கூடிய அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டும். பிராந்தியம் ஒன்றுக்கு வழங்கப்பட வேண்டிய சகல அதிகாரங்களும் அந்த பிராந்தியத்துக்கு வழங்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் தமது முடிவுகளே ஜனநாயக ரீதியாக நிறைவேற்றக் கூடிய வல்லமை உருவாகவேண்டும்.

இவ்வகை அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதியுதவிகளுக்கு மேலாக வளங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

உள்நாட்டு, வெளிநாட்டு கடன்களை பெறும் வாய்ப்பும் உருவாக்கிக் கொடுக்கப்பட வேண்டும். இவையெல்லாம் உள்ளடங்கிய நல்லதொரு அரசியல் தீர்வின் மூலமே நாட்டில் நல்லாட்சியை உருவாக்க முடியும்.

இவ்வாறு அரசாங்கத்தால தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் தீர்வு பெரும்பான்மை சமூகமும் சிறுபான்மை சமூகமான தமிழ், முஸ்லிம் மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்குக் கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் போட்டியிடுவதற்கான ஏற்பாடுகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றது. தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடவுள்ளது.

ஆசன ஒதுக்கீடுகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கிடையே பல சுற்றுப் பேச்சுகள் நடைபெற்று வருகின்றது.

இது தொடர்பில் எல்லோரும் ஏறறுக்கொள்ளக்கூடிய வகையில் சுமுகமான முடிவு விரைவில் காணப்படும் என்று சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (செ-11)

## பொதுத்தேர்...

2010 ஆம் ஆண்டு 10 உறுப்பினர்கள் தெரிவாகியிருந்த இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து இம்முறை 11 பேரும் 7 உறுப்பினர்கள் தெரிவாகியிருந்த நுவரெலியா மாவட்டத்திலிருந்து 8 பேரும் தெரிவாகும் வகையில் இந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

ஆண்டுதோறும் தேர்தல் வாக்காளர் பதிவேடு தேர்தல்கள் ஆணையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மாவட்ட ரீதியான. வாக்காளர் எண்ணிக்கையைக்கொண்டு தேர்தல்கள் ஆணையாளரால் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படுவதாக தேர்தல்கள் செயலக கூறுகின்றது.

2014ஆம் ஆண்டு வாக்காளர் பதிவேட்டின் அடிப்படையிலேயே இந்த கணிப்பீடு அமைவதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.ஏ.மொஹமட் தெரிவித்திருக்கிறார். (செ-11)


ALL OUT
Pest Control Service

கறையான் தொல்லையா?
உங்கள் கட்டங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்து கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்.



தொடர்புகளுக்கு : ந.ரூபகாந்த்
077 151 5897, 021 499 3200
(993)

பதவிக்கான தேடல்...

சர்வதேச ரீதியில் இயங்கி வரும் எமது Canadian நிறுவனத்திற்கான புதிய கிளைகள் ஆரம்பமாக உள்ளன. (மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு) இவ் இடங்களில் பணி ஆற்றுவதற்கு பணியாளர்கள் தேவையாக உள்ளனர்.

- O/L, A/L முடித்தவர்கள் தொடர்பு கொள்ளவும்
- O/L இல்லாதவர்களுக்கான விசேட பதவி வாய்ப்புக்களும் உள்ளன

(C-1441) தொடர்புகளுக்கு : 077 188 2507

வேலைவாய்ப்பு

யாழில் 06 கிளைகளைக் கொண்டிருக்கும் சர்வதேச நிறுவனத்துக்கு துடிப்பும், ஆர்வமும், தன்னம்பிக்கையும் மிக்க இளைஞர், யுவதிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துமுகமாக பயிற்சி வகுப்புக்கள் நடைமுறைப்படுத்துகின்றது.



(C-1432)

- Medical, EPF, ETF வசதிகள் செய்து தரப்படும்
- அனுபவம் பயிற்சியின் மூலம் வழங்கப்படும்
- வெளிநாட்டுப் பிரயாணங்கள் மேற்கொள்ளலாம்.
- உணவு & தங்குமிட வசதிகள் உண்டு.
- பயிற்சியின் போது 10,000/= - 15,000/=

இன்றே அழையுங்கள் :- 0775566226 / 0771363797

கடந்த கால யுத்த வன்செயல்களில் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் அங்கஜன் இராமநாதன் அழைப்பு



கடந்தகால யுத்த வன்செயல்களில் பாதிக்கப்பட்ட சகல மக்களையும் உடனடியாக தனது இல.80, கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி காரியாலயத்தில் சந்தித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளரும் வட மாகாணசபை உறுப்பினருமாகிய திரு.அங்கஜன் இராமநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.
(992)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




(C-1446)

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

SEMINAR (கருத்தரங்கு)
B.B.A (MANAGEMENT)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் (ஒலுவில்) வெளிவாரி

மேற்படி கற்கைநெறியினை வட மாகாணத்தில் மேற்கொள்வதற்கு பல்கலைக்கழகத்தின் அனுமதி பெற்ற ஒரே நிறுவனமான புதிய உயர் கல்லூரியில் மாணவர்களின் பதிவினை மேற்கொள்வது, பதிவுக் கட்டணம், பரீட்சை தொடர்பாகவும் மேற்படி பல்கலைக்கழக வெளிவாரி பீடாதிபதியினால் விளக்கமளிக்கப்படவுள்ளது. பதிவினை மேற்கொண்டவர்களும், பதிவினை மேற்கொள்ள இருப்பவரும் இக்கருத்தரங்கில் பங்குபற்றி உங்கள் பதிவுகள், பரீட்சைகள் சம்பந்தமான கேள்விகளுக்கு பதிலை பெற்றுக்கொள்ளலாம் அனைவரும் இக்கருத்தரங்கில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

காலம்: 04/07/2015, 05/07/2015 காலை 9 மணி
இடம்: புதிய உயர் கல்லூரி மண்டபம்

முக்கிய கவனிப்பு : BA பேராதனை இறுதியாண்டு புவியியல் பாடத்துக்கான கருத்தரங்கு $4^{th}$, $5^{th}$ திகதிகளில் காலை 9 மணிக்கு நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

(C-1457)
தொலைபேசி இல : 021 222 8148
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வாடகைக்கு

நல்லூரில் வீட்டின் பகுதி முற்றிலும் பிரத்தியேகமானது வாடகைக்கு உண்டு. உத்தியோகத்தர்கள் மாத்திரம். முற்பணம் எதிர்பார்க்கப்படும்.

(994) தொடர்பு :- 0785210573

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

Spoken English with Grammar - Quick Learning Course 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன் கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.

இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

Diploma In English 2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
★ எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
★ Excellent Teacher's Panel & Individual Attention
★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

(C-1426)

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள்
20.06.2015 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது

01.07.2015 Batches Starts On 08.07.2015
04.07.2015 06.07.2015 10.07.2015

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road),
Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550
HotLine(S)
0777585913, 0777222422
0776555677


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.